Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 121 | ஞாயிற்றுக்கிழமை 27 மார்ச் 2022 | பங்குனி 13 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 + 12 | விலை: 40/=

## மின்உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள்

கொழும்பு, மார்ச் 27
கெரவலப்பிட்டி உள்ளிட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கு சுமார் 9 ஆயிரம் மெற்றிக் தொன் எரி பொருள் 16

## ஏறுகிறது தங்கம்!

கொழும்பு, மார்ச் 27
நாட்டில் தங்கத்தின் விலை நேற்றும் 7 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து ஒரு லட்சத்து 77 ஆயிரம் ரூபா என வரலாற்றில் முதல் தடவையாக புதிய உச்சத்தை தொட்டுள்ளது. (அ-ஒ-இ)

## ஜெய் சங்கர் வருவது உறுதி

கொழும்பு, மார்ச் 27
இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இம்மாதம் இலங்கைக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொள்ள 14

பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## விலையை ஏற்றாதாம்!

கொழும்பு, மார்ச் 27
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தால் மீளவும் பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டமைபிரச்சினைக்குரியதாகும் என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொகுகே 14

## 2 பத்திரிகைகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 27
உபாலி நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம் தங்களுடைய 15

## வாகனத்தால் மோதி நபரைக் கொல்லச் சதி?

கிளிநொச்சியில் நேற்று பயங்கரம்

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் நபர் ஒருவரை கும்பல் ஒன்று வாகனத்தால் மோதி கொலை செய்ய முயன்ற நிலையில் பாதிக்கப்பட்டவர் ஆபத்தான 15

## எரிபொருள், எரிவாயு கப்பல்கள் வருகை

கொழும்பு, மார்ச் 27
37 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் எரிபொருள் தாங்கிய கப்பல் நாளை நாட்டை வந்தடையவுள்ளது. அதேய எவு எரிபொருள் தாங்கிய மற்று 15

## வரிகளை அதிகரியுங்கள்!

நாணய நிதியத்தின் அறிக்கை பகிரங்கமாக வெளியானது

கொழும்பு, மார்ச் 27
வரிகளை அதிகரிப்பது உட்பட பல்வேறு பரிந்துரைகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை வெளியாகியுள்ளது. நாட்டின் பொருளாதார 15

# அழிக்கப்பட்ட புலிகளை வைத்து எவ்வளவு காலம் அரசியல் செய்வீர்கள்?



★ கம்மன்பிலவும் விமலும் இனவாதிகள் அவர்களாலேயே அரசுக்கும் அவப்பெயராம்

★ பஸிலுக்கு வந்த சுடலைஞானம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
அழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை முன்வைத்து, இன்னமும் எவ்வளவு காலத்துக்கு அரசியலை முன்னெடுக்கப்போகின்றீர்கள்? என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். அவர்களை இனவாதிகள் என்றும் சாடியுள்ளார். 15

மீண்டும் பேச்சுக்கு செல்வதாயின்

## அரசின் சொகுசு வீட்டை உதற வேண்டும் சம்பந்தன்

சொல்கிறார் சிறீகாந்தா

யாழ்., மார்ச் 27
அடுத்தகட்டப்பேச்சுஎன்பது நடக்குமாக இருந்தால், எதிர்க்கட்சித்தலைவராக பதவி வகித்த போது உத்தியோகபூர்வமாக தனக்கு வழங்கப்பட்ட, இப்பொழுதும் அரசின் தயவில் தான் தொடர்ந்து 15

## யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் எரிவாயு விநியோக கறுப்புச் சந்தையா?

மாவட்டச் செயலரையும் உதாசீனம் செய்யும் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27
பிரதேசசெயலகங்களில் வைத்து எரிவாயு விநியோகத்தை முன்னெடுக்க வேண்டாம் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவுறுத்திய பின்னரும் சில பிரதேச செயலகங்களில் வைத்து எரிவாயு விநியோகம் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் எரிவாயு விநியோக 13

## படைத்தரப்பின் தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

ஏப்ரல் 3 ஆம் திகதி யாழ்ப்பணத்தில்

யாழ்., மார்ச் 27
காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் கண்டனப் 13

## ரெலோ இரட்டைவேடம்

அம்பலப்படுத்துகிறார் கஜேந்திரகுமார்

யாழ்., மார்ச் 27
'13'ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்ற ... டனான சந்திப்பை ஏன் புறக்கணித்தது என்பது கேள்விக்குறியே என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை... 16

Ambassador Julie Chung @USAmbSL · 17h
The United States welcomes today's meeting between @GotabayaR and Tamil political representatives and encourages continued dialogue. The U.S. is committed to the prosperity and security of all Sri Lankans.

## அரசு - கூட்டமைப்பு பேச்சு தொடர வேண்டும்

அமெரிக்காவின் விருப்பம் இது

கொழும்பு, மார்ச் 27
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 19.01.1977

இறப்பு 18.03.2022

## திருமதி கிருஷாந்தினி பத்மசோதி

(பொறியியலாளர் - மொறட்டுவ பல்கலைக்கழகம் - இலங்கை)

யாழ் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பிரித்தானியா லண்டன் Harrow யை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஷாந்தினி பத்மசோதி அவர்கள் கடந்த (18.03.2022) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கனகம்மா மற்றும் துரையப்பா, தங்கம்மா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், பரம்சோதி காந்திமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மசோதி அவர்களின் அன்பு மனைவியும், சுஜானன், கிஷானன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உஷாநந்தினி (சுவிஸ்), சைலஜா (யாழ். பிரதேச செயலகம்) ஆகியோரின் ஆருயிர் சகோதரியும், நந்தகுமார் (சுவிஸ்); கேதீசன் (வடபிராந்திய போக்குவரத்து சபை), சசிகாந் (லண்டன்), ஜெயந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மௌனிக்கா, வெரோனிக்கா ஆகியோரின் சிறிய தாயாரும், துஷானன், அஷானிக்கா, லக்ஷா, அவனிக்சா, கிசோக், பிரிக்சா ஆகியோரின் பெரிய தாயாரும், லக்சுமிகாந்தன், பத்மாவதி, யோகேஸ்வரி, ஆகியோரின் பெறா மகளும், கமலாதேவியின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28-03-2022) திங்கட் கிழமை பிற்பகல் 03:00 மணியளவில் 209, kenton Rd, Harrow HA3 GHD, UK இல் நடைபெற்று Holders Hill Rd, London இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 115,
இராஜவீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077831 3640, 077 480 2952

(CS 19022) (3/6)

# பொருள்களின் விலையேற்றம்: யாழில் கண்டனப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், யாழ். நகரில் நேற்று கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக சுமார் ஒரு மணித்தியாலம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'எம் தேசத்தை அங்கீகரித்தால் உன் தேசமும் வளம் பெறும், அன்று ஆயுதத்தால் அழித்தாய் இன்று பட்டினியால் அழிக்கின்றாய், சுயாட்சி இருந்தால் மட்டுமே தமிழரின் பொருளாதாரத்தை நாம் மேம்படுத்தமுடியும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால் தமிழர் தேசத்தை அங்கீகரி, ஆசியாவின் அதிசயமே பெற்றோல் இல்லை டீசல் இல்லை பால்மா இல்லை, இனவாதம் மதவாதத்தால் பொருளாதாரத்தை அழிக்காதே' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியும் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் மற்றும் கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-4-26-27)



# அதிகரித்தது அரிசி விலை

கொழும்பு, மார்ச் 27

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், இந்த வாரம் அரிசி விலை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைவாக அனைத்து வகையான உள்ளூர் அரிசி வகைகளின் விலையும் 3 ரூபா முதல் 13 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில் அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளின் விலை 9 ரூபா முதல் 18 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில் அதிகரித்துள்ளது.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையால் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் அரிசி விநியோகம் வீழ்ச்சியடைந்துள்ளமையும் இதற்குக் காரணமாகும் என்று ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் தெரிவித்துள்ளது. (ம-4-இ)

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் டெங்கு அதிகரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 27

யாழ். மாவட்டத்தில் மீண்டும் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வாரம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட மூவர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். எனவே டெங்கின் தாக்கம் அதிகரிக்காமல் தடுக்க ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தமது குடியிருப்புக்கள் மற்றும் காணிகளை துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை பிரதேசத்தில் முன்னெடுத்துள்ளனர். (ம-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் பல்கலைக் கழகம் அமெரிக்கா

## பட்டமளிப்பு விழா




கொனிக்கா கலர் லாப் மற்றும்
சிறிராம் ஜீவல்லர்ஸ் உரிமையாளரும்
தாயக அறக்கொடை நிறுவனத்தின்
நிர்வாகியும்

# திரு.S.V.சிறிதரன்

அவர்கள் நேற்று 26.03.2022 கொழும்பிலுள்ள தாஜ்சமுத்ரா ஹோட்டலில்
அமெரிக்காவின் உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தினால்
நடத்தப்பட்ட பட்டம் வழங்கும் விழாவில்

## "சமூக சேவைக்கான கலாநிதி"

(Doctor of Social Service)

பட்டத்தை பெற்றமைக்கு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்
கொனிக்கா கலர் லாப் மற்றும் சிறிராம் ஜீவல்லர்ஸ்
ஊழியர்கள்

# உலகத் தமிழ் பல்கலைக் கழகம் அமெரிக்கா



## பட்டமளிப்பு விழா

கொனிக்கா கலர் லாப் மற்றும் சிறிராம் ஜீவல்லர்ஸ் உரிமையாளரும்
தாயக அறக்கொடை நிறுவனத்தின் நிர்வாகியும்

# திரு.S.V.சிறிதரன்

அவர்கள் நேற்று 26.03.2022 கொழும்பிலுள்ள
தாஜ்சமுத்ரா ஹோட்டலில்
அமெரிக்காவின் உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தினால்
நடத்தப்பட்ட பட்டம் வழங்கும் விழாவில்

## "சமூக சேவைக்கான கலாநிதி" (Doctor of Social Service)

தருணமதில் தோள் கொடுக்கும்
தயாளகுணக் குன்றே வாழி!
உலகத்தமிழ்ப் பல்கலையின்
உயர் விருது பெற்றாய் வாழி
எம்மவர்க்குப் பெருமை சேர்த்த
ஏந்தலே வாழி
சமூக சேவைக் கலாநிதி
சிறீதரனே வாழி வாழி...

பட்டத்தை பெற்றமைக்கு
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்
மங்களா தளபாட காட்சியறை மற்றும்
மல்றோ தளபாட உற்பத்தி நிலையம்
உரிமையாளரும், ஊழியர்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRI LANKA TECHNOLOGICAL CAMPUS
Non scholae sed vitae discimus

# ශ්‍රී ලංකා තාක්ෂණික විශ්වවිද්‍යාලය
# இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
# SRI LANKA TECHNOLOGICAL CAMPUS

## 2022 වර්ෂය සඳහා නවක සිසුන් ලියාපදිංචිය
## 2022 ஆம் ஆண்டிற்கான மாணவர் பதிவு
## 2022 INTAKE STUDENT REGISTRATION

### School of Engineering
ඉංජිනේරු පීඨය
பொறியியல் கற்கைபீடம்

**BSc (Hons) Eng.**
- Electronics and Power Systems
- Electronics and Telecommunication
- Electronics and Engineering Management
- Information and Communication Engineering (Software Engineering)
- Civil Engineering
- Mechatronics Engineering

**Eligibility Criteria :** A/L minimum of 3 S passes in Physical Science Stream (*ICT or Higher Maths in place of Chemistry applicable)
- A minimum of 2C 1S (National) or 2B 1C (International) required for IESL recognition.

### School of Technology
තාක්ෂණ පීඨය
தொழில்நுட்பம் கற்கைபீடம்

**BTech (Hons)**
- Electronics
- Agricultural Technology
- Environmental Technology

**BSc Textile Technology**
- Textile and Clothing Technology†
- Fashion Merchandise Management†

**Eligibility Criteria :** A/L minimum of 3 S passes in Physical Science/ ICT/ Biological Science/ Technology Streams

### School of Music
සංගීත පීඨය
சங்கீதம் கற்கைபீடம்

Bachelor of Music (Hons)
**Eligibility Criteria :** Passed A/Ls in any stream

### Business School
ව්‍යාපාර පීඨය
முகாமைத்துவம் கற்கைபீடம்

**BBM (Hons)**
- Accounting and Finance
- Human Resource Management
- Marketing Management
- Operations Management
- Supply Chain Management

**BSc (Hons)**
- E-Tourism and Digital Marketing

**Eligibility Criteria :** Passed A/Ls in any stream

### School of Science
විද්‍යා පීඨය
விஞ்ஞான கற்கைபீடம்

BSc (Hons) in Bio Systems Engineering
**Eligibility Criteria :** A/L minimum of 3 S passes in Physical Science Stream (Biological Science Stream applicable)

### School of Computing & IT
පරිගණක සහ තොරතුරු තාක්ෂණ පීඨය
கணனியியல், தகவல் தொழில்நுட்பம் கற்கைபீடம்

**BSc (Hons)**
- Software Engineering
- Cloud Computing
- Cyber Security
- Data Science

**Bachelor of**
- Applied Information Technology† (BAIT)

**Eligibility Criteria :** Passed A/Ls in any stream

Scan the QR code to Apply Online

---

මුලකුරු සමඟ නම | பெயர் (முதல் எழுத்துடன்) | Name with Initials :

ඔබ හැදෑරීමට කැමති පාඨමාලාව | உங்கள் விருப்பமான பாடத்திட்டம் | Your Preferd Programme :

ස්ත්‍රී පුරුෂ භාවය | பால் | Gender : උපන්දිනය | பிறந்த திகதி | Date of Birth :

ජාතික හැඳුනුම්පත් අංකය | தேசிய அடையாள அட்டை இல | NIC No : පළාත | மாகாணம் | Province :

ලිපිනය | முகவரி | Postal Address :

දුරකථන | தொலைபேசி இல | Telephone - නිවස | நிரந்தர இல | Home : ජංගම | கைத்தொலைபேசி | Mobile :

විද්‍යුත් තැපෑල | மின்னஞ்சல் முகவரி | Email :

අ.පො.ස. උසස් පෙළ වසර | க.பொ.த உயர் தர (வருடம்) | GCE A/L Year :

විභාග අංකය | சுட்டெண் | Index Number :

Z අගය | Z பெறுபேறு | Z-score :

පාසල | பாடசாலை | School :

මාධ්‍යය | மொழி மூலம் | Medium :

අ.පො.ස. උසස් පෙළ ප්‍රතිඵල | க.பொ.த உயர் தர | GCE A/L Results
අපේක්ෂිත ප්‍රතිඵල සමඟ අයදුම් කරන්න

| විෂය \| பாடம் \| Subject | ශ්‍රේණිය \| பெறுபேறு \| Grade |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. ඉංග්‍රීසි \| பொது ஆங்கிலம் \| General English | |
| 5. සාමාන්‍ය පොදු පරීක්ෂණය \| பொது அறிவு \| Common General Paper | |

I do hereby certify that the particulars furnished by me in this application are true and correct and I am prepared to abide by the rules and regulations governing the registration of the Sri Lanka Technological Campus. In case the information presented here is found to be incorrect, I agree that the Sri Lanka Technological Campus has the right to cancel my registration at any time.

අයදුම්කරුගේ අත්සන | விண்ணப்பதாரியின் கையொப்பம் | Applicant Signature

SLTC RESEARCH UNIVERSITY | SRI LANKA TECHNOLOGICAL CAMPUS
ශ්‍රී ලංකා තාක්ෂණික විශ්වවිද්‍යාලය
இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

APPROVED — Ministry of Education | RECOGNIZED — University Grants Commission (UGC) | RESEARCH ORIENTED — ORIS | FACULTY PAR EXCELLENCE | ON CAMPUS ACCOMMODATION — Hub | YOUTH EXCELLENCE SCHOLARSHIP — ENTECH | ANY DAY | ANY TIME — 24x7 OPEN | TECHNOLOGY ENABLED ACTIVE LEARNING — TEAL

*Sri Lanka Technological Campus is a registered trademark of SLT Campus (Pvt) Ltd

Sri Lanka Technological Campus in partnership with RMIT University Australia/Vietnam, Lancaster University UK, Deakin University Australia and Lincoln University & Auckland University New Zealand for collaborative degree programmes.

SRI LANKA TECHNOLOGICAL CAMPUS, Ingiriya Road, Padukka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 09 - 1931



இறப்பு 25 - 03 - 2022

## சின்னச்சாமி (சிற்பாசாரி) புவனேஸ்வரி (பூசம்மா)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கற்குளி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சின்னச்சாமி புவனேஸ்வரி நேற்று முன்தினம் (25.03.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னச்சாமி (சிற்பாசாரி) அவர்களின் அன்பு மனைவியாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (பாலா), கமலாதேவி, கனகரட்ணம் (லண்டன்), காலஞ்சென்ற குணரத்தினம் (குணம் - சிற்பாசாரி), தவம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோன்மணி, வேல்நாதன், அமுதாதேவி (லண்டன்), பரமேஸ்வரி, ஜெகதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரஞ்சனா (லண்டன்), நிரஞ்சன் (சிற்பாசாரி), அனுசா (லண்டன்), தேவிகா (கனடா), டயஸ்மாறன் (பொலிஸ் அதிகாரி - யாழ்ப்பாணம்) அர்ச்சனா, சுகனியா, மதனறூபி (லண்டன்), கௌசிகா (லண்டன்), டினேஸ் (லண்டன்), சுபாஜினி, சுபத்திரா, சுதர்சன், சுஜீபன், அருள்பிரியா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், ஷகானா, கபிஷனா, சாதுரியன், சாகித்தியன், சாருஜன், டினேசன், கணேசன், திறோஷன், பிரகதிஸ், பபிசன், டிஷான், சஞ்ஜித், சோபனன், கோபிஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்குளி
சாவகச்சேரி

077 930 1613

தகவல் : குடும்பத்தினர்
ரஞ்சன் (சிற்பாசாரி)

# மரண அறிவித்தல்



## கோவிந்தசாமி மனோரஞ்சிதம்

கைதடியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி மனோரஞ்சிதம் அவர்கள் கடந்த (24.03.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேல் அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், கைதடி பழனிமலை (தவில் வித்துவான்), கைதடி சிவகடாட்சம், கைதடி சிவபாதம் (தவில் வித்துவான்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அளவெட்டி வடக்கு தவில் வித்துவான் காலஞ்சென்ற கோவிந்தசாமியின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நரவத்தினராஜா சியாமளா, பிரேமிளா ஆகியோரின் அன்பு மாமியாரும், பவித்திரன், கிருத்திகா, ரிஷபன், ஜீவலக்ஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் அளவெட்டி இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 01 - 1948



இறப்பு 24 - 03 - 2022

## சின்னத்தம்பி இராமலிங்கம்

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமலிங்கம் அவர்கள் கடந்த (24.03.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பரலோகம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மாமாங்கம் ஆகியோரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் சகிலன் (அமரர்), இராகுலன் (லண்டன்), ரஜனி (சுவிஸ்), அகிலன் (அமரர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகநாதன், அற்புதநாதன், பத்மநாதன், கமல பாக்கியம், சிவயோகநாயகி ஆகியோரின் மைத்துனரும், பாமினி, கஜிதா, செல்வகுமாரன் ஆகியோரின் மாமனாரும் கபிஷன், மிர்த்திகா, சபிசன், ரோகிசன், சஞ்சனா, டபிசன், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2022) அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

077 051 9927

தகவல் :

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 03 - 1939



மறைவு 24 - 03 - 2022

## கந்தையா பாலசுப்பிரமணியம்

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (24-03-2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான K.T கந்தையா(திருவிளங்கம்) நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், தெய்வநாயகி (பாப்பா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஞானேந்திரம் (பபி) மற்றும் குகேந்திரன் (றஞ்சி- சுவிஸ்), தனேந்திரன் (பேபி- லண்டன்), நிரஞ்சினி (செல்லா- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜாதா (சுவிஸ்), லோகினி (லண்டன்), கணேசதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதீஸ் (சுவிஸ்), விஸ்வா (சுவிஸ்), காவியா (லண்டன்), நிதர்சன் (லண்டன்), மகிமா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், கெங்காகுலதிலகம் (கனடா), குகதாஸ் (லண்டன்), காலஞ்சென்ற குமாரசாமி (சாமி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜலக்சுமி (கனடா), காலஞ்சென்ற பத்மினி (லண்டன்) மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற Dr. சிவபாதம் (குகன் வைத்தியசாலை, மல்லாகம்), தம்பாப்பிள்ளை (நமீபியா) மற்றும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சர்வலோகேஸ்வரி (சுதுமலை) மற்றும் இராஜேஸ்வரி (கனடா), கணேசதாசன் (சுதுமலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மைதிலி (கனடா), காண்டீபன் (கனடா), ஜனகன் (லண்டன்), ஆதவன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், பிரசாந்தன் (கனடா), கீதா (லண்டன்), சுகந்தினி (சாந்தா- சிங்கப்பூர்), மயூரன் (லண்டன்), சியாமளா (மாலா- கொழும்பு), யசோதினி (கொழும்பு), கோகுலன் (நமீபியா), நிராகுலன் (லண்டன்), சத்யாகுலன் (நமீபியா) ஆகியோரின் பாசமிகு மாமானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (28-03-2022) திங்கட்கிழமை அன்று மு.ப 09:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுந்தரவாசா,
பங்களாலேன், மல்லாகம்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தொடர்கதையாகும் நள்ளிரவு விலையேற்றங்கள்

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் மீண்டும் பெற்றோலின் விலையை இரவோடு இரவாக நேற்றுமுன்தினம் 49 ரூபாவால் அதிகரித்திருக்கின்றது. இந்த வருடத்தில் அந்த நிறுவனத்தின் மூன்றாவது விலை அதிகரிப்பு இது.

இந்த ஆண்டு ஆரம்பம் முதல் இலங்கை மக்களுக்கு நள்ளிரவு விலை அதிகரிப்புக்கள் தொடர்ச்சியாக அதிர்ச்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள், எரிவாயு என்று விலை அதிகரிப்பில் அகப்படாத பொருள்களே நாட்டில் இல்லை எனலாம். நாட்டின் இந்த நிலைமைக்கு ஆட்சியிலுள்ள அரசாங்கமே காரணம் என்று பெரும்பான்மையான மக்களும், எதிர்க்கட்சிகளும் குற்றஞ் சாட்ட, அரசாங்கமோ பல காரணங்களைக் கூறிக் கொண்டிருக்கின்றது.

கொரோனாத் தொற்று நிலைமை, ரஷ்யா – உக்ரைன் போர், கடந்த நல்லாட்சி அரசு வாங்கிய கடன்கள் என்பனவே இந்த விலை உயர்வுக்குக் காரணம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், அரசாங்கத்தின் நிதிக் கொள்கையும், தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுமே இந்தநிலைமைக்கு காரணம் என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்து. காரணம் எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். அதன்விளைவுகளை நாட்டின் சாதாரண குடிமக்களே இப்போது எதிர்கொண்டுள்ளனர், எதிர்கொள்ளவுள்ளனர்.

எரிவாயு, அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள் விலைகள் என விலைகள் அதிகரித்து ஓய்ந்திருந்த நிலையில், இனிமேல் விலை உயர்வு நடக்காது என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்தது. இலங்கை அரசாங்கம் காலம் தாழ்த்தியாவது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருந்தமை, இந்தியாவின் கடனுதவிகள் என்பவற்றால் மக்கள் மத்தியில் இந்த நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆனால், அவர்களின் நம்பிக்கையில் இடிவிழுந்தாற்போல் நேற்றுமுன்தினம் நள்ளிரவு மீண்டும் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டிருக்கின்றது.

ஐ.ஓ.சி. நிறுவனத்தின் விலை உயர்வடைந்தாலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைகளை உயர்த்தாது என்று கூறியிருக்கிறார் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே. கடந்த காலங்களில் அரசாங்கம் கூறியதற்கு எதிராகவே செயற்பட்டிருக்கின்றது என்பதால் அவர் இவ்வாறு கூறியிருப்பதாலேயே, நிச்சயம் விலையேறும் என்று மக்கள் அச்சம் கொள்ளவேண்டியிருக்கின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலைகளை எதிர்வரும் வாரங்களில் விலைகளை அதிகரிக்கக்கூடும். எரிபொருள் விலைகளில் ஏற்படும் மாற்றம் அதனுடன் மட்டும் நின்றுவிடப் போவதில்லை. அதன் தாக்கம் அனைத்துப் பொருள்களின் விலைகளிலும் ஒரு சுற்று வட்டப்பாதையில் எதிரொலிக்கும், ஆக, மீண்டும் இன்னொரு சுற்று விலையேற்றங்கள் நடக்கலாம். நள்ளிரவுகளில் பொதுமக்களுக்கு அதிர்ச்சிகள் தொடரலாம்.

அரசாங்கம் நினைத்து நினைத்து விலைகளை அதிகரித்து, மக்களை பதற்றத்திலேயே வைத்திருப்பதைவிட, ஒரே தடவையில் நன்கு ஆராய்ந்து பொருள்களின் விலைகளை உச்சத்துக்கு அதிகரிப்பது எவ்வளவோ பரவாயில்லை என்கின்றனர் இந்தத் தொடர் விலையேற்றத்தால் வெறுத்துப்போன மக்கள். தினம் ஒரு விலை என்பது, வாழ்க்கையைக் கொண்டு நகர்த்தத் திண்டாடும் மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும். ஆனால், அரசாங்கம் அதையெல்லாம் சிந்தித்துச் செயலாற்றுமா என்பது சந்தேகம் தான். ஏனெனில் அவ்வாறு செயற்றிறன் கொண்ட அரசாங்கமாக இருந்தால் நாடு இந்த நிலைக்குச் சென்றிருக்காதே!

**நாளொரு நல்வார்த்தை**

"அனைவரும் உலகை மாற்ற நினைகிறார்கள். ஆனால் தன்னை மாற்றிக் கொள்ள யாரும் நினைப்பதில்லை"
- டால்ஸ்டாய்




# சட்டவிரோத செயல்களை உடன் தடுத்து நிறுத்துக!

*மாந்தை கிழக்கு உறுப்பினர்கள் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்*

**முல்லைத்தீவு, மார்ச் 27**

**முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் பெண்கள் மீதான வன்முறைகள், மண் அகழ்வு, காடழிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி போன்ற சட்ட விரோத செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மாந்தை கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மாந்தை கிழக்கு பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர்கள் மேற்படி வலியுறுத்தினர். இந்தச் சந்திப்பில் பிரதேச மட்டத்தில் காணப்படும் நீண்டகாலப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் அண்மைக்காலமாக போதைப்பொருள்கள் குறித்த பகுதிக்குள் கடத்தப்படுகின்றன என்றும், பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாகக்கூடிய சாத்தியம் மிகையாகக் காணப்படுகின்றது என்றும், பொலிஸாரிடம் உறுப்பினர்கள் முறையிட்டனர்.

பொலிஸாரும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடும் சோதனைச்சாவடியொன்று குறித்த பகுதியில் ஏற்கனவே இருக்கின்றது. அதைவிட மேலும் மூன்று சோதனைச் சாவடிகளாவது அமைத்தால் இந்தச் சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று உறுப்பினர்கள் பொலிஸாருக்குப் பரிந்துரைத்தனர். இதுதொடர்பில் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-19)

# பஸிலை ஒதுக்கிவையுங்கள் அபயதிஸ்ஸ தேரர் அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 27

"புதிய அரசமைப்பு சாத்தியப்படாது என அன்றே நான் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் சுட்டிக்காட்டினேன். முடியும் என அவர் கூறினார். ஆனால், இன்று எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது" இவ்வாறு 'தேசிய பிக்கு அறிஞர்களின் கருத்தரங்கு' அமைப்பின் பிரதானியான பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'2015 ஆம் ஆண்டில் பஸில் ராஜபக்சவால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன்பின்னர் அவர் பெரும் சக்தியாக மாறுவார் என்பதும் எமக்குத் தெரியும். எனவே, இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கு தடை விதிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரினோம். புதிய அரசமைப்பு ஊடாக இந்த விடயம் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார். ஆனால், இன்று அபாயக் கட்டத்துக்கு நாடு வந்துள்ளது. எனவே, மக்கள் வழங்கிய ஆணையை பாதுகாக்க முன்வருமாறு ஜனாதிபதிக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். எமது நாட்டில் மன்னர் ஒருவர் இருந்தார். நாட்டை பாதுகாப்பதற்காக தனது மகளை அவர் கடலில் போட்டார். பஸில் ராஜபக்சவை நாம் கடலில் போடச் சொல்லவில்லை. அவரை ஒதுக்கி வைக்குமாறுதான் கோருகின்றோம்' - என்றார். (ம)

**நாளை** 28.03.2022 திங்கட்கிழமை பங்குனி 14
சுபநேரம் : 12.14 - 01.44
ராகுகாலம்: 07.44 - 09.14
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிக்கையாளர் சேவைச் சிறப்பில்

# தனது முதலாம் ஸ்தானத்தை மீளஉறுதி செய்தது செலான் வங்கி



அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, தொடர்ச்சியான மூன்றாவது வருடமாகவும் இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சிறப்பு என்பதில் முதலாம் ஸ்தானத்தை உறுதி செய்துள்ளது.

ஆரம்பம் முதல், செலான் வங்கி தனது வியாபார மாதிரியில் முக்கிய மற்றும் மிகவும் பெறுமதி வாய்ந்த அங்கமாக வாடிக்கையாளர்களைக் கருதுகின்றது. கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில் கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் கொவிட்19 தொற்றுப் பரவல் காரணமாக, மிகவும் சவால்கள் நிறைந்த காலப் பகுதிக்கு முகங்கொடுத்திருந்த போதிலும், சேவை மேம்படுத்தல்கள் மற்றும் மெருகேற்றங்களினூடாக வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான மற்றும் பாதுகாப்பான சேவைகளை வழங்குவதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளது. வாடிக்கையாளர்கள் மீது செலான் வங்கி கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு மேலும் எடுத்துக்காட்டாக இந்த கௌரவிப்பு அமைந்துள்ளது.

செலான் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக இலங்கையில் காணப்படும் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சிறப்புக்கான முதல்தர வங்கி எனும் ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை எமக்கு மிகவும் பெருமையளிக்கின்றது. ஒவ்வொரு துறையிலும் வாடிக்கையாளர் சேவைச் சிறப்பு என்பது அத்தியாவசியமானதாக அமைந்திருப்பதுடன், எந்தவொரு நிறுவனத்தினதும் பிரதான குணவியல்பாக அமைந்துள்ளது. தொற்றுப் பரவலுடனான காலப்பகுதியில், நடமாடுவதில் கட்டுப்பாடுகள் மற்றும் நேரடித் தொடர்புகளை பேணுவதில் கட்டுப்பாடுகள் போன்றன காணப்பட்ட நிலையில், சேவை மட்டங்களில் சிறப்பை உறுதி செய்வது என்பது மிகவும் சவால்கள் நிறைந்த காரியமாகும். எவ்வாறாயினும், வாடிக்கையாளர்களை மையப்படுத்தி வியாபாரச் செயற்பாடுகளை செலான் வங்கி முன்னெடுத்திருந்ததுடன், எமது வலையமைப்பைச் சேர்ந்த ஊழியர்களும் தமது வழமையான செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று, எமது சகல வாடிக்கையாளர்களினதும் தேவைகளை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தியிருந்தனர்." என்றார்.

செலான் வங்கியின் செயற்பாடுகளில் சேவைச் சிறப்பு என்பதற்கு ஆரம்பம் முதல் முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் செயன்முறைகளில் வங்கி முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவ அணியினால் உரிய காலப்பகுதியில் வாடிக்கையாளர் திருப்திகரம் தொடர்பான கருத்துக் கணிப்புகள் முன்னெடுக்கப்பட்டு, சந்தையில் வங்கி தொடர்பில் நிலவும் கண்ணோட்டம் பற்றிய புரிந்துணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. வருடம் முழுவதிலும் வாடிக்கையாளர்கள் மத்தியில் எழுமாற்றாக இரகசியத் தன்மை வாய்ந்த வகையில் கருத்துக் கணிப்புகள் முன்னெடுக்கப்பட்டு, சேவை வழங்கல்களின் வெற்றிகரமான நிலை தொடர்பில் அறிந்து கொள்கின்றது. வங்கிச் செயற்பாடுகளில் சேவைச் சிறப்பு என்பது ஒப்பற்ற வகையில் டிஜிட்டல் முறையிலும் நேரடியாகவும் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய இது போன்ற கருத்துக் கணிப்புகள் உதவியாக அமைந்துள்ளன.

வாடிக்கையாளர் சேவைச் சிறப்புகள் தரப்படுத்தல்கள் என்பது 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு பகுதியில் LMD இனால் முன்னெடுக்கப்பட்டிருந்த ஒன்லைன் கருத்துக் கணிப்பின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தன. வாடிக்கையாளர் தன்னிறைவு மற்றும் சேவைத் தரம் தொடர்பில் திருப்தி போன்ற பதினெட்டு பிரிவுகளைச் சேர்ந்த சிறந்த சேவை வர்த்தக நாமங்களுக்கு வாடிக்கையாளர்கள் வாக்களித்திருந்தனர். அதன் பிரகாரம், நாட்டிலுள்ள பத்தொன்பது அரச மற்றும் தனியார் துறை வங்கிகளிலிருந்து செலான் வங்கியை சிறந்த வாடிக்கையாளர் சிறப்புக்காக வாடிக்கையாளர்கள் வாக்களித்திருந்தனர்.

ஆரியரட்ன தொடர்ந்து குறிப்பிடுகையில், "எமது இலக்குகளில் செலான் வங்கியைச் சேர்ந்த அனைவரும் காண்பிக்கும் அர்ப்பணிப்புக்காகவும், இந்த சவால்கள் நிறைந்த காலப்பகுதியிலும் தமது வங்கிச் சேவைகளை முன்னெடுப்பதற்காக செலான் வங்கியின் மீது நம்பிக்கை கொண்டிருந்த சகல வாடிக்கையாளர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். வாடிக்கையாளர்களை அன்புடன் அரவணைக்கும் வகையில் செயலாற்றுவதற்கு செலான் வங்கி தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், எதிர்காலத்திலும் அவ்வாறு செயலாற்றும்." என்றார்.

2020 ஆம் ஆண்டில் நாடு தொற்றுப் பரவலுக்கு முகங்கொடுத்திருந்த காலப்பகுதியில் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான நடமாடும் ATM சேவைகள் மற்றும் ஒன்லைன் கொடுப்பனவு வசதிகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையில் தனது சேவை வழங்கல்களை டிஜிட்டல் மயமாக்கம் செய்து விரிவாக்கம் செய்திருந்ததில் செலான் வங்கி முன்னிலையில் திகழ்ந்தது. பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான திறன் மற்றும் அறிவூட்டல்களை மேற்கொள்ளும் வகையில் மெய்நிகர் பயிற்சிப்பட்டறைகளை முன்னெடுத்து, சவால்களுக்கு முகங்கொடுப்பது பற்றிய விளக்கங்களை வழங்கியிருந்தது.

தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்த செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில், சுகாதாரத் துறைக்கு பல்வேறு பங்களிப்புகளை வழங்கியிருந்ததுடன், தனது வியாபாரச் செயற்பாடுகளைச் சேர்ந்த சகல பங்காளர்களினதும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கிச் செயலாற்றியிருந்தது.

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, அதிநவீன தொழில்நுட்பம், புதுமையான கணக்குகள் மற்றும் வகுப்பில் சிறந்த சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னத வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான தொலைநோக்குடன் செயல்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர, சில்லறை மற்றும் நிறுவனங்கள் என வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள வங்கி, நாடு முழுவதிலும் 540 க்கும் அதிகமான வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் அலகுகளைக் கொண்டுள்ளது. பிற்ச் மதிப்பீடுகளால் செலான் வங்கி, தேசிய நீண்டகால மதிப்பீடு 'A(LKA)' ஆக தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாக செயற்றிறன் சிறப்பைக் கொண்ட நிதி ரீதியாக நிலையான அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனைகள் செலான் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

# செலான் வங்கி ஓய்வூதியத் திணைக்களத்துடன் கைகோர்த்து உயிரியல் மரபணுவியல் முறைமையூடாக ஆயுள் சான்றிதழ்



ஓய்வூதியம் பெறுவோருக்கு, உயிரியல் மரபணுவியல் உறுதியளிப்பு முறைமையினூடாக ஆயுள் சான்றிதழ்களை வழங்குவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்துடன் செலான் வங்கி கைகோர்த்துள்ளது. ஓய்வூதியம் பெறுபவரின் நிலையை உறுதி செய்வதற்காக பயன்படுத்தப்படும் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணமாக இந்த ஆயுள் சான்றிதழ் காணப்படுகின்றது. இந்த இயந்திரத்தினூடாக ஓய்வூதியம் பெறுநரின் கைவிரல் ரேகை பயன்படுத்தப்பட்டு, ஆயுள் சான்றிதழ் வழங்கப்படும். அதனூடாக சகல ஓய்வூதியம் பெறுவோருக்கும் இந்த செயன்முறையை எளிமையானதாகவும், வினைத்திறனானதாகவும் இலகுவில் அணுகக்கூடியதாகவும் திகழச் செய்வதற்கு பங்களிப்பு வழங்கப்படும்.

கடந்த காலங்களில், சகல ஓய்வூதியம் பெறுவோரும், ஆண்டின் குறித்த காலப்பகுதியினுள் ஓய்வூதியம் பெறுநருக்கான சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்ப வேண்டியிருந்தது. 75 கிளைகளிலும் ஆயுள் சான்றிதழ்களை வழங்குவதற்கு நவீன தொழில்நுட்ப மேம்படுத்தல்களை செலான் வங்கி தற்போது ஏற்படுத்தியுள்ளது. நீண்ட வரிசைகளில் காத்திருப்பதற்கான தேவையை இந்த முறைமை இல்லாமல் செய்துள்ளதுடன், தற்போதைய தொற்றுப் பரவலுடனான சூழலில், சிரேஷ்ட பிரஜைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் பங்களிப்பு வழங்குகின்றது.

இந்தத் திட்டம் தொடர்பில் ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ. ஜகத் டி டயஸ் கருத்துத் தெரிவிக்கையில், "ஓய்வூதியம் பெறுவோரின் நலன் குறித்து கவனம் செலுத்துவது எமது பொறுப்பாக அமைந்துள்ளது என்பதில் ஓய்வூதியத் திணைக்களத்தைச் சேர்ந்த நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இவர்கள் நாட்டுக்கு சிறந்த சேவையை வழங்கியுள்ளனர். இதன் பெறுபேறாக, சகல செயன்முறைகளிலும் அவர்களின் சௌகரியத்தை உறுதி செய்வது எமது பொறுப்பாக அமைந்துள்ளது. ஆயுள் சான்றிதழை துரிதமாக பெற்றுக் கொள்வதில் இந்த வசதி உதவியாக அமைந்திருக்கும். இந்த செயன்முறையை எமக்கு மேம்படுத்துவதற்கு ஆதரவளிப்பதில் செலான் வங்கி எமக்கு உறுதுணையாக அமைந்திருந்தமைக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்." என்றார்.

செலான் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் சகல ஓய்வூதியம் பெறுவோருக்கும் ஆயுள் சான்றிதழை வழங்குவதற்காக உயிரியல் மரபணுவியல் உறுதிப்படுத்தும் முறைமையை அறிமுகம் செய்வதில் பங்களிப்பு வழங்குவதையிட்டு செலான் வங்கி பெருமை கொள்கின்றது. ஓய்வூதியம் பெறுவோரினால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கண்டிப்பான ஆவணமாக இது அமைந்திருக்கும் நிலையில், இந்த சிக்கல்களில்லாத [illegible] அறிமுகத்தினூடாக அது [illegible] அமைந்திருக்கும் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம். ஓய்வூதிய திணைக்களத்துடனான இந்தப் பங்காண்மையினூடாக, இந்த செயன்முறைக்கு பங்களிப்பு வழங்க எமக்கு வாய்ப்புக் கிடைத்திருந்ததுடன், ஆயுள் சான்றிதழை சமர்பிக்கும் சிக்கல்கள் நிறைந்த செயன்முறையை இல்லாமல் செய்ய முடிந்துள்ளது. அன்புடன் அரவணைக்கும் வங்கி எனும் வகையில், எமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கைக்கு வளமூட்டும் செயற்பாடுகளில் எப்போதும் நாம் கவனம் செலுத்துவதுடன், அவர்களின் நாளாந்த செயற்பாடுகளை எளிமைப்படுத்தும் தீர்வுகளை வழங்கி வாழ்வுக்கு வளமூட்டுகின்றோம். எமது ஓய்வூதியம் பெறுவோருக்காக இந்த புதிய செயன்முறையின் அனுகூலத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஓய்வூதியத் திணைக்களத்துடன் கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்." என்றார்.

எமது சமூகத்தில் சிரேஷ்ட பிரஜைகள் ஆற்றும் பங்களிப்பு தொடர்பில் செலான் வங்கி உண்மையில் அதிகளவு மகிழ்ச்சியடைவதுடன், அவர்களின் நிதிச் சுதந்திரம் மற்றும் உறுதித்தன்மை ஆகியவற்றுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றது. ஓய்வூதியம் பெறுவோருக்காக வங்கியினால் பல சேமிப்புத் தீர்வுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், [illegible] செலான் ஹரசார, [illegible] வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சேமிப்புக் கணக்காக அமைந்துள்ளது. செலான் ஹரசார குடும்பத்தில் அங்கம் பெறுமாறு சகல சிரேஷ்ட பிரஜைகளையும் வரவேற்பதுடன், அதனூடாக தமது ஓய்வுக் காலத்தை நிதிச் சுதந்திரத்துடனும், மன நிம்மதியுடனும் சிறந்த அனுகூலங்கள் மற்றும் பிரத்தியேகமான சேவைகளை மகிழ்ச்சியாக அனுபவிக்கக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவித்துள்ளது. இந்த வசதி தொடர்பான மேலதிக தகவல்களை அருகாமையிலுள்ள செலான் வங்கிக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் அல்லது www.seylan.lk எனும் இணையத்தளத்தைப் பார்வையிடுவதனூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, அதிநவீன தொழில்நுட்பம், புதுமையான கணக்குகள் மற்றும் வகுப்பில் சிறந்த சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னத வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான தொலைநோக்குடன் செயல்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர, சில்லறை மற்றும் நிறுவனங்கள் என வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள வங்கி, நாடு முழுவதிலும் 540 க்கும் அதிகமான வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் அலகுகளைக் கொண்டுள்ளது. பிற்ச் மதிப்பீடுகளால் செலான் வங்கி, தேசிய நீண்டகால மதிப்பீடு 'A(LKA)' ஆக தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாக செயல்திறன் சிறப்பைக் கொண்ட நிதி ரீதியாக நிலையான அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனைகள் செலான் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள Super Marketக்கு வேலையாட்கள் (பொதி செய்பவர்கள்) தேவை. சாவகச்சேரியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. மற்றும் நுணாவிலில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. (CS 43774) (4/6)

தொடர்புக்கு:- 077 666 8739
Email:- kobi19941206@gmail.com
No-87/01, A9 வீதி, சாவகச்சேரி

## ஐரோப்பாவில் பட்டப்படிப்பு!!!

### SPAIN / SWEDEN / HUNGARY / FINLAND

- செப்டம்பர் மாத தவணைக்கு விண்ணப்பிக்க ஆயத்தமாக உள்ளீர்களா?
- ஐரோப்பாவில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் பதிவு செய்ய நீங்கள் இப்போதே தயாரா?
- அப்படியானால், செப்டம்பர் மாத தவணைக்கு விண்ணப்பிக்க இதோ உங்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்
- கல்வி வழிகாட்டல் சேவைகளில் அனுபவம் வாய்ந்த குழுவிடமிருந்து அனைத்து வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்

உங்கள் வெளிநாட்டுக்கனவை நனவாக்க

மேலதிக விபரங்களுக்கு WhatsApp அல்லது தொலைபேசி மூலம் எங்களை தொடர்பு கொள்ளுங்கள் :

CHEC
COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (PVT) LTD
No. 40 - 2/2, Galle Road, Wellawatte, Colombo - 06.
**0777 167 606 / 0777 221 235**



களபாவோடை ஏழாலை தெற்கு, ஏழாலை
## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

### மஹாசண்டிஹோம பெருவிழா

30.03 2022 அன்று புதன்கிழமை காலை 7.00 மணிக்கு யாக பூசையுடன் ஆரம்பமாகி 1.30 மணி வரை மஹாசண்டி ஹோம பெருவிழா இடம்பெறும் என்பதனை அடியவர்களுக்கு அறியத்தருகின்றோம். இந்தியா தமிழகத்திலிருந்து வருகை தரும் குருமார்களினால் இப்பெருவிழா நடாத்தப்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தேவஸ்தானம்**

(CS 43635) (3/6)

## Director, Jaffna College Institute of Technology Vaddukoddai Calls for the following courses

**Civil Draught person ( one year )**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5

**Computer Certificate Courses**
**( 3 – 4 months Part time)**

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Foundation in Information Technology (FIT)**
**( 6 months part time)**

- Pre degree course leads to Bachelor's in Information Technology(BIT), University of Colombo.

**Commencement in the Middle of April. 2022**
**The Courses will be conducted at our Jaffna Centre too**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road, Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

(CR 37698) (3/6)

## கணக்காளர் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் இயங்கிவரும் பிரபல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு Quick book தெரிந்த அனுபவமிக்க கணக்காளர்கள் தேவைப்படுகின்றனர். வயதெல்லை (25 - 45) விரும்பத்தக்கது. **தொலைபேசி இல : 077 739 1221**
**தொலைநகல் : 011 234 2138**
**மின்னஞ்சல் : newamttransport@gmail.com**
(ACO 18185) (3/6)

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

### தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன். பொடுகு தொல்லையா? முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி. கரிசலாங்காணி. இலாமிச்சை வேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய
(cs 37149)

### உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?. கணச்சூடா?. பலகீனமா?. ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?. மார்பு கூட வேண்டுமா?. உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



கொழும்புத்துறை - கிழக்கு
## ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் கோயில்

### பரிபாலன சபை பற்றியது

மேற்படி ஆலய பரிபாலன சபைக்கு எதிராக தனிநபர் அவர்களால் எனது பரம்பரைக்கோவில் எனவும் பரம்பரைச்சொத்து எனக்கூறி 11.11.2011 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதி மன்றத்தில் தனது பரம்பரை தர்மகர்த்தா என வெளிப்படுத்துமாறு வழக்குதாக்கல் செய்துள்ளார்.

ஆனால் யாழ். மாவட்ட நீதி மன்றத்தினால் 11.12.2020 ஆம் திகதி ஆதனமும் அவ்வாதனத்தில் அமைந்திருக்கும் கொழும்புத்துறை ஸ்ரீமகா முத்துமாரியம்மன் ஆலயம் ஒரு பொது நம்பிக்கைச் சொத்து எனப் பிரகடனப் படுத்தி தீர்ப்பளிக்கப்படுகின்றது. அத்துடன் பொது நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி தர்மநம்பிக்கைச்சொத்தை முகாமை செய்யலாம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

**நிர்வாகம்**

(cs 43782) (2.6)

## நிரந்தர, குறுகிய கால தொழில் தேடுவோருக்கு அரியவாய்ப்பு

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், பல்கலைக்கழக அனுமதியினை எதிர்பார்த்திருக்கும் இருபாலார்களுக்கும் நர்மதா கோல்ட் சென்ரர் வழங்கும் அரிய வாய்ப்பு தங்கள் கல்வியை எதிர்காலத்தில் தொடர்வதற்கான அடித் தளத்தினை கட்டியெழுப்ப தங்களுடன் நாம் கை கோர்க்கின்றோம். தொழிலுக்கான கட்டுப்பாடுகளில் தளர்வுகளுடன் தங்களுக்கு தொழில் வழங்குவதற்காக காத்திருக்கின்றோம்.

கவர்ச்சிகரமான கொடுப்பனவுகளுடன் உணவு, தங்குமிட வசதிகள் இலவசமாகவும் மற்றும் சலுகைகளுடனும் நர்மதா கோல்ட் சென்ரர் உங்களை வரவேற்கின்றது. விருப்பமுடையோர் தங்கள் சுயவிவரங்களுடன் 02.04.2022 அன்று காலை 10.00 மணிக்கு இல.187, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நர்மதா கோல்ட் சென்டருக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். (CS 43773) (4/6)

**தொடர்புகளுக்கு:- 077 975 1996**

## சிறுநீரகம் தேவை

59 வயதான நபருக்கு O+ குருதி வகை உடைய சிறுநீரகம் தேவை.

**0778191636**
**0774400094**

## A/L தோற்றியவர்களிற்கான சிங்கள வகுப்புக்கள்

கோண்டாவில் மற்றும் வட்டுக்கோட்டை.
சந்நிதி மனோ 077 767 7773
(cs 43795) (2.6)

## காசாளர் தேவை

கொழும்பில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு A/L முடித்த அனுபவமுள்ள காசாளர் தேவை. தங்குமிடம், தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(வயதெல்லை : 20-40)
தொடர்புகளுக்கு: **077 410 9214**
(CS 10601) 1-6

## கணினி திருத்தம்

உங்களது வீடுகள் மற்றும் அலுவலகங்களுக்கே வந்து கணினிகள் லப்டொப்கள் திருத்தித்தருகிறோம். (CS 18788) (4/6)

379 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
077 908 6737
GUNA BEST PC

## வீடு/அறை வாடகைக்குண்டு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடு/அறை வாடகைக்குண்டு.
(CS 19030) (4/6) 077 833 6848

## வாகனம் விற்பனைக்கு

மொடல் **FOTON-10-10** கூடு பதிவுடன் விலை நேரில் தீர்மானிக்கப்படும்.
**T.P.No: 077 882 1413**

## வேலையாள் தேவை

கொட்டல் வேலைக்கு ஆட்கள் தேவை. மும்மொழிகளும் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. (CS 19036) (4/6)
077 724 2427, 076 194 1995

## கொள்வனவு

நெல், தானியங்கள், தேங்காய் கொள்வனவு செய்யப்படும். உழுந்து உடைத்துக் கொடுக்கப்படும்.
(CS 19033) (4/6) 077 772 2215

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு ஆண். பெண் இருபாலாரும் தேவை. முன் அனுபவமுள்ள மற்றும் பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.
(cs 18026) (2.6)
**077 172 3554**

## காணி விற்பனை

சாவகச்சேரி லேடிஸ் College வீதியிலும் ஸ்டேசன் வீதியிலும் காணி விற்பனைக்குண்டு.
**076 389 5962**

## காணி விற்பனைக்கு உண்டு

இருபாலை சந்திக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் இடையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(CS 18895) (4/6)
தொடர்பு:- **077 193 3490**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

க.பொ.த (உ/த) 2021 பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

**இறுதிப்பிரிவு 37**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

காலம்:- 3 மாதங்கள் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பம்:
02/04/2022 , 10.00AM

**IPS**
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரசாமி நாகரத்தினம்



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசாமி நாகரத்தினம் அவர்கள் 24.03.2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா வேத நாயகம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமியின் பாசமிகு மனைவியும், மகாலோஜினி (லண்டன்), மகாஜோதி (கொழும்பு), மகாசிவஷன் (பிரான்ஸ்), மகாசரவணபவான், காலஞ்சென்றவர்களான மகாசிவநாராயணன், மகாபஞ்ச கோபாலகுமரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார் (லண்டன்), சுமித்திரா (கொழும்பு), சிவானி (பிரான்ஸ்), சசிரேகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெய்சன், ஜேய்சிக்கா (லண்டன்), கஜிசனன் கஜிநிசன் (கொழும்பு), அம்சனா, ரஜிதன், ஆகாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நாகம்மாவின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03. 2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தோற்றம் 10.03.1950 மறைவு 24.03.2022


கைதடி தெற்கு, கைதடி. (CR 8159) (4-6)

பவான்:- 077 882 5429/ 076 589 2160
மகேன்:- 077 302 8402

தகவல் குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 - 01 - 1944



மறைவு 24 - 03 - 2022

## நடராசா இராஜநாயகம்

(ஓய்வுபெற்ற சைகைத்தொலைத் தொடர்பு பகுதி உத்தியோகத்தர் - புகையிரத திணைக்களம், ஓய்வு பெற்ற பட வரைஞர் Euroville Engineers and Constructors (PVT) Ltd.)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராஜநாயகம் (ஓய்வுபெற்ற சைகைத்தொலைத் தொடர்பு பகுதி உத்தியோகத்தர் - புகையிரத திணைக்களம், ஓய்வு பெற்ற பட வரைஞர் Euroville Engineers and Constructors (PVT) Ltd.) அவர்கள் கடந்த (24-03-2022) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா நாகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் குணமணி தம்பதியினர் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், தனஞ்சன் (UK), ஜனா (டாக்டர், கொழும்பு தேசிய வைத்தியசாலை), சயந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், சரஸ்வதி, துரையப்பா ஆகியோரினதும் புவனேஸ்வரி, யோகேஸ்வரி, நீற்றா (UK) ஆகியோரினதும் அன்புச் சகோதரனும், தியாகலிங்கம் (UK) றஞ்சி ஆகியோரினதும் காலஞ்சென்றவர்களான துவாரகாம்பாள், வெற்றிவேல் (பளிங்கு) ஆகியோரினதும் அன்பு மைத்துனரும், பாலதர்மேந்திரன் (செலான் வங்கி - வவுனியா), லக்ஷனா (UK), பங்கஜம் (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் பிரவின், பிரண்யன், அஸ்விகா, அரவின் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"லீலகிரி"
கோப்பாய் மத்தி, கோப்பாய். 021 223 0151

தகவல் : குடும்பத்தினர்

# உடனடி வேலைவாய்ப்பு

வவுனியா கண்டி வீதி, மூன்றுமுறிப்பு பகுதியில் இயங்கிவரும் AMT எரிபொருள் நிலையத்தில் பணியாற்றுவதற்கு கணக்காளர் (Accountant) ஆண்/ பெண் உடன் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

AMT Lanka Fuel Mart
கண்டி வீதி, மூன்றுமுறிப்பு, வவுனியா.

077 739 1221, 077 766 6620 (cs.00983) (2.6)

# அறிவித்தல்

எமது நிறுவனமாகிய Advanced Technology System" 2019 ஆம் அண்டு முதல் 2022.02.28 வரை திருத்தம் செய்வதற்கு வழங்கிய உபகரணங்களை இதுவரை மீள பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் சித்திரை மாதம் 02 ஆம் (02.04.2022) திகதிக்கு முன்னர் தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக் கொள்ளவும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீள பெற்றுகொள்ளாத பொருட்களுக்கு எமது நிறுவனம் பொறுப்பு ஏற்காது. (CS 43788) (3/6)

021 221 9330, 076 781 7831

# வேலைவாய்ப்பு


உணவு உற்பத்தி நிலையத்தில் ஆண் / பெண் இருபாலாரும் வேலைவாய்ப்பு தங்குமிட வசதியுடன். கவர்ச்சியான சம்பளம். வன்னி பெருநிலப்பரப்பில் பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு முன்னுரிமை

01. உணவு உற்பத்திகள் (இடியப்பம், பிட்டு, அப்பம்)
02. பலகார வகைகள்
03. பொதியிடல் வேலைகள்
04. உதவி முகாமைத்துவபெண்கள்
05. வீட்டு, தோட்ட வேலைவாய்ப்புகள்
06. சுத்திகரிப்பாளர்கள்
07. உணவு பரிமாறுபவர்கள்
08. சமையலாளர்கள்
09. பில்கிளாக்
10. காசாளர்

உடனடி தொடர்புகளுக்கு: 077 791 7753 (CS.43796) (3.6)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 27.02.1930



மறைவு 24.03.2022

## நாகமுத்து சண்முகசுந்தரம்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சரவணா நகை மாடம்
இல.205/05, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## வாள்வெட்டு

யாழ். மார்ச் 27

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் தெற்கு மானிப்பாயில் வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த வாள்வெட்டு குழு, வீட்டுக்குள் அத்துமீறி புகுந்து வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளது. இதனால் இடது கை வெட்டுக்குள்ளான நிலையில் நாகராசா மணிமாறன் (வயது-51) எனும் வீட்டின் உரிமையாளர் யாழ். போதனா மருத்துவமனையின் 24 ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஒ-125)


# காணி விற்பனைக்கு

பருத்தித்துறையில் புலோலி வடகிழக்கில் 10 பரப்புள்ள தோட்டக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 0777 111 716

# பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. (CS 19040) (4/6) 0771658524



# நீங்கா நினைவுகளுடன்

தோற்றம் 30.01.1955 மறைவு 24.02.2022

## லயன் கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம்

என்றும் நினைவுகளுடன் - சகோதர்கள்

கனகசபை நாகலிங்கம்
கனகசபை ரட்ணசிங்கம்
கனகசபை தர்மகுலசிங்கம்
கனகசபை பரராஜசிங்கம்
கனகசபை அமுதலிங்கம்
கனகசபை [illegible]

கனகசபை தவபாலன்
அருளம்பலம் இராசமணி
வேலுப்பிள்ளை ஞானமணி
தர்மலிங்கம் சரோஜ்மணி
செல்வராஜா மனோன்மணி

பழமுதிர்ச்சோலை, காரைநகர்.

தகவல்:
கனகசபை தர்மகுலசிங்கம்

(19031) (1-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கிளிநொச்சி புதுமுறிப்பு பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றை பராமரிப்பு செய்வதற்கு ஆள் தேவை.

மனித வள மேம்பாட்டு நிறுவனம்

மேலதிக விபரங்களுக்கு

**076-6454 852**

## வேலை ஆள்கள் தேவை

எமது அரைக்கும் ஆலைக்கு வேலை ஆள்கள் தேவை மற்றும் பொருட்களை நிறுத்து Bill போடக்கூடிய ஆண் ஒருவர் தேவை. (பழக விரும்புவரும் தொடர்பு கொள்ளவும்.)

(CS 43767) (3/6) **077 124 8265**

## மணமகள் தேவை

லண்டன் சிற்றிசன். 36 வயது. யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறிஸ்தவ மணமகனுக்கு மணமகள் தேவை. புகைப்படம், தொலைபேசி. எண் என்பவற்றை இணைத்து கீழ் கண்ட Gmail: Sathesmennen@yahoo.com என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

(CS 43772) (3/6)

## Luxury Apartment For Sale

வெள்ளவத்தை காலி வீதிக்கு அருகாமையில்

IBC Road ல் Under construction Apartments விற்பனைக்குண்டு.

**2,3, 4 படுக்கையறைகள்**

1500, 1400, 1200, 800 SQFT

- Bank Loan Arrange பண்ணித்தரப்படும்.
- Completion 2023 oct
- Interest Free மாத தவணை கட்டணம் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

Royal Construction PVT Ltd.

(aco. 18195) **077 522 2613**

## A/L இணைந்த கணிதம்

A/L 2022 மாணவர்களுக்கான வினா விடை வகுப்புக்கள் வீட்டிற்கு வந்து பிரத்தியேகமாகக் கற்பிக்கப்படும்.

(CS 43771) (4/6) **077 832 4002**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்ப 1981 பிறந்த சொந்த வியாபாரம் தொழில் உடைய. மூல நட்சத்திரம், 3ஆம் பாதம் உடைய யாழ்ப்பாணம். தென்மராட்சியை வதிவிடமாகக் கொண்ட மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (CS 43783) (3/6)

**074 258 7123**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்ஸா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி கச்சாய் வீதி கோவில் குடியிருப்பில் காணி விற்பனைக்குண்டு. (Aco 18192B) (4/6)

**076 915 5733**

## காணி விற்பனை

சாவகச்சேரி லேடிஸ் College வீதியிலும் ஸ்டேசன் வீதியிலும் காணி விற்பனைக்குண்டு.

**076 389 5962**

## வாடகைத் தாய் தேவை

IVF ஊசி மூலம் செய்வதற்கு 30 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப் படும். இரகசியம் பேணப்படும். (Aco 18193) (4/6)

**075 441 2764**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. (cs 43796) (2/6)

**077 264 8927, 077 262 7890**

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, வற்றாப்பளை, பிரதான வீதியில் 1/2, ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. (cs43793) (2/6)

**071 856 2098, 076 282 2904**

## காணி தேவை

யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட (பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, A-9 வீதி) காணி ஒன்று தேவையாக உள்ளது. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் (தரகர்கள் வேண்டாம்) (ACO 18196) (3/6)

**076 822 4764**

## பணிப்பெண் தேவை

கொழும்பிலுள்ள இரண்டு பேர் கொண்ட வீடொன்றிற்கு சமையல் தெரிந்த பணிப் பெண் தேவை. மற்றும் தனி அறையும், குளியலறையும் தரப்படும்.

(ACO 18194) (3/6) தொடர்பு : **076 030 6254**

## வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lovely Flower Cent க்கு பெண் வேலையாள்கள் தேவை. வயதெல்லை - 18 -35 (cs43792) (2/6)

**077 400 5023**

## பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் உள்ள தமிழர் வீட்டில் வீட்டுப் பணிப்பெண் வேலைக்கு தமிழ் பணிப்பெண் தேவை.

தேவி Whats app **006598340600** (CS 37714) (3/6)

## தொழிலாளர் ஒப்பந்தக்கார்ரர்கள் தேவை

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு இயக்கச்சியில் இயங்கி வரும் முருங்கை தோட்டத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் தோட்ட வேலைகள் செய்வதற்கு தொழிலாளர் ஒப்பந்தக்காரர்கள் தேவை.

- தரமான தொழிலாளர்களை தம் வசம் கொண்டுள்ளோர் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும் .
- வேலை அளவு ,ஒப்பந்த தொகை நேரில் பார்வையிட்ட பின் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
உதவி முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட ஹெரிடேஜ் அக்ரி,
இயக்கச்சி. **077 1 188 361**

Quick Ads

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அண்மையில் வெளிவந்த 2021
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றில்

### செல்வன் வே.சஞ்சீவன்

Congratulations 156 புள்ளிகளைப் பெற்று Congratulations
யா/ புன்னாலைக் கட்டுவன்
இந்து தமிழ் கலவன் பாடசாலையின்
65 வருடகால வரலாற்றில் முதற்தடவையாக
பெருமை சேர்த்த எமது மகனையும் அவருக்கு கற்பித்த
வகுப்பாசிரியர் திருமதி சுதானந்தன் மதிவதனி
அவர்களையும் ஏனைய எமது பாடசாலை ஆசிரியர்களையும்
இவ் வெற்றிக்காக பாடசாலையை வழிநடத்திய
அதிபர் திரு.த.ஸ்ரீமுரளி அவர்களையும்
மனதார வாழ்த்துகின்றோம்.

cs 19021)(2.6) வாழ்த்துவோர்: பெற்றோர்




2nd ஏப்ரல் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு - குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம்.நெல்லியடி
அனுமதிச்சீட்டுக்கள் - VIP, 1000/=, 500/=,300/= [300 ரூபா டிக்கெட் பெறுபவர்களுக்கு ஆசன வசதி இல்லை]
3nd ஏப்ரல் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தந்தை செல்வா மண்டபம்
அனுமதிச்சீட்டுக்கள் - VIP, 1000/=, 500/= நுழைவுச்சீட்டுகளுக்கு - 0741837707

Main Sponsor
HARI ENGINEERING
Alvai Road, Nelliyady, Jaffna.
Tel: 0212261400 / 0772830694

A7 ARRUL
அருள் ஜுவல்லறி
09, New Municipal Complex,
Kasthuriyar Road, Jaffna.
Tel: 0741837707

Arrul Global Express
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
10, மாநகரசபை புதிய கட்டிடத்தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Tel:0212223536

V.S.P Gingelly Oil
Parimala Stores
26, A, Manipay Road,
Jaffna.
Tel: 0212224135
Tel: 0212229165

சமுத்திராமஹால் Banquet Hall
K.K.S Road, Maruthanar Madam,
Chunnakam, Jaffna.
Tel: 0212243536/ 0776529583
Event Partner & Organizer

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
Tel: 0777225292
Press Partner

VEGILAND
Hospitality Partner

IDMNC INTERNATIONAL
Service Partner

Saravana Digital Print 0775631562

The Valampuri
Valampuri Hotel

Beauty sketch Dream World
Beauty Cosmetology institution & Mr & Mrs modeling Academy
+94771543899

The Phone Shop- Nelliyadi Tel: 0772850285
kajamugan Hardware Tel:02122228333
Rajan Cycle Works Tel:0775552973

டிக்கெட் கிடைக்கும் இடங்கள் கஸ்தூரியார் வீதி- Arul Jewellers (0741837707)
நெல்லியடி - The Phone Shop Tel: 0772850285
சுன்னாகம் - Ranjanas Tex Tel: 07777488201/0212240278
சாவகச்சேரி - V.M.K.Jewellers - Tel: 0773144756/ 0212270038
Arruls (Pvt) Ltd. (0741837707) (அனைத்துக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)

K.T.Prasath Tel: 0774718969
Event Management - Ceylon Art Creation (CAC)

**Ticket Hotline : 0741837707**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவையம்பதி அருள்மிகு
# சிவகாமி அம்மன் கோவில்

புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன சிறப்பிதழ் 2022



"வையமாய் வாழ்வாய் எங்கும் வல்லமைச் சக்தியாகி
மெய்ப்பொருள் ஞானச் சிவனின் மேனியின் பாகமாகி
பெய்வளம் சுரக்கும் இணுவை பெரும்பதி தனையே ஆளும்
தெய்வமாம் சிவகாமித் தேவி திருக்கழல்கள் போற்றி போற்றி"

## மஹா கும்பாபிஷேகம் இன்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை
## காலை 9.05 மணி முதல் மதியம் 11.05 மணி வரை

**அம்பிகை அடியார்களே!**

ஆன்மாக்கள் அனைத்தும் நல்வழிப்பட்டு பிறவிப்பயனை அடைதற்காக எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் திருவருட்சக்தியை வேதசிவாகம, தியான, ஆவாஹநாதி வழிபாட்டினால் உருவத்திருமேனிகளில் சாந்தித்தியம் பெறவைத்து பிரார்த்திப்பதே மஹா கும்பாபிஷேகத்தின் தத்துவமாகும்.

இந்து மஹா சமுத்திரம் ஈன்றெடுத்த முத்தென மிளிரும் குபேரபுரியாம் ஈழமணித்திருநாட்டில் கலையும், கல்வியும், கமமும் சிறப்புற்றோங்கும் யாழ்க்குடா மத்தியில் ஆன்றோர்கள், சான்றோர்கள், வணிகப் பெருமக்கள், தர்ம ஆன்மீகவான்கள் வாழும் இணுவில் கிராமந்தன்னில் அன்னை பராசக்தி தாய் சிவகாமி எனத் திருநாமம் கொண்டு அருளாட்சி புரியும் கோயில். பாரிய பளிங்குத்திருப்பணி, தெற்கு, மேற்கு, வடக்கு வாயில் அமைப்போடு கூடிய கோபுர கர்ன சாலை அமைப்பு, புராண கதா திருவுருவ சுதை அமைப்பு, இராஜகோபுர பாவை அமைப்பு, ஓம்காரநாத நூதன மணிக்கோபுர நிர்மாணம், பரிவார கோஷ்ட சந்நிதி அமைப்பு, பாரிய கூரை அமைப்பு என்பவற்றோடு பலமிக்க தூண்களும் கலைமிகு சிற்பங்களும், கண்கவர் வர்ணப்பூச்சும், கல்யாண மண்டபமும் எனப் பாரிய திருப்பணிகள் நிறைவுற்று அன்னை சிவகாமியின் அருட் கிருபையால் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவானது.

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ பிலவ வருஷம் பங்குனித்திங்கள் 13ஆம் நாள் இன்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை, உத்தராட நட்சத்திரமும் தசமி தியும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 09.05 மணி முதல் 11.05 மணி வரை வரும் இடபலக்ன சுபமுகூர்த்த வேளையில் நடைபெற இருப்பதால் இக்குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழாவில் கலந்து வழிபாடாற்றி விழாப் பொலிவைத்தரிசித்து இகபர சுகங்கள் பெற்று இன்புற்று வாழ்வீர்களாக.

## பங்குனித் திங்கள் 13ஆம் நாள் 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை

**அதிகாலை 5.00 மணி** ஸ்ரீஏகாக்ஷர கணபதி பூஜை, துவஜபூஜை, 8வது கால யாக பூஜை மூல காயத்ரீ மந்திர ஹோமம், நவகுண்ட சங்யா சம்யோஜனம், உபசார ஹோமம், ஜயாதி ஹோமம், மஹா பூர்ணாகுதி, அந்தர்பலி, பஹிர்பலி, உபசார பூஜை, தசதானம், யாத்ராதானம், சர்வமங்கல கோஷ சஹிதம் கும்ப மூர்த்திகள் வீதி வலம், புஷ்பாஞ்சலி, ஆலாத்தி, துவாரபாலார்ச்சனம்

**காலை 9.10 மணிக்கு** மணிக்கோபுர, விமான ஸ்தூபி, இராஜகோபுர கும்பாபிஷேகம், மூர்த்தி சம்ஜோயனம், மஹாகும்பா பிஷேகம், மஹாஹவிர் நிவேதனம், தேவாதிகள் குப்தபூஜை, ஸ்திராகுதி, எஜமான் அபிஷேகம், கர்ப்பாவரணம், தசமங்கல தரிசனம், சம்பாவனை பலசமர்ப்பணம், ஆசீர்வாதம் ஆசியுரைகள்,

**மதியம் 12.00 மணிக்கு** மஹா அபிஷேகம், விஷேட பூஜை

**மாலை 5.00 மணி** சாயரட்ஷை பூஜை, வசந்த மண்டப பூஜை, நவசக்தி அர்ச்சனை, திருஊஞ்சல், திருவீதியுலா

### விண்ணக ஆசி

ஸ்வர்க்கீயஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள்

ஸ்வர்க்கீயஸ்ரீ சோ.சாம்பசிவ ஐயர்

ஸ்வர்க்கீயஸ்ரீ சா. குமாரசாமிக் குருக்கள்

ஸ்வர்க்கீயஸ்ரீ தானு. அரிகரசுப்பிரமணியக்குருக்கள்

ஸ்வர்க்கீயஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள்

### அருளாசி வழங்கும் விப்ரசதஸ்

சிவாகம கிரியா பூஷணம்
**சிவஸ்ரீ.ச. பரமேஸ்வரக்குருக்கள்**
ஆதீன கர்த்தா
ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோவில் – உரும்பிராய்
பிரதமகுரு ஸ்ரீ கந்தசுவாமிகோவில் கோலாம்பூர்
(மலேசியா)

சிவாகம ஞான பாஸ்கரன்
**சிவஸ்ரீ.தானு. மகாதேவக்குருக்கள்**
அதிபர்,
தர்மசாஸ்தா குருகுலம்
காயத்ரீ பீடம் – இணுவில்

வைதீக ஞான திலகம்
**சிவஸ்ரீ.ச.சோமஸ்கந்தக் குருக்கள்**
வைதீக வாத்தியார்
மயிலணி, சுன்னாகம்

**சர்வ சாதகாச்சார்யர்**
சிவாகம கலாநிதி, சைவ சித்தாந்த சரபம்
சிவஸ்ரீ.A.V. சுவாமிநாத சிவாச்சாரியார்
அதிபர், சிவபுரம் வேதசிவாகம
பாடசாலை குருகுலம்
மயிலாடுதுறை, தமிழ்நாடு,
இந்தியா

**பிரதிஷ்டா பிரதமகுரு**
"வேத சிவாகம கிரியாரத்னம்"
சிவஸ்ரீ.சாம்பசிவ.சோமசபேசக் குருக்கள்
பிரதம குரு,
அருள்மிகு சிவகாமி அம்மன் கோவில்
இணுவில்

**சர்வபோதகாச்சார்யர்**
"மந்திர கிரியா சுரபி"
சிவஸ்ரீ. குமார.சரவணபவக்குருக்கள் JP.
பிரதமகுரு. ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத
விஸ்வநாத சுவாமி கோவில்
காரைக்கால்
(இணுவில்)

**ஸ்தபதி**
கலியபெருமாள்
புருஷோத்தமன்
ஸ்தபதி
கொள்ளிடம், சீர்காழி,
தமிழ்நாடு

### அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

## தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்

**இணுவில் கிழக்கு**

**ஆதீன கர்த்தா**
**திரு.மு.சிவலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







முதலாம் பக்கத் தொடர்ச்சி

## யாழ். மாவட்ட...

நிறுவனம் ஒன்று நகரப் பகுதியிலுள்ள தனது 'யார்ட்டில்' வைத்து எரிவாயு விநியோகத்தை முன்னெடுத்திருந்தது. அங்கு வைத்து அதனை முன்னெடுக்க வேண்டாம் எனவும் அந்த விநியோக நிறுவனத்தின் பிரதேச முகவர்களுக்கு எரிவாயு சிலிண்டர்களை பகிர்ந்து வழங்கி விநியோகத்தைச் சீராக்குமாறும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் மற்றும் ஒருங்கிணைப்பு இணைத் தலைவர் இ. அங்கஜன் ஆகியோர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் எரிவாயுவை விநியோகிக்கும் தனியார் நிறுவனம் பிரதேச செயலகங்களை நாடி, பிரதேச செயலக ஊழியர்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் தருகின்றோம் எனத் தெரிவித்துள்ளது. பிரதேச செயலக ஊழியர்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் பெற்றுக் கொண்ட பின்னர் எஞ்சியதை மக்களுக்கு விநியோகிக்குமாறும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

எரிவாயு விநியோகம் தொடர்பாக மாவட்டச் செயலரால் எந்தவொரு சுற்றறிக்கையும் பிரதேச செயலர்களுக்கு அனுப்பப்படாத நிலையில், பிரதேச செயலர்கள் எரிவாயு நிறுவனத்தின் 'வியாபாரத்தை' தமது பிரதேச செயலகங்களில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

எந்த அடிப்படையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பது என்பது உள்ளிட்ட எந்தவொரு திட்டமிடலும் இல்லாமல், தமக்கு வேண்டப்பட்டவர்களுக்கு மாத்திரம் எரிவாயு சிலிண்டர் விநியோகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சில பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதேச செயலகங்கள் எரிவாயு விற்பனை செய்யும் கள்ளச் சந்தையாக மாறிவிட்டனவா? என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ-ஓ-5)

## படைத்தரப்பின்...

பேரணியொன்றை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 3ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகும் கண்டனப் பேரணி, முற்றவெளியில் முடிவடையும்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட போது அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான ஒரு கலந்துரையாடல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்புக்களின் தலைமையில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போது பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

கலந்துரையாடலுக்கு பின்னர், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலர் அலீலாவதி, மேற்படி பேரணி தொடர்பான தகவலை ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தினார்.

(அ-ஓ-இ)

கருத்தரங்கு

Information &
Communication Technology (ICT)
யாழ்ப்பாணத்தில்
தகவல் தொடர்பாடல்
தொழில்நுட்ப உலகில் நவீன
தொழில்நுட்பத்துடன்

"Cyber Security"

காலம்: 02-04-2022,
சனிக்கிழமை காலை 10.00 -12.00

- யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்கள் க.பொ.த சா.த. உயர்தர பரீட்சைகளிற்கு தோற்றியவர்கள். உயர் கற்கைநிறுவனங்களின் மாணவர்கள் கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.
- பாடசாலைகளில் கணினி விஞ்ஞானத்துறையில் ஆர்வமுடையவர்கள் பங்குபற்ற முடியும்.
- அனுமதி இலவசம். அனுமதிகளை 01-04-2022 இற்கு முன்பாக பெற்றுக் கொள்ளவும்.

Certificate ⇨ Diploma ⇨ Degree

அனுசரணை
Institute for Cyber Security Education in Srilanka @
Srilanka Institute of Professional Studies, Colombo.
0214340229/0766852529 www.CICRA.edu.lk

தவக்காலச் சிந்தனை

## கூட்டிணைவே உயர்வுக்கு உரம்

வானுயர்ந்த அழகுநிறைந்த கோபுரமொன்று நகரின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் கம்பீரத் தோற்றத்துக்கு பல்வேறு துறைகள் சார்ந்தோரின் பங்களிப்பே காரணமாகும். நான்தான் திறம்பட அழகு சேர்த்தேன் என எவரும் பெருமை பாராட்ட முடியாது. அனைவருமே அதன் சிறப்புக்கு உரித்தானவர்கள்.

அவ்வாறே மனித சமுதாயக் கட்டமைப்பு பல்வேறு ஆற்றல்கள், திறமைகள், புலமைகளைக் கொண்டோரின் கூட்டு முயற்சியாலேயே கட்டி எழுப்பப்படவேண்டும். ஏனெனில் இறைவன் எமக்கு கொடைகளை வழங்குவது பொது நன்மைக்காகவே. ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளமும் இன்னொருவருக்கு அறிவுசார்ந்த பேச்சாற்றலும் வேறொருவருக்கு பிணிதீர்க்கும் அருங்கொடைகளையும் அடுத்தவருக்கு இறைவாக்கு உரைக்கும் வல்லமையும் அருளப்படுகிறது. இவற்றைநாம் எந்த வகையில் சமுதாய உயர்வுக்காகப் பயன்படுத்துகின்றோம்.

வெவ்வேறு வயல்களில் விளைந்த கோதுமை மணிகள் வெண்ணிற அப்பமாக உருமாற்றம் பெறுவதுபோல, எமது திறமைகள், வல்லமைகள், அதிகாரங்கள், பணபலங்களை புரிந்துணர்வுடன் ஒன்றிணைத்து சமுதாயத்தையும் நாட்டையும் வளம் நிறைந்ததாக மாற்றப் பயன்படுத்துவோம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

## தந்தை செல்வா ஞாபகார்த்த உரை

யாழ்ப்பாணம், மார்ச் 27

தந்தை எஸ்.ஜே.வி.செல்வ நாயகத்தின் 94ஆவது பிறந்த தி[illegible]தை முன்னிட்டு ஞாப கார்த்த வி[illegible] உரை எதிர் வரும் 31ஆம் [illegible] மாலை 4 மணிக்கு யாழ்[illegible]சன். ஜோ[illegible] கல்லூரி கிறிஸ்[illegible]தேவாலயத்[illegible] இடம்பெறவுள்[illegible] ஞாபகார்த்த உ[illegible] தென்னிந் திருச்சபை பே[illegible] வண.கலா[illegible] எஸ். ஜெபநேச[illegible]றங்கவுள்[illegible] ஏற்பாட்[illegible]வின் தலை[illegible] தெரிவித்துள்ள[illegible] (சு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அஞ்சலியும்



பிறப்பு 12 08 1932

இறப்பு 25 02 2022

கடந்த (25.02.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

## செல்லத்துரை தங்கம்மா

(குஞ்சம்மா)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செட்டிவளவு, அளவெட்டி வடக்கு,
யாழ்ப்பாணம்.

பிரிவின் துயரில்
குடும்பத்தினர்

# லொறி சாரதி(Driver) தேவை

யாழ். பலாலி வீதியில் இயங்கும் Transport நிறுவனம் ஒன்றிற்கு பார ஊர்தி சாரதி அனுமதி பத்திரம் உள்ள அனுபவம் மிக்க சாரதி ஒருவர் உடன் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0777 111 444

(CS 190448) 1-6

# ஆண்/பெண் பணியாளர் தேவை

யாழ். நகர். பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து கிளினிங் வேலை செய்வதற்கு ஆண் ஒருவரும், சமையல் உதவி, சிறுபிள்ளையை பராமரிப்பதற்கு பெண் ஒருவரும் தேவை. சம்பளம் 30,000 + உணவு + தங்குமிடம் வழங்கப்படும். மொத்த சம்பளம் 45,000/=

தொடர்புகளுக்கு: 0777 157 070

(CS 1060) 1-6

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 14 . 03 . 1935

விண்ணில் 27 . 03 . 2021

அமரர் திருமதி பாக்கியம் ஐயம்பிள்ளை

(ஓய்வுநிலை அதிபர் - காரைநகர்)

அன்பான குடும்பத் தலைவியாய் நல்வழிகாட்டியாய்
இறை நம்பிக்கையுடன் எமை ஆதரித்து
அறிவூட்டி வளர்த்த எம் அன்னையை
என்றும் மாறா நினைவுடன்
அஞ்சலி செய்யும்...

11/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 19043) 1-6

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### ஜெய் சங்கர்...

வுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### விலையை...

தெரிவித்துள்ளார். அத்துடன் எரிபொருள் கூட்டுத்தாபனம் பெற்றோல் விலையை தற்போது அதிகரிக்காது எனவும் குறிப்பிட்டார்.

'கடந்த தடவை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள்களின் விலையை அதிகரித்தபோது, அதன் அதிகாரிகளை அழைத்து, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலையுடன் சமப்படுத்துமாறு கூறினோம். அவர்களுடனான ஒப்பந்தத்தை ஆராய்ந்து, எவ்வாறு அழுத்தம் கொடுக்க முடியும் என்பது குறித்து ஆராயுமாறு செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளேன். அழுத்தம் கொடுக்க முடியுமாயின், நாளை திங்கட்கிழமை அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்து, அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார். (அ-ஒ-இ)

# மரண அறிவித்தல்



## இராசையா கௌசலாதேவி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கௌசலாதேவி அவர்கள் நேற்று (26.03.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை கனகரத்தினம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இராசையா (சாத்திரியார்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசமலர் மற்றும் சுசிலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாமினி, யசோதினி, நிமலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பஞ்சாட்சரம், செல்வானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கோபிலக்ஷன், கிரிசன், ஜனகன், கிறித்திஷா, அபிகேசன், லிதியா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், அகஸ்தியன் (ஜேர்மனி), வினோ (நோர்வே), பிரதிபா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வராகி அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 161 7564

(CS 19037)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## திருமதி சிரோன்மணி பாலசுப்பிரமணியம்

புங்குடுதீவு காளிகோவிலடி 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.58, நாயன்மார் வீதி நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிரோன்மணி பாலசுப்பிரமணியம் நேற்று (26.03.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், பாலலம்போதரன், தர்சினி, பாலசுதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காயத்திரி, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், டியானவின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அன்னலக்சுமி, நமசிவாயம் மற்றும் சண்முகலிங்கம், தங்கராஜா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் கிருஷ்ணாம்பாள், யோகேஸ்வரி காலஞ்சென்ற சந்திரா, காலஞ்சென்றவர்களான தங்கராசா, சரஸ்வதி, பரமேஸ்வரி மற்றும் சிவானந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்-பாலலம்போதரன்

(CS 19037) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவர் விவகாரம்:

# மனிதாபிமான அடிப்படையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்க!

## இந்தியத் தரப்பு இலங்கையிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

மீனவர்கள் தொடர்பான இலங்கை - இந்திய இணைக்குழுவின் 5ஆவது கூட்டம் தொலைகாணொலி ஊடாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. கடற்றொழில் அமைச்சின் செயலர் மற்றும் இந்திய மீன்பிடி அமைச்சின் அதிகாரிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற இறுதிக் கலந்துரையாடலை அடுத்து, ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

மீன்பிடிப் படகுகளை தடுக்கும்போது எந்தவித உயிரிழப்பும் ஏற்படாத வகையில் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளை இந்தியத் தரப்பு கோரியுள்ளது. அத்துடன் மனிதாபிமான அணுகுமுறையின் அடிப்படையில் மீன்பிடிப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு இந்தியத் தரப்பினர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். இரு நாட்டு மீனவர்களினதும் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு என்பன குறித்து இருதரப்பும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

(அ-ஒ-இ)

இறுதிக் கிரியையின்போது

# மின்னல் தாக்கத்தால் 25பேர் மருத்துவமனையில்

கொழும்பு, மார்ச் 27

மாவனெல்லை - பெமினிவத்த பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் சிறுவர்கள் உள்ளிட்ட 25 பேர் மருத்துவமனையில் நேற்று மாலை சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறுதிக்கிரியைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இவ்வாறு மின்னல் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-இ)

### அரசின்...

வசித்து வரும் ஆடம்பர அரச மாளிகையை மீண்டும் அரசிடம் கையளித்துவிட்டு, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனக்கு தரப்பட வேண்டிய அரச குடியிருப்பு தொகுதி வீட்டிலிருந்து, அந்தப் பேச்சில் கலந்து கொள்ள சம்பந்தன் வரமுடியுமாக இருந்தால், பேச்சு மேசையில் அவரின் ஆக்ரோஷக் குரலுக்கு பலமடங்கு பலம் சேரும் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கூட்டமைப்புடன் நடந்த உயர்மட்ட பேச்சில், அரசால் மேலோட்டமான முறையில் வாக்குறுதிகள் தாராளமாக வழங்கப்பட்டிருக்கும் நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசின் சார்பில் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கும் சகல அத்துமீறல்களும் அடாவடி நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்படாத வரையில், இந்த வாக்குறுதிகள் எல்லாம் விரைவில் அர்த்தம் அற்றுப் போய்விடும்.

அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப்பதிலும், நீண்ட பல வருடங்களாக சிறைக்குள் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை, காலதாமதம் செய்யாமல் விரைவாக விடுவிப்பதிலும் அரசுக்கு எந்தத் தடையும் இருக்க முடியாது.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி திணறிக் கொண்டிருக்கும் அரசுக்கு இந்தியாவின் உதவியும், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகளின் ஆதரவும் அவசரமாக தேவைப்படும் இக்கட்டான இந்த நேரத்தில், தமிழர்களை அனுசரித்துப் போவதான ஓர் தோற்றப்பாட்டைக் காட்டுவதற்கு அது முயற்சிக்கின்றது என்பது தெட்டத் தெளிவானது.

காணாமலாக்கப்பட்ட தமிழர்களின் விவகாரத்தில், இந்த அரசு எதுவும் செய்யமாட்டாது. அப்படிச் செய்வதாக இருந்தால் தமக்குத் தாமே படுகுழி தோண்டுவதாகவே அது இருக்கும் என்பதும் அரசின் தலைவர்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் காசைத் தந்து, கண்ணீர் விடும் உறவுகளின் வாய்களைமூட வைக்கலாம் என்ற முட்டாள்தனமான சிந்தனை மேலோங்கி நிற்கின்றது.

பௌத்த - சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதியும், பிரதமரும், ஏனைய பிரதான அமைச்சர்களும் கைவிடுவார்கள் என்று எங்களில் யாராவது நம்பினால், அதைவிட அரசியல் அறியாமை வேறு இருக்கவே முடியாது - என்றுள்ளது. (அ-ஒ-26)

### அழிக்கப்பட்ட...

சில தினங்களுக்கு முன்னர் அரசின் அதிருப்தி குழுக் கட்சிகளின் தலைவர்கள் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கம்மன்பில, விடுதலைப் புலிகள் ஆயுதத்தால் பெற முடியாததை கூட்டமைப்பு டொலரை முன்னிறுத்தி பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. அதனால்தான் சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொண்டது என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் கேட்ட போது,

'கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோர் இனவாதத்தை முன்வைத்துத்தான் தமது அரசியலை நடத்தி வருகின்றார்கள். அரசுக்குள்ளிருந்தும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டார்கள். இதனால் அரசு பெரும் அவப்பெயரைச் சந்தித்தது. தற்போது அரசுக்கு வெளியில் சென்றும் இனவாதக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள். இவர்களின் இந்தக் கருத்துக்கள் ஜனாதிபதி ஆரம்பித்துள்ள கூட்டமைப்புடனான பேச்சுக்கு எந்த விதத்திலும் தடங்கலை ஏற்படுத்தாது. அதே வேளை, தமிழ் - சிங்கள உறவிலும் பாதிப்பு ஏற்படுத்தாது. அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளை முன்வைத்து கம்மன்பில, எத்தனை நாளைக்குத்தான் அரசியலை முன்னெடுக்கப் போகின்றார்கள்? சர்வகட்சி மாநாட்டிலும், ஜனாதிபதியுடனான பேச்சிலும் கூட்டமைப்பினர் பங்கேற்றமையை வரவேற்கின்றேன். ஜனாதிபதி தலைமையிலான அரசு கூட்டமைப்புடனான பேச்சுக்களைதொடர்ந்துமுன்னெடுத்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்கும்' - என்றார் பஸில் ராஜபக்ச. (அ-ஒ-5-22)

### வாகனத்தால்...

நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்று மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகாயம் அடைந்த நிலையில் காயத்துடன் நபர் ஒருவரை வாகனம் ஒன்றில் மூவர் கடத்தி வந்தனர். அந்த வாகனத்திலிருந்து காயத்துடன் காணப்பட்ட நபர் தப்பி ஓடுவதற்கு முயன்று வீதியில் குதித்து ஓடியுள்ளார். தப்பி ஓடியவரை வாகனத்துடன் கடத்தல்கார கும்பல் விரட்டியுள்ளது. தப்பி ஓடியவரை வாகனத்தில் அதிவேகமாகச் சென்ற கடத்தல்கார கும்பல் மோதியது என்றும், அதனையடுத்து வாகனத்தில் பயணித்த கடத்தல்காரர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர் எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

கனகபுரம் வீதியில் உள்ள மதுபான விடுதியில் இருந்தே குறித்த நபர்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர். படுகாயம் அடைந்தவர் அதிதீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இது கொலை முயற்சியாக இருக்கலாமா என்ற கோணத்தில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-113)

### வரிகளை...

உறுதிப்பாடு மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில், நம்பகமான, தெளிவான மூலோபாயங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவது உடனடி அவசியப்பாடாகும்.

பாதிப்புமிக்க குழுக்களைப் பாதுகாத்து, வறுமையைக் குறைப்பதற்கு சமூக பாதுகாப்பு முறைமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கொரோனா பரவல் இலங்கையின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளதுடன், சுற்றுலாத்துறையின் வருமான இழப்பு அதில் பிரதானமாக உள்ளது.

தொற்றுநோய்க்கு முந்தைய வரி குறைப்புகள் மற்றும் கொரோனாத் தாக்கம் காரணமாக 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் இலங்கையின் நிதிப் பற்றாக்குறையானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்தைக் கடந்தது.

கடந்த ஆண்டு, அரச கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நூற்றுக்கு 119 சதவீதமாக உயர்ந்ததுடன், சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கான அணுகல் இல்லாமற்போனது. வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவுகள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை விரிவாக்கம் காரணமாக அந்நியச் செலாவணி பற்றாக்குறை உருவாகியுள்ளது.

இலங்கையானது, கொடுப்பனவு சமநிலை மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடியை அனுபவிக்கத் தொடங்கியதுடன், வெளிநாட்டு இருப்புக்கள், கடனைச் செலுத்துவதற்குப் போதுமானதாக இன்மையால், அரசகக் கடன் சுமை அதிகரித்தது.

பரிமாற்ற கையிருப்பை கட்டியெழுப்புவதற்கு அதிகாரிகள் குறுகிய கால நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், இந்த வருடத்துக்கு அப்பால் இலங்கையால் எவ்வாறு மிகப் பெரிய கடன் சேவையை பேண முடியும் என்பது தெளிவற்றதாகும்.

இந்தச் சூழலில் நிதி உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்புவது, வருமான வளர்ச்சியின் அடிப்படையில் அமைய வேண்டும். 'வற்' எனப்படும் பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரி விகிதங்களை அதிகரித்தல் மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகள் மூலம், சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

நிதி அபாயத்தைக் குறைக்கும் வகையில், வலுசக்தி விலை நிர்ணயம் சீராக்கப்பட வேண்டும் என்பதுடன், நஷ்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை மீள்கட்டமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### 2 பத்திரிகைகள்...

ஆங்கில நாளிதழான ஐலண்டையும், சிங்கள நாளிதழான திவயினவையும் எதிர்காலத்தில் இணையப் பதிப்பின் மூலமே வாசிக்க முடியும் என்று அறிவித்துள்ளது. அச்சுத்தாள் தட்டுப்பாடே இதற்கு காரணம் என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-இ)

### அரசு - ...

இடையிலான பேச்சுக்கள் தொடர வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

'தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பை அமெரிக்கா வரவேற்கின்றது. இந்தச் சந்திப்புத் தொடர வேண்டும் என்று ஊக்குவிக்கின்றது' என்று அவர் பதிவிட்டுள்ளார். (அ-ஒ-5)

### எரிபொருள்,...

மொரு கப்பல் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நாட்டுக்கு வரவுள்ளது.

இதேநேரம், நாட்டை வந்தடைந்துள்ள எரிபொருள் கப்பலிலிருந்து, 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மற்றும் விமான எரிபொருள் என்பவற்றைத் தரையிறக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் 3 ஆயிரத்து 650 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பலொன்று நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் உற்பத்தி...

வழங்கப்பட்டுள்ளதாக வலுச்சக்தி அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

கெரவலப்பிட்டி அனல் மின்நிலையம் எரிபொருள் பற்றாக்குறையால் கடந்த 24ஆம் திகதி முதல் செயலிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## ரெலோ...

மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கத்திலிருந்து 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்கள் அரசுக்கு வழங்கப்பட்டதாகவும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. தமிழர் அரசியலை ஒற்றையாட்சிக்குள், 13ஆம் திருத்தத்துக்குள் முடக்க கூட்டமைப்பு முயல்கின்றது என்று நாம் தெரிவித்து வந்த கருத்துக்களானது மீண்டும் மீண்டும் உறுதியாவதாகவே கருதுகிறோம்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதும் முயற்சியை ஆரம்பித்தது ரெலோ. அந்தக் கட்சி ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஆவது திருத்தத்தையே நடைமுறைப்படுத்தக் கோருகின்றது. அவர்கள் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளாமை கேள்விக்குறியே. அவர்கள் அந்த நிலைப்பாட்டில் இல்லை என்றால், கூட்டமைப்பிலிருந்து வெளியேறவேண்டும். கடந்த காலங்களில் புலம்பெயர் தமிழர்களை தடை செய்த அரசு, தற்போது பொருளாதார நெருக்கடி எழுந்துள்ளபோது அந்தப் புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கின்றது. புலம்பெயர் தமிழர்கள் மீதான தடையை நீக்குவதற்கு கூட அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி உள்ளது. எனவே புலம்பெயர்ந்த தமிழர்கள் மீதான தடை என்பது கூட தேசியப் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது அல்ல. அரசின் நிலைப்பாடு சம்பந்தப்பட்டதே என்பதையே இது காட்டுகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்யவேண்டுமானால் அவர்களது நம்பிக்கை கட்டியெழுப்பப்படும் வகையில் தமிழ் மக்களுக்கான தீர்வு காணப்படவேண்டும்.
-என்றார்.

(அ-ஒ-26)


### அறை வாடகைக்கு உண்டு

இல.10(26) அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் 2 பெண் பிள்ளைகள் தங்குவதற்கு சகல வசதிகளுடன் அறை வாடகைக்கு உண்டு. (தரகர் வேண்டாம்)
தொடர்பு:T.P.No: 074 266 0079

### வீடு வாடகைக்கு

இருவர் அடங்கிய சிறிய குடும்பத் திற்கு ஏற்ற தனி வீடு யாழ் மாநகர சபை எல்லைக்குள் கைலாச பிள்ளையார் கோவில் அருகாமையில் வாடகைக்கு உண்டு.மதியம் 2.00 மணிக்கு பின்பு தொடர்பு கொள்ளவும். (CS19017) (3/6)
077 408 1751

### தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு Cooler வாகன ஓட்டுநர் ஒருவர் வேலைக்குத் தேவை. (CS 43738D) (3/6)
0773656826/0774988239

### தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு விற்பனை பிரதிநிதி (Sales Rep) ஒருவர் வேலைக்குத் தேவை. (CS 43738C) (3/6)
0773656826/0774988239

### கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு தமிழ். ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தட்டச்சு செய்யக்கூடிய கணினி தட்டெழுத்தாளர் தேவை. [போட்டோ சொப் Photo Shop) மற்றும் சுருக்கெழுத்து ஆகியவற்றில் பரீட்சயம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்] கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (cs 43790) (2.6)
074 046 2464

### காணி விற்பனைக்கு

பழம் றோட், உடையார் ஒழுங்கை திருநெல்வேலியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. (CS 43737)(3/6)
075 311 2039 / 076 244 2626

### உடனடி வேலைவாய்ப்பு

பச்சிலைப்பள்ளி (பளை) மற்றும் துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தேங்காய் எண்ணெய் ஆலைக்கு வேலை ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
ஆர்வமுள்ளவர்கள் கீழ் காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம் - 077 899 8853 குறித்த பிரதேசங்களில் வசிப்பவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். cs 43769) (2.6)

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

### விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களுடன் கூடிய கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு 077 214 6148
(CS 19014) (3/6)

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பான்சி, நகை கடைக்கு வேலையாள்கள் தேவை. (ஆண், பெண்) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (cs19024) (2.6)
077 260 4233

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகரை அண்டிய பிரதேசத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை (வசிப்பிட தேவைக்கு) (cs43791) (2.6)
074 214 5947

### தேவை

பொதிகள் சேவைகள் நிறுவனம் ஒன்றில் உதவியாளர் பணிக்கு ஆள் தேவை.
யாழ். நகருக்கு அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:074 200 1212, 075 330 5500

### காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 2 பரப்பு. 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(CS 19004) (3/6) தொடர்பு : 076 675 7518

### வேலையாள்கள் தேவை

பளையில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு தோட்ட வேலைக்கு மூவர் தேவை. உணவு. தங்குமிடம் வழங்கப்படும். (CS 43738B) (3/6)
0773656826/0774988239

### வாகன ஓட்டுனர் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு கனரக வாகன ஓட்டுனர் ஒருவர் வேலைக்குத் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். (CS 43738A) (3/6)
0773656826/0774988239

### மருந்தாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கவுள்ள மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை.
(CS 19014) (3/6) 074 015 8809

### காணி விற்பனைக்கு

தெல்லிப்பழையில் 32 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தெல்லிப்பழை-கட்டுவன் காப்பெற் வீதியிலிருந்து 100M தூரம். தெல்லிப்பழை வைத்திய சாலை, புகையிரத நிலையம் 1 km பலாலி விமான நிலையம் 2 1/2 km பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு:077 540 4741

### இணைந்த கணிதம்

இலகுவிலும் இலகுவான முறையில் கற்றுத்தரப்படும்
Mr.குணா
Former teacher St.John's College (cs 19019) (2.6)
076 603 3324

### ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்
A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.C.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள் Language தரமும் திருத்தப்படும். (cr.37713) (2.6)
K.Ganesh B.A 077 766 8725

### சிறுநீரகம் தேவை

சிறுநீரகம் பாதிக்கப்பட்ட 25 வயதுடைய ஒருவருக்கு. A or O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (cs 19020) (2.6)
077 006 6599

### தேவை

பாவித்த நிலையில் உள்ள பெண்கள் பயன்படுத்தக்கூடிய மோட்டார் சைக்கிள் தேவை. T.V.S Scooty, Chaley Honda, TVS XL, Hero Stream மற்றும் எலக்ரிக் மோட்டார் சைக்கிள் தேவை.
(CS 19008) (3/6) தொடர்பு : 077 247 4740

### வாடகைக்கு

381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் Maxwell building (கட்டடம்) வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் Clinic நடத்த விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும் நீர் வசதி. Bathroom, AC வசதிகளுடன் கூடியது.
(CS 43724) (3/6) 077 610 6183

### நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
### Water Proofing

மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவு.
சீமெந்திலான இல்லங்கள், கடைகளில் சீமெந்திலான தளத்தில் இருந்து வரும் வெப்பத்தை நவீன முறையில் நிறுத்தி தருகின்றோம். 10 வருட உத்தரவாதத்துடன் சீர்செய்து தருகின்றோம்.

போலி இரசாயனத்துடன், போலிமுகவர்கள் உங்கள் இல்லம் தேடிவந்து கேட்பார்கள் ஏமாறவேண்டாம்

10 வருட முன் அனுபவமுள்ள ஊழியர்களை கொண்டு உத்தரவாத்துடன் சீர் செய்து தருகின்றோம். (cs 43786) (2.6)

FINEX இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000



### வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

**வரவேற்பாளர்**
தகைமை: க.பொ.த. உயர்தரம்

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்**
தகைமை: க.பொ.த. உயர்தரம்

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் 28/03/2022 திங்கட்கிழமை மு.ப 09.00 மணிமுதல் ந.ப 12 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சா்வமும் நாசமாகி நாடே நரமாக மாறிக்கிடக்க
சா்வகட்சி மாநாடு வைச்சிங்கே நடக்குது கச்சேரி
கா்வமும் அகந்தையும் கொண்டிருந்த கோத்தா இப்போ
'தா்மப்பிரபுக்களே' என்று திருவோடு ஏந்துகிறாா் பாா்!

– ஒட்டுக்குழுச் சுவாமிகள்

சஞ்சீவி

பக்கங்கள்: 12

மலை : 33 | வள்ளுவா் ஆண்டு : 2053 | பங்குனி 13 | ஞாயிற்றுக்கிழமை 27.03.2022 | சிகரம் : 92

1898, 1899 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட உயர்நீதிமன்றவழக்காக நடைபெற்று முடிந்த அழகம்மா கடத்தல் வழக்கு அந்தக்கால யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் நிலைமைகளையும் விளங்கிக் கொள்ள இன்றும் உதவுவதாக உள்ளது.



# அழகம்மா

## கடத்தல் வழக்கு

11

○ தி.கோபிநாத்

அழகம்மா கடிதம் எழுதியது இராசையாவுக்குத் தான் என்பதாக நிறுவிவிட்டால் இராசையா மீண்டும் வழக்கில் இருந்து விடுதலை பெற்று விடமுடியும். நல்லம்மாவின் கடிதம், அழகம்மாவின் கடித உள்ளடக்கம் என்பன அதற்கான தடைக்கற்களாக இருந்தன.

பல்வேறு சாட்சியங்கள் ஊடாக அழகம்மாவும், நல்லம்மாவும் ஹண்ட் வீட்டில் சந்தித்தனர் என்பதாக இராசையா தரப்பினால் வழக்கு நகர்த்தப்பட்டது.

அத்துடன் நல்லம்மாவின் கடிதம் சிவப்பு மையில் எழுதப்பட்டிருந்தது. நல்லம்மா பாடசாலையில் விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தபோதே குறித்த கடிதம் எழுதப்பட்டது. வேம்படியில் சிவப்பு மையே பயன்பாட்டில் இருக்கவில்லை. சிவப்பு மையால் எழுதப்பட்டமையால் அது பாடசாலையில் இருந்து எழுதிய கடிதம் அல்ல என்பதாக எதிரித் தரப்பு வாதத்துக்கு மேலும் வலுச்சேர்க்கப்பட்டது.

ஹென்றி முத்தையா செல்லப்பா, றிச்சட் நாகமுத்து சபாபதி ஆகிய இரு தலைமை ஆசிரியர்கள் முக்கிய சாட்சியங்களாக அமைந்தனர். இவர்கள் வேம்படியின் ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகளுக்குத் தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்கள். இந்த வழக்குடன் தொடர்புபட்டமையால் அவர்கள் இருவருமே தமது தலைமை ஆசிரியர் பதவிகளை இழந்திருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. வேலை இழந்த பிறகு சபாபதிக்கு இராசையாவின் மைத்துனரான அலெக்சாந்தரின் கடையில் எழுதுவினைஞர் வேலை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தலைமை ஆசிரியர்களின் சாட்சியத்தின்படி மாணவிகள் வேம்படிக்கு பேனை, பென்சில், மை ஆகியவற்றைக் கொண்டுவர முடியாது. பாடசாலையாலேயே அவை வழங்கப்பட்டன. பாடசாலையில் கறுப்பு மை மட்டுமே வழங்கப்பட்டது. அவ்வகையில் கடிதம் பாடசாலையில் இருந்து எழுதப்பட்டிருந்தால் கறுப்பு மையாலேயே எழுதப்பட்டிருக்கும்.

நிறைவுப் பகுதி

செல்லம்மா தில்லையம்பலம், செல்வி சேதுப்பிள்ளை, இராசம்மா பிரடெரிக் ஆகிய வேம்படி மாணவிகளது சாட்சியங்களும் இராசையா தரப்பினைப் பலப்படுத்தின. அவர்களது சாட்சியங்களின் படியும் பாடசாலையில் கறுப்பு மை மட்டுமே பயன்பாட்டில் இருந்தது. அத்துடன் இராசையாவும் அழகம்மாவும் ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்ததை தாம் அறிந்திருந்ததாகவும் அவர்கள் சாட்சியமளித்தனர்.

நல்லம்மாவின் சகோதரியான பூரணம் இளையதம்பி வழக்குத் தொடங்கிய பின்னர் பாடசாலையில் சில கடிதங்களை எரித்தமையும் சாட்சியங்கள் ஊடாகக் கவனப்படுத்தப்பட்டது. அதாவது நல்லாம்மாவிடம் இருந்த கடிதங்களில் அழகம்மா தரப்பு எரிக்க வேண்டியதாக நினைத்த விடயங்கள் இருந்தன என்ற சந்தேகம் உருவாக்கப்பட்டது.

அடுத்ததாக அழகம்மாவின் கடித உள்ளடக்கம் வழக்கின் முக்கிய பேசுபொருளாக அமைந்தது. கடிதத்தின் முதற்பகுதி பான்னி (Fanny) என்பவர் தொடர்பானது. நயில்ஸ் போதகரின் சகோதரர் வோல்ற்றனின் மகளே பான்னி. அழகம்மாவுக்கு ஒன்றுவிட்ட சகோதரி. இராசையாவின் கடிதம் ஒன்றினை முன்னர் அழகம்மாவுக்கு வழங்க முயன்றவர். அவ்வகையில் இராசையாவுடனும் அழகம்மாவுடன் நேரடியாக இராசையா தொடர்புபட்டவர் என்பதால் இராசையாவுக்கான கடிதத்தில் பான்னி பற்றி எழுதப்பட்டிருப்பது குறிப்பி டத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தவில்லை.

கடிதத்தில் வெட்டப்பட்டிருந்த வரியான "ரெத்தினம் போல் பள்ளிக்கூடத்துக்கு வந்ததா" என்ற கேள்வி இராசையா தரப்புக்குப் பெரிய சவாலாக அமைந்தது. இதனையும் மறுக்காமல் அதன் போக்கில் விட்டு விளக்கமளிக்கும் உத்தியையே இராசையா தரப்பினர் கையாண்டனர்.

இன்றைய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையாக மாறியுள்ள, FNS மருத்துவமனையில் மருத்துவராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர் வில்லியம் போல் . அவரது மகளான இரத்தினம் போல் வேம்படியில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அவர் அழகம்மாவின் வகுப்பைச் சேர்ந்தவர் அல்ல.

இராசையா தரப்பினரின் விவாதத்தின் படி ரெத்தினம் போலை இராசையாவுக்குத் திருமணம் செய்விக்கலாம் என்ற பேச்சு இருந்தது. இது அழகம்மாவுக்குத் தெரிந்து பொறாமையில் இருந்தார். அந்தப் பொறாமையிலும் எரிச்சலிலுமே இரத்தினம் போலைப் பற்றிக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் பிறகு மனம்மாறி அந்த வரியை வெட்டி இருக்கவேண்டும்.

அப்படி இருந்தால் கூட "பள்ளிக்கூடத்துக்கு வந்ததா?" என்று ஏன் அழகம்மா கேட்க வேண்டும் என்று வழக்கு விசாரணைகளின் போது நீதிபதி கேள்வி கேட்டிருந்தார். அதற்கு இராசையாவின் வழக்கறிஞரான கனகசபை இராசையா பள்ளிக்கூடத்திலேயே பெண்களைச் சந்தித்தான் என்பதாகப் பதில் கூறினார். இப்படி ஒரு விளக்கம் வடக்கு மாகாணத்தில் தான் சாத்தியம் என்று நீதிபதி அதற்குப் பதிலளித்திருந்தார்.

இராசையாவுக்கும் இரத்தினத்துக்குமான திருமணப் பேச்சுப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததை அழகம்மா மறுக்கவில்லை. ஆனால் பள்ளிக்கூடத்துக்கு மீண்டும் வந்த பின்னர் அதாவது குறித்த கடிதங்களின் பின்னரேயே அதனை அறிந்ததாக அழகம்மா சொல்லியிருந்தாள். ஆனால் இரத்தினத்தின் தந்தையான மருத்துவர் வில்லியம் போல் தனது சாட்சியத்தில் அப்படியான திருமணப் பேச்சு இருக்கவில்லை என்று மறுத்திருந்தார்.

இந்த வழக்கிலும் இராசையா குற்றவாளி என்பதாகவே நீதிபதியின் தொகுப்புரை அமைந்தது. மீண்டும் இந்த வழக்கிலும் இராசையா குற்றமற்றவன் என்பதாகவே ஜூரிமாரின் தீர்ப்பு அமைந்தது.

யாழ்ப்பாண ஜூரிமார் மீண்டும் தமது பாணியில் நடந்து கொண்டனர். மீண்டும் அழகம்மாவுக்கு நியாயம் மறுக்கப்பட்டது.

(நிறைவுற்றது)



(உயர்நீதிமன்ற நீதிபதி வின்சன்ற் தாமோதரம்)

## பின்கதைச் சுருக்கம்

இன்று இந்த வழக்கின் சாட்சியங்களையும் சம்பவங்களையும் மீண்டும் வாசிக்கும் போது அழகம்மாவின் கடிதம் பாடசாலையிலிருந்த நல்லம்மாவுக்கு எழுதப்பட்டது என்பதையும் கடிதத்தின் உள்ளடக்கம் இராசையா தொடர்பானதாகவே பெரும்பாலும் இருந்ததையும் நாம் உணர முடிகிறது. அதனைப் பாடசாலையில் நல்லம்மாவின் பெட்டியில் இருந்து எடுத்து இராசையா தரப்புக்கு வழங்கியுள்ளனர் என்பதும் அப்படி வழங்கியிருக்கக் கூடியோர், உதவியாக இருந்தோர் எனச் சிலர் பாடசாலை நிர்வாகத்தால் பதவி நீக்கப்பட்டும் உள்ளனர். இராசையா பற்றிய குறிப்புகள் வேறு கடிதங்களில் இருந்து அவை எரிக்கப்பட்டமையையும் ஊகிக்க முடிகிறது.

அந்தக்கால இந்து சாதனம் போன்ற பத்திரிகைகள் இந்தத் தீர்ப்புகளின் போதாமைகள் குறித்து வெளிப்படையாகவே எழுதியும் உள்ளன. யாழ்ப்பாணத்தின் பொது மனநிலையை வெளிப்படுத்தும் பத்திரிகையாக அமைந்த இந்து சாதனமே இந்த வழக்கின் தீர்ப்பில் ஒவ்வாமை கொண்டிருந்தமை கவனிக்க வேண்டியதாகும்.

இந்த வழக்குகளின் பின்னர் நயில்ஸ் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. யாழ்ப்பாணத்தில் தம் மரியாதையை இழந்ததாக அவர்கள் எண்ணியிருக்கலாம்.

அவ்வகையில் போதகர் நயில்ஸ் மட்டக்களப்புக்கு மாற்றலாகிச் சென்றார். அங்கே சில ஆண்டுகள் போதகராகக் கடமையாற்றினார். மட்டக்களப்பு மிஷன் அச்சகத்தில் வேதப் பாடல் நூல்களை அச்சிடுவதில் முன்னின்று உழைத்தார். பின்னர் கொழும்புக்குப் பணிக்குச் சென்றார். 1907இல் ஓய்வு பெற்றார். 1915இல் காலமானார்.

அழகம்மாவின் கல்வி முற்றிலும் தடைப்பட்டது. ஆனால் மன உறுதி மிக்க பெண்ணான அவர் இருண்ட காலத்திலிருந்து மீண்டு குடும்ப வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

1906 இல் தனது 24ஆவது வயதில் நல்லையா நதானியேல் தாமோதரம் என்பவரை அழகம்மா திருமணம் செய்தார். இந்த நல்லையா நயில்ஸ் போதகரின் இன்னொரு சகோதரியின் (Charlotte Niles) மூத்த மகன் ஆவார். நல்லையா ஒரு கேற் முதலியாராக இருந்தவர்.

அழகம்மா நல்லையா தம்பதியினருக்கு மூன்று ஆண்களும் ஒரு பெண்ணுமாக நான்கு குழந்தைகள் பிறந்தனர். இவர்களில் பீற்றீஸ் என்ற பெண்பிள்ளை சிறுவயதில் காலமாகி விட்டார். மூத்த மகன் டானியல் ஒரு மருத்துவராகவும் இரண்டாவது மகன் வெஸ்லியும் மூன்றாவது மகன் வின்சன்ற்றும் வழக்கறிஞராகவும் உருவாகினர்.

இவர்களில் வின்சன்ற் தாமோதரம் இலங்கையின் உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவியயர்வு பெற்றார். எந்த நாட்டின் நீதித்துறையால் அழகம்மாவுக்கு அநீதி இழைக்கப்பட்டதோ அந்த நாட்டின் அதியுயர் நீதிபதியாக அழகம்மாவின் மகன் உயர்ந்திருக்கிறார்.

வெள்ளவத்தையில் பல ஆண்டுகள் வாழ்ந்த அழகம்மா வெள்ளவத்தையில் அவர் தொடர்புபட்டிருந்த தேவாலயத்துக்காக குறிப்பிடத்தக்க சேவையாற்றினார். தேவாலயத்தின் பாடகர் குழுவை வழிநடத்தினார். ஓர்கன் வாசித்தும் பங்களித்தார். 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் தனது 60ஆவது வயதில் மிரிகமவில் இருந்தபோது அழகம்மா காலமானார்.

இந்த வழக்கின் பின்னர் இராசையா என்னவானான் என்பது தெரியவில்லை. நதானியேல் நயில்ஸ் குடும்பங்களின் வெறுப்புக்கு அவன் ஆளாகியிருந்தமையால் அவர்கள் தமது குடும்பங்கள் தொடர்பான குறிப்புக்கள், பதிவுகளில் இராசையாவை முற்றிலும் தவிர்த்து விட்டனர்.

வழக்குகளில் இராசையா வென்றிருக்கலாம். ஆனால் வரலாற்றில் காணாமற் போய்விட்டான்.

அழகம்மாவுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்துக் குறித்த குடும்பத்தினரே பின்னர் அதிகம் பேசவில்லை. ஆனால் வெறுமனே பதினாறு வயதில் தனக்கெதிரான அநீதியை அவர் எதிர்த்து நின்று யாழ்ப்பாணத்தின் மனசாட்சியை அவர் அசைத்தார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அழகம்மாக்களுக்கு நீதி மறுக்கப்படுவது இன்றும் தொடர்கிறது. அத்தகைய அநீதிகளைத் தாண்டி உறுதியாக எதிர்கொண்ட ஒரு முன்னோடியே எமிலி அழகம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் போரும் ஈழத்தமிழர்களும்



அ.நிக்ஸன்

கொழும்புக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரத்துக்கான துணை இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நியுலாண்ட் வெளியிட்ட கருத்தும், அமெரிக்க-இலங்கை அரசுகள் வெளியிட்ட கூட்டறிக்கையும், முக்கியமான விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளன. அதாவது உக்ரைன் போருக்குப் பின்னரான சூழலில் ஏற்படப்போகின்ற உலக அரசியல் மாற்றங்களில் இலங்கை அமெரிக்காவின் பக்கம் நிற்கும் என்ற சமிக்ஞை வெளிப்பட்டுள்ளது.

1980 களின் பனிப்போர் காலத்தில் இந்தியா எப்படி ரஷ்யாவுடன் மறைமுகப் புரிந்துணர்வைப் பேணியதோ, அதேபோன்று விரும்பியோ விரும்பாமலோ ரஷ்யாவுடனும், ரஷ்யா ஊடாகச் சீனாவுடனும் இராஜந்திர உறவைப் பேண வேண்டிய நிலையை இந்தியாவுக்கு உக்ரைன் போர் ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

இதனால் இலங்கை, அமெரிக்காவின் பக்கம் செல்லக்கூடிய நிலைமை இருந்தது. அதனை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை மேலும் வெளிப்படுத்தியுள்ளது. குறிப்பாகக் கடலை மையப்படுத்திய அமெரிக்க-இலங்கை இராணுவச் செயற்பாடுகள் குறித்துக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களில், 'இலங்கை அமெரிக்காவின் தளமாக மாறலாம் 'என்ற செய்தி பகிரங்கப்பட்டுள்ளது. ஆகவே ஈழத்தமிழர்கள் தமது அதி உச்சக் கோரிக்கையை இந்தியாவிடம் கூட்டாக முன்வைக்க வேண்டியதொரு காலகட்டத்தையே உக்ரைன் போருக்குப் பின்னரான உலக அரசியல் சூழல் உருவாக்கியுள்ளதை உணர்ந்து கொள்ள வேண்டும். எந்தவிதமான ஐயத்துக்கும் இடமின்றித் தமது கோரிக்கைகளைத் தெளிவாக முன்வைக்க வேண்டிய பொறுப்பை கருத்துருவாக்கிகள், சிவில் சமூக அமைப்புகள் விரைந்து கையாளவேண்டும். தமிழ்த்தேசியக் கட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகள் பிளவுகளையே உருவாக்கும் என்பதால், அரசியல் கட்சிகளைத் தாண்டிப் பொது அமைப்புகள் இந்தப் பொறுப்பைச் செயற்படுத்த வேண்டும் என்பதை உக்ரைன் போருக்குப் பின்னரான சூழல் உணர்த்தியிருக்கின்றது. வடக்கு, கிழக்கு தாயகப் பிரதேசங்களில் உள்ள ஈழத்தமிழ் அமைப்புகள் ஐயுறவின்றி கோரிக்கைகளை முன்வைக்கும்போது, தமிழ்நாடு மற்றும் புலம்பெயர் சமூகம் இன்னும் கூடுதலான அதி உச்சக் கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தம் கொடுத்தால் அது இன்னமும் அர்த்தமுள்ளதாகவே மாறும். இவ்வாறு ஒருமித்த குரலில் கூட்டுக் கோரிக்கையாக இந்தியாவிடம் முன்வைப்பதை இலங்கை தடுக்கவும் முற்படும். இந்தியாவிடம் தமிழர்கள் கூட்டாகத் தமக்குரிய அரசியல் கோரிக்கையை முன்வைத்துவிடக்கூடாது என்பதிலேயே இலங்கை மற்றும் வல்லரசுச் சக்திகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில், தமிழ் நாடு, புலம்பெயர் சமூகம் ஆகியவற்றுக்கிடையேயான பிளவுகளை இலங்கையும் வல்லரசு சக்திகளும் கணிசமான அளவு உருவாக்கியுமுள்ளன. தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை பிளவுபடுத்தும் நோக்கிலேயே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ரெலோ கட்சியின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மறைமுக இணக்கத்தோடு இந்தியப் பிரதமர் மோடிக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக்குவது குறித்து கடிதம் அனுப்புவது தொடர்பான நகர்வுகள் கடந்த வருட இறுதியில் முன்னெடுக்கப்பட்டுமிருந்தன.

அதற்குப் போட்டியாகவே சட்டத்தரணி சுமந்திரன் அணி அமெரிக்காவுக்குச் சென்றதுடன், இந்திய=இலங்கை ஒப்பந்தத்தின் மூலமான அதிகாரப் பரவலாக்கத்துக்கும் அதில் இருந்து ஒஸ்லோ உடன்படிக்கை ஊடான சமஷ்டித் தீர்வு நோக்கிச் செல்வது குறித்தும் சுமந்திரன் பதில் நகர்வுகளை மேற்கொண்டிருந்தார். ஆகவே செல்வம் - சுமந்திரன் என்ற இருமுனைப் போட்டிகள் உக்ரைன் போருக்கு முன்னரே ஆரம்பித்திருந்தன. உக்ரைன் போருக்குப் பின்னரான புவிசார் அரசியல் சூழலில் இந்தப் போட்டி மேலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையை உக்ரைன் போருக்கு முன், உக்ரைன் போருக்குப் பின் என்று பிரித்துப் பார்த்து, ஈழத்தமிழர்கள் - தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் சமூகம் ஆகியவற்றுக்கிடையே பிளவுகள், போட்டிகள் எழாத வகையில் செயற்பட ஆரம்பிக்க வேண்டும்.



2009 க்கு முன்பிருந்தது போன்ற ஒற்றுமைச் செயற்பாட்டுத்தளத்தை உக்ரைன் போருக்குப் பின்னரான பனிப்போர்க்காலத்தில் மீளவும் ஈழத்தமிழர்கள் புதுப்பிக்க வேண்டியதொரு கட்டாயம் உருவாகியுள்ளது. அதற்கான ஏற்பாடுகளைப் பொது அமைப்புகளே முன்னெடுக்க வேண்டும்.

உக்ரைன் போருக்குப் பின்னரான சூழலில், இலங்கை அமெரிக்காவுடன் தனியாகச் செயற்பட ஆரம்பிக்கும் நிலையும் தோன்றலாம். இதை முடிந்த முடிவாகத் தற்போது கொள்ள முடியாதென்றாலும், எதிர்வரும் ஒரு சில கிழமைகளுக்குள் இது குறித்த நிலைமையை மேலும் தெளிவாக உய்த்துணர முடியும். மீண்டும், 1980 களில் சோவியத் யூனியன் காலத்தில் ஏற்பட்டது போன்று இலங்கையை அச்சுறுத்தும் நோக்கில், தமிழர் தாயகப் பகுதிகளில் அசம்பாவிதங்களை உருவாக்கி, சில தமிழ்த் தரப்புகளைத் தனக்கு ஏற்ற வகையில் இந்தியா தூண்டிப் பயன்படுத்திவிட்டு, பின்னர் கைவிட்டுச் செல்லும் ஆபத்து உருவாகலாம். இது பட்டறிவு தரும் பாடம். ஆகவே இவ்வாறான முன் அனுபவம் உள்ள ஈழத்தமிழர்கள், தெளிவான முறையில் அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொண்டு இந்தியாவிடம் நேரடியாகவும் நேர்மையாகவும் அவற்றை எடுத்துரைக்க வேண்டும். வரலாற்று ரீதியான தவறுகள், நியாயப்பாடுகள் போன்றவற்றைப் பகிரங்கமாக எடுத்துரைப்பதில் பின் நிற்கவும்கூடாது.

உக்ரைன் போருக்கு முன்னர் '13 ஐ 'மீண்டும் அரசியல் தீர்வுக்கான பாதையின் ஆரம்பப் புள்ளியாக்கிக் கடிதம் அனுப்பப்பட்ட விவகாரம் என்பது வேறு. ஆனால், உக்ரைன் போருக்குப் பின்னரான சூழலில், இந்தியாதான் ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்த விவகாரங்களைத் தீர்மானிக்கவுள்ளது என்பது புவிசார் அரசியற் பரப்பில் மேலும் உறுதியாகி வருவதால், அதற்கேற்ற தயாரிப்புகளைத் தமிழர் தரப்பு மீண்டுமொரு முறை மீளாய்வு செய்து ஆரம்பிக்க வேண்டியது காலத்தின் தேவையாகிறது. ரஷ்யாவுடன் நேரடியாகவும், ரஷ்யா ஊடாகச் சீனாவுடன் மறைமுகமாகவும் நின்று கொண்டு, புதுடில்லி தனது வட இந்தியாவுக்கான புவிசார் அரசியலைக் கையாளுவதற்குரிய ஏதுநிலைகளே தென்படுகின்றன. உக்ரைன் போர் விவகாரத்தில், ரஷ்யாவுடன் மறைமுக நட்பைப் பேணுவதன் மூலம் சீன அரசுடன் உள்ள எதிர்ப்பைச் சமாளிக்கலாம் என்ற சிந்தனை இந்தியாவிடம் தற்போது எழுந்துள்ளது. ஆனால் புதுடில்லியின் தென்னிந்தியா குறித்த புவிசார் அரசியல் என்பது இந்தோ-பசுபிக் கொள்கை என்பதுடன், அது இந்து சமுத்திரத்துடன் சம்பந்தப்பட்டதுமாகிறது. ஆகவே தெற்கில் இந்து சமுத்திரத்தில் சீனாவைக் கையாள்வதற்கு இந்தியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் தேவைப்படும்.

இந்தியாவின் வடகிழக்கு எல்லையிலும், மேற்கு எல்லையிலும் இருக்கும் பிரச்சினைகள் இந்தியாவுக்கு முக்கியமானவை. அதாவது ஒரு பக்கம் சீனா, மறுபக்கம் பாகிஸ்தான்-காஷ்மீர் எல்லைகள் என்ற நில விவகாரங்களுக்குள், சீனா, ரஷ்யா என்ற நில இணைப்புக் கொண்ட நாடுகள் பற்றிய கரிசனை இந்தியாவுக்கு அவசியம் தேவையான ஒன்று. வட இந்தியாவில் நிலம் சார்ந்த புவிசார் அரசியலும் தெற்கில் இருக்கின்ற கடல் சார்ந்த இந்தோ-பசுபிக் விவகாரத்திலும் எவ்வாறு சமநிலையைப் பேணுவது என்ற சிக்கல் இந்தியாவுக்கு உக்ரைன் போருக்குப் பின்னரான சூழலில் உருவாகியுள்ளது.

இந்தப் பின்னணியிலே அமெரிக்கா, ரஷ்யா குறித்த நிலைப்பாட்டில் சீனாவை நெருக்கடிக்குள் கொண்டு வந்துள்ளது. உக்ரைன் போரில் சீனா, ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற தன்மைகளும், பொருளாதார ரீதியாக ரஷ்யாவுக்கு சீனா ஒத்துழைக்கின்ற முறைகளும் அமெரிக்காவுக்குப் பெருத்த தலையிடியை ஏற்படுத்துகின்றன. அத்துடன் ரஷ்யா, சீனா என்ற அணிக்குள் இந்தியாவும் நுழைந்துவிடுமோ என்றொரு அச்சமும் அமெரிக்காவுக்கு எழுந்துள்ளது.

இவ்வாறு சீனாவுக்கு அமெரிக்கா கொடுக்கும் அழுத்தம் இந்தியாவுக்கும் சேர்த்தே என்பதையும் இங்கே நோக்க வேண்டும். இந்தியாவின் வடக்கைச் சுற்றியுள்ள நிலத் தொடர்பு விடயங்களில் புதுடில்லி கூடுதல் கவனம் செலுத்துவதால், இந்தோ-பசுபிக் விடயத்தில் ஒரு முனைப்பாக இந்தியாவுக்குப் பங்களிக்க முடியாதென்ற சிக்கல் உருவாகும். அது அமெரிக்காவுக்குப் பிரச்சினை. ஒருபுறம் ரஷ்யாவையும் மறுபுறம் அமெரிக்காவையும் இந்தியா கையாள முற்படும் இந்த அணுகுமுறையை அமெரிக்கச் சார்புடைய வேறு நாடுகளும் பின்பற்ற ஆரம்பித்தால் அது அமெரிக்கப் புவிசார் அரசியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.



ஆகவே உக்ரைன் போர் நீடித்தால் அமெரிக்கா தனது பெருவிரலால் இந்தியாவை அழுத்தி எச்சரிக்கை விடுக்கும் நிலைமை ஏற்படலாம். அதாவது இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் அமெரிக்காவோடு குவாட் (QUAD) அமைப்புக்குள் இந்தியா ஒருமுனையாக நிற்குமா அல்லது இந்திய நிலப் பாதுகாப்பு அடிப்படையில் ரஷ்யாவுடன் கூடுதலாக நிற்குமா என்ற கேள்வியோடு இந்தியாவுக்கு நேரடி அழுத்தத்தை அமெரிக்கா வழங்க எத்தனிக்கும். அமெரிக்கா அல்லது ரஷ்யா ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட 'மதில்மேல் பூனை' நிலைப்பாட்டில் இந்தியா இருக்க முடியாது என்ற செய்தியை அமெரிக்கா நேரடியாகவே புதுடில்லிக்குக் கொடுக்கக்கூடும்.

இதுவே உக்ரைன் போருக்குப் பின்னரான இந்தியாவின் புவிசார் திண்டாட்டமாக இருக்கப்போகின்றது. ரஷ்யாவுடன் கூடுதலான உறவு வைக்கும் நிலைக்குள் இந்தியா தள்ளப்படும்போது, இலங்கை 1980 களில் இருந்ததைப் போன்று மீண்டும் அமெரிக்காவின் பக்கம் செல்லும் நிலைமையும் உருவாகலாம். அத்துடன் அமெரிக்காவுக்குரிய தளமாகவும் இலங்கை மாறலாம். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது உக்ரைன் போருக்குப் பின்னர் இந்தியாவின் புவிசார் நிலைப்பாடு பின்வரும் மூன்று நிலைகளில் ஏதோவொன்றாக அமைய வேண்டிய தெரிவு உள்ளது. ஒன்று, முழுமையாக அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் மூலோபாயத்துக்குள் செல்வது. அல்லது அமெரிக்காவில் இருந்து விலகி வட இந்திய புவிசார் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்து நேரடியாக ரஷ்யாவோடும், மறைமுகமாகச் சீனாவோடும், புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வது. அல்லாவிடின் மூன்றாவது தெரிவாக 'மதில் மேல் பூனை' நிலையை தொடர்ந்தும் நீடிப்பது. இது நெருக்கடியான போர்ச் சூழலில் மிகவும் சிரமமான தெரிவாகவே இந்தியாவுக்கு விட்டுவைக்கப்படும். அமெரிக்காவைப் பொறுத்தவரை எந்தநாடும் தமது அணியோடு முழுமையாக நிற்க வேண்டும். அல்லது முழுமையாக நிற்காத அனைத்து நாடுகளும் எதிரிகளோடு நிற்பவையாகவே கருதப்படும் என்ற அரசியல் கலாசாரம் இருக்கின்றது. ஆகவே இந்தியா பெருத்த திண்டாட் டத்துக்குள் மாட்டிக் கொண்டிருக்கின்றது.

ஒரு முனைப்போடு அமெரிக்கச் சார்பான புவிசார் அரசியலை இந்தியா தழுவ வேண்டிய நிலை ஏற்பட்டால், இலங்கை அரசு இந்தியாவினாலும் அமெரிக்காவினாலும் இணைந்து கையாளப்படும் தற்போதைய நிலையே நீடிக்கும். அப்போது ஈழத்தமிழர்கள் இந்தியாவிடம் அரசியல் தீர்வையும், மேற்குலக நாடுகளிடம் மனித உரிமை மற்றும் இன அழிப்பு, போர்க் குற்றங்கள் சார்ந்த விவகாரங்களைக் கையாள வேண்டிய தற்போதைய நிலையே தொடரும். ஆனால், ரஷ்யாவோடும் சீனாவோடும் இந்தியாவுக்குக் கூடுதல் புரிந்துணர்வு ஏற்பட்டால், இலங்கை அரசுக்கு இரண்டு தெரிவுகள்தான் இருக்கும். ஒன்று-இந்தியாவின் அழுத்தத்துக்கு உள்ளாவது. அதாவது தனது ரஷ்ய, சீன நட்பின் வீச்சினால் தடுக்க முடியாத இந்தியாவின் அழுத்தத்துக்கு உள்ளாகுவது.

இலங்கை ஒற்றையாட்சி அரசுக்கு இருக்கும் இரண்டாவது தெரிவு ஜே.ஆர். ஜயவர்த்தனா காலத்தைப் போன்றும் 2009 காலத்தைப் போலவும் அமெரிக்காவை நம்பிச் செயற்படுவது. இரண்டாவது தெரிவை இலங்கை மேற்கொண்டால், தமிழர்கள் தொடர்ந்தும் மேற்குலகின் கையாளுகைக்கு உள்ளாக வேண்டியிருக்கும். குறிப்பாகப் புலம்பெயர் தமிழர்களின் திறமையைப் பொறுத்து சிங்கள இராஜதந்திரிகள் வெல்லப் போகின்றார்களா, அல்லது ஈழத்தமிழர்கள் வெல்லப் போகின்றனரா என்பது தீர்மானிக் கப்படும். அதேவேளை ரஷ்ய - இந்திய அணிக்குள் அகப்பட்டு ஏமாற்றப்படும் ஆபத்தையும் ஈழத்தமிழர்களின் சில அணிகள் எதிர்கொள்ள நேரிடும். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை ஆக்கிரமிக்கப்பட்ட தாயகத்தில் இருந்து இந்தியாவிடமும் சரி, மேற்குலகத்திடமும் சரி அரசியல் தீர்வை நோக்கித் தாங்கள் எந்தப் புள்ளியில் இருந்து ஆரம்பிக்க இயலும் என்பதையும், எதை இடைக்காலத் தீர்வாகவும் இறுதித் தீர்வாகவும் தாங்கள் பார்க்கிறோம் என்பதையும் கருத்தொருமித்து மிகவும் தெளிவாக முன்வைக்க வேண்டிய தேவை உக்ரைன் போருக்குப் பின்னர் முக்கியமானதாக எழுந்துள்ளது. இந்த மூன்று புள்ளிகளும் ஒற்றையாட்சிக்குள் இருக்க முடியாது என்பது இந்தியாவுக்கும் மேற்குலகத்துக்கும் தெளிவாகச் சொல்லப்பட வேண்டும்.

அதேவேளை, புலம்பெயர் தமிழர்களும் தமிழ்நாடும் உச்சபட்ச நிலைகளில் கருத்தொருமித்துப் பயணிக்க வேண்டியிருக்கும். அதிலும் முக்கியமாக ஆக்கிரமிக்கப்பட்ட தாயகத்தில் வைக்கப்படும் அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளி தொடர்பான நிலைப்பாடு அதற்கு வெளியில் இருந்து புலம்பெயர் தமிழர்களினாலும் தமிழ்நாட்டினாலும் வைக்கப்படும் உச்சபட்ச நிலைப்பாட்டோடு முரண்பட்டதாக இருக்கக் கூடாது. ஒன்றுக்கொன்று இசைந்து செல்வதான தமிழர்களின் ஒன்றிணைந்த அணுகுமுறையே இனிமேல் நமக்கு அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





○ நிலாந்தன்

# சர்வ கட்சி மாநாடு ஒரு நாடகமா?

சர்வகட்சி மாநாடு எனப்படுவது வளர்ச்சியடைந்த ஜனநாயகங்களில் ஒரு உன்னதமான பயில்வு. முழு நாடும் கட்சி பேதங்களைக் கடந்து தேசியப் பிரக்ஞையோடு ஒன்றிணைந்து முடிவை எடுக்கும் நோக்கத்தோடு சர்வகட்சி மாநாடு கூட்டப்படுவதுண்டு. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி சிறிய கட்சி, பெரிய கட்சி என்ற பேதமின்றி நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுமுடிவை எட்டுவதற்கான ஒரு மகத்தான ஜனநாயக நடைமுறைதான் சர்வகட்சி மாநாடு ஆகும்.

ஆனால், இலங்கைத்தீவில் சர்வகட்சி மாநாடு எனப்படுவது அவ்வாறான உன்னதமான ஒரு பயிலுகை அல்ல. இலங்கைத்தீவின் மோசமான அரசியல் கலாசாரத்தை பொறுத்தவரை, சர்வகட்சி மாநாடு எனப்படுவது ஒரு தப்பிச் செல்லும் வழி அல்லது அரசாங்கம் தனது தோல்விக்கு எதிர்க்கட்சிகளையும் கூட்டுப்பங்காளிகள் ஆக்கும் அல்லது கூட்டுப்பொறுப்பாக்கும் ஒரு தந்திரம் அல்லது காலத்தைக் கடத்தும் ஓர் உத்தி. அதாவது எதிர்க்கட்சிகளின் கவனத்தைத் திசைதிருப்பி காலத்தை கடத்தும் ஓர் உத்தி எனலாம்.

குறிப்பாக, இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து கடந்த பல தசாப்தங்களாக வட்டமேசை மாநாட்டில் இருந்து தொடங்கி இன்று வரையிலான எல்லா சர்வகட்சி மாநாடுகளையும் தொகுத்துப் பார்த்தால் அவை அனைத்தும் தந்திரமான உள்நோக்கம் கொண்டவை என்பது தெரிய வரும். இலங்கை அரசாங்கம் நியமித்த விசாரணைக் கமிஷன்கள் போலவே சர்வகட்சி மாநாடுகளும் தீர்க்க விரும்பாத ஒரு பிரச்சினைக்காகக் கூட்டப்படும் மாநாடுகள்தான்.

தமிழ் அரசியலில் முதலில் வட்டமேசை மாநாடு என்ற வார்த்தையை பயன்படுத்தியது ஜி. ஜி. பொன்னம்பலம் என்று கூறப்படுகிறது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் எல்லாக் கட்சிகளும் ஒரு வட்ட மேசையில் அமர்ந்து பேசவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அப்பொழுது அவருடைய அரசியல் எதிரிகளாக காணப்பட்ட தமிழரசுக் கட்சி "அப்படி என்றால் சதுரமேசை மாநாட்டைக் கூட்டலாம்" என்று அவரை கிண்டல் செய்தார்கள். ஆனால் வட்டமேசை மாநாடுகள், அல்லது சதுர மேசை மாநாடுகள், நல்லது சர்வகட்சி மாநாடுகள் போன்றன தமிழ் மக்களைப் பொறுத்தவரை தோல்வியுற்ற அரசியல் நடைமுறைகள்தான்.

இவ்வாறான தோல்விகரமானதொரு பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்தே கடந்த புதன்கிழமை நடந்த சர்வகட்சி மாநாட்டையும் பார்க்கவேண்டும். நேற்று முன்தினம் நடந்த கூட்டமைப்புடனான சந்திப்பும் அத்தகையதா?

நாட்டை இப்பொழுது ஆள்வது மூன்றிலிரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மையை வென்றெடுத்ததாக மார்தட்டிக் கொள்ளும் ஓர் அரசாங்கம் ஆகும். நாடாளுமன்றத்தைப் பலவீனப்படுத்தும்விதத்தில் 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து அதன்மூலம் ஓர் அரசனுக்கு இருப்பதைப் போன்ற அதிகாரங்களை ஜனாதிபதி பெற்றுக்கொண்டார்.

ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் நிறைவேற்று அதிகாரமும் அவரை வெற்றிபெற்ற ஒரு நிர்வாகியாக நிரூபிக்க தவறிவிட்டன. போரும் பொருளாதார நெருக்கடியும் ஒன்றல்ல என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்ததாகக் கூறப்படும் சிங்கள மக்கள் இப்பொழுது "கோத்தா வீட்டுக்குப் போ" என்று கேட்கும் ஒரு நிலைமை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் அரசாங்கம் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி இருக்கிறது. சர்வகட்சி மாநாடு எனப்படுவது ஜனாதிபதியைப் பொறுத்தவரை கீழிறங்கி வருவதுதான். ஆனால் அவர் இதய சுத்தியோடு இறங்கி வருகிறாரா என்பதுதான் இங்குள்ள கேள்வியாகும். அல்லது அவர் தனது தோல்வியை எல்லாக் கட்சிகளுக்கும் உரியதாக மாற்றப் பார்க்கிறாரா என்றும் கேட்கலாம்.

தமிழ்க் கட்சிகளில் தமிழரசுக்கட்சியும் பிள்ளையானின் கட்சியும் ஈ.பி.டி.பியும் புளொட்டும் மட்டும் அதில் பங்குபற்றின. ஏனைய கட்சிகள் பங்குபற்றவில்லை. தென்னிலங்கை மையக் கட்சிகளில் மிகச் சில கட்சிகள்தான் பங்குபற்றின.

அந்த மாநாடு ரணிலின் மதிப்பை மேலும் உயர்த்தியிருக்கிறது. மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச போன்றோரை ரணில் புத்திசாலித்தனமாக அம்பலப்படுத்தியிருக்கிறார். ஜனாதிபதி பகிரங்கமாக மன்னிப்பு கேட்கும் அளவுக்கு ரணில் தனது ஆளுமையை காட்டியிருக்கிறார்.

ரணில் ஒரே நேரத்தில் இரண்டு தரப்புக்கு தனது ஆளுமையை நிரூபிக்க வேண்டியிருக்கிறது. ஒன்று அரசாங்கத்துக்கு. மற்றது சாஜித்துக்கு. அப்படித்தான் சஜித்தும் அவரும் தனது பலத்தை ஒரே நேரத்தில் அரசாங்கத்துக்கு எதிராகவும் காட்ட வேண்டி இருக்கிறது. அதேசமயம் ரணிலுக்கு எதிராகவும் காட்ட வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சிகள் மத்தியில் ஐக்கியம் இல்லை. சில மாதங்களுக்கு முன் மனோ கணேசன் கூறியது போல அரசாங்கம் எப்பொழுதோ தோற்று விட்டது. ஆனால் அந்த தோல்வியை தங்களுடையதாக சுவீகரித்துக் கொள்ளத் தேவையான ஐக்கியம் எதிர்க்கட்சிகள் மத்தியில் கிடையாது.

சர்வகட்சி மாநாடு ரணிலின் ஆளுமையை நிரூபித்திருக்கலாம். ஆனால் அதற்காக அவரை அங்கீகரிக்க அரசாங்கம் தயாரா? அல்லது சஜித்தும் எதிர்க்கட்சிகளும் தயாரா? என்று பார்க்க வேண்டும்.

மூத்த அரசறிவியலாளரான மு.திரு நாவுக்கரசு கூறுவதுபோல மேற்கத்திய நாடுகளில் இவ்வாறான நெருக்கடிகள் வரும்பொழுது, எல்லாக் கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்கும். அப்போதுதான் நாட்டின் முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டி நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம். ஆனால் இலங்கை தீவில் அவ்வாறான செழிப்பான ஒரு பாரம்பரியம் இல்லை. ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கினால் இப்போதிருக்கும் நெருக்கடிகளை தற்காலிகமாக சமாளிக்கலாம். ஆனால் அவ்வாறு ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு சிங்கள கட்சிகள் தயாரா? ஏனெனில் அது எந்தத் தேசிய அரசாங்கம் என்பதே இங்குள்ள அடிப்படைக் கேள்வியாகும். அது சிங்கள பௌத்த பெருந்தேசிய அரசாங்கமா? அல்லது இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் ஒரு தேசிய அரசாங்கமா என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. தன்னைத் தனிச் சிங்கள வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைவராக பிரகடனப்படுத்தும் ஒரு ஜனாதிபதி அவ்வாறு பல்லினத்தன்மைமிக்க ஒரு தேசிய அரசாங்கத்தை எப்படி உருவாக்குவார்? அவ்வாறு மூன்று இனங்களில் தேசிய இருப்பையும் நிராகரித்த காரணத்தால்தான் அவர் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினையே இல்லை என்று கூறுகிறார். அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக கூறுகிறார்' இப்போதிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணம் கொரோனா தான்' என்று.

ஆனால், இனப்பிரச்சினைதான் பொருளாதாரப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம். நாட்டின் முதலீட்டுக் கவர்ச்சியை அது அழித்துவிட்டது. 2009க்குப் பின்னரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. அதனால் நாடு அதன் முதலீட்டு கவர்ச்சியைக் கட்டியெழுப்ப முடியவில்லை. இவ்வாறு இனப்பிரச்சினை காரணமாக ஏற்கனவே நொந்து போயிருந்த பொருளாதாரத்தின் மீது ஈஸ்டர் குண்டுவெடிப்பு மற்றொரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அடுத்த அதிர்ச்சியை ப் பெருந்தொற்று நோய் கொடுத்தது. அதாவது இனப்போர் காரணமாக ஏற்கனவே சரிந்து போயிருந்த பொருளாதாரத்தின் மீது ஈஸ்டர் குண்டுவெடிப்பும் கொரோனாவும் கோத்தாபய. அரசாங்கத்தின் திறமையற்ற நிர்வாகமும் மேலும் அதிர்ச்சிகளை ஏற்படுத்தின என்பதே சரி.

எனவே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பது என்பது அதன் மூலப் பிரச்சினையில் இருந்தே தொடங்க வேண்டும். உடனடிக்கு வேண்டுமென்றால் சரிந்து விழும் வாழைக்கு முட்டுக் கொடுப்பது போல எதையாவது செய்யலாம். அதைத்தான் இப்போது செய்ய எத்தனிக்கிறார்கள். ஆனால் நிரந்தரத் தீர்வு வேண்டுமானால், பல்லினத்தன்மைமிக்க ஒரு தீவைக் கட்டியெழுப்ப வேண்டும். அதாவது இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

அண்மையில் உலகின் மிகவும் சந்தோஷமான நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் பின்லாந்து மீண்டும் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. படைத்துறை ரீதியாக வளம் குறைந்த பின்லாந்து ரஷ்யப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் வாழ்கிறது. கடந்த நூற்றாண்டிலிருந்து பேரரசுகளுக்கிடையிலான போட்டிக்குள் அது எப்பொழுதும் கெட்டித்தனமாகவும் கவனமாகவும் முடிவுகளை எடுத்து வருகிறது. உக்ரைனைப் போலவோ அல்லது ஜோர்ஜியாவைப் போலவோ பேரரசுகளின் இழு விசைகளுக்குள் பக்கம் சாயாமல் நிதானமாக முடிவுகளை எடுத்தது. தமது நாடு பேரரசுகளின் உதைபந்தாட்டக் களமாக மாறக்கூடாது என்று சிந்தித்துப் பின்லாந்து மக்கள் பொருத்தமான முடிவுகளை எடுத்தார்கள்.

உலகின் மிகச்சிறந்த கல்வி முறையைக் கொண்ட நாடாக பின்லாந்து கணிக்கப்படுகிறது. அதை அந்த நாடு தனது வெளியுறவுக் கொள்கையில் அழகாக, தீர்க்கதரிசனமாகப் பிரதிபலிக்கிறது. இலங்கையும் இலவசக் கல்விக்குப் பெயர் பெற்றது. ஆனால் இலங்கைத்தீவின் இலவச கல்வியானது இனப்பிரச்சினையைத் தீர்க்க தவறிவிட்டது. இலங்கைத்தீவின் இலவசக் கல்வியானது ஒருபுறம் வறிய மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளால் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்புக்களை வழங்கியது. அதேசமயம் அது இனப்படுகொலையை தீர்க்கத் தவறியிருக்கிறது. இப்போதிருக்கும் அரசாங்கம் 'வியத்மக' எனப்படும் தொழில்சார் திறன் மிக்க நிபுணர்களைக் கொண்ட ஒரு சிந்தனைக் குழாத்தால் வழி நடத்தப்படுவது என்று கருதப்படுகிறது. இப்போதிருக்கும் மத்திய வங்கியின் ஆளுநர் அந்த சிந்தனைக் குழாத்தில் இருந்து வந்தவர்தான். ஆனால் இந்தப் புத்திசாலிகள் எல்லாம் நாட்டை எங்கே கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 76

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| 10 | | | 11 | | | | ■ |
| 12 | | 13 | | ■ | | ■ | 14 |
| | ■ | 15 | | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:............................................

முழுமையான தபால் விலாசம்: ...........................

..........................................................................

கையொப்பம்:...........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. ஒவ்வொரு நாட்டுக்கும் இது முக்கியத்துவமானது 5. கூட இருப்பவன் 7. மரத்துண்டு 8. செய்தி 10. திசைக்கு வரும் 11. அடையாளம் 12. தலைகாக்கும். 15. வயல் 16. சேர் 17. சுமை 18. ஊனம் 19. ஆரோக்கியம் 20. இது பெரிய பழம் தரும் 21. தூரஅலகு 22. அழுது அரற்றுதல்

## மேலிருந்து கீழ்

1. விஷ்ணு சமயத்தவர் 2. கெட்டது செய்பவர் 3. ஒரு புள் 4. ஒரு கிரகம் 5. பிணம் 6. உடலைத் தாங்குவது 9. நித்திரையில் வருவது 11. இது ஓர் இராசி 13. இதுவும் அதுவே 14. வாய் ஓயாமல் தொண தொணவென்று பேசுதல் 16. தாண்டு 17. கசப்பான மரக்கறி வகை. 18. வெளியில் பூசுவது 19. பாரம் 20. சில அல்ல.

### சொற்சிலம்பம் போட்டி 75 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அசம்பாவிதம் –கனி 7.மதம் 9. கரம் 10. அரி 11. பாவலன் 13. தாம்பு 14. வடம் 15. தும்பி 16. பசளை 18. காவ 20. நகம் 21. உபரி 22. கொடும்பாவி 23. திசை

**மேலிருந்து கீழ்**

1. அகம்பாவம் 2. சனி 3. பாமரன் 4. விதம் 5. தம் 8. திரிபு 9. கலம்பகம் 10. அம்பிகாபதி 12. வட 13. தா்ம் 15. துளை 17. சம்பா 19. வரிசை 20. நடு

**சொற்சிலம்பம் போட்டி இல.76**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**01.04.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 75 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**ர.சங்கவிகா**
வேதவில்,
பூநகரி

**2 ஆம் பரிசு**
**த.தர்மினி**
120, கோவில் வீதி,
நல்லூர்.

**3 ஆம் பரிசு**
**உ.கேதுசன்**
இல.523 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**ஜெ.தனுசா**
4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு

**5 ஆம் பரிசு**
[illegible]
22 /8 விதானைவீதி,
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாண வரலாறு

## 1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் குடியேற்ற நாடுகளின் செயலராக இருந்த சேர்.ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற் (Sir James Emmersan Tennent, Colonial Secretary) 1845 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவர் தனது பயண அனுபவங்களை Ceylon An Account of the Island என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். இவரும் , பழைய கண்டி வீதி என அழைக்கப்படும் முல்லைத்தீவு. சுண்டிக்குளம்,ஆனையிறவு வழியாகவே யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவரது யாழ்ப்பாண அனுபவங்கள் இங்கு தமிழில் தரப்படுகிறது.

(நான் கொஞ்சம் கை கால் வைத்து மெருகூட்டி எழுதியுள்ளதாக எவரும் சந்தேகப்பட வேண்டாம்; ஆங்கிலத்தில் உள்ளதை அப்படியே தமிழில் தந்துள்ளேன். யாருக்காவது சந்தேகம் ஏற்பட்டால் இந்நூலின் பிரதிகள் யாழ்ப்பாண நூலகத்தில் உள்ளன எடுத்துப்பார்க்கலாம்)

திருகோணமலை நிலாவெளி விருந்தினர் விடுதியில் இரவைக்கழித்த பின்னர் கூலியாட்கள் மற்றும் காலால் ஓடிவருவோர் (foot runners) சகிதம் எமது பயணம் ஆரம்பமானது.

கொக்குத்தொடுவாய் என்ற கிராமத்தில் வடமாகாண அரச அதிபர் டைக் எம்மை வரவேற்பதற்காக கூடாரம் அடித்து தங்கியிருந்தார். கூழாங்குளத்தில் இரவு கூடாரம் அடித்து தங்கி விட்டு மறுநாள் காலை அங்கிருந்து புறப்பட்டோம். எமக்கு வழிகாட்டியாக வந்த கிராமத்தலைவர் அந்தப்பகுதிக்கு வந்த மூன்றாவது வெள்ளையர் நான் தான் என்றார்.

வன்னிக்காட்டில் யானை பிடிக்கிறார்கள். ஆனால் சிங்களவர்கள் யானை பிடிக்கும் முறைக்கும், தமிழர்கள் யானை பிடிக்கும் முறைக்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது.

போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களை கைப்பற்றிய போதும், வன்னியில் தமது ஆட்சியை விஸ்தரிக்கவில்லை. வன்னிச்சிகளாலேயே வன்னி ஆளப்பட்டு வந்துள்ளது. சில சமயம் மரங்களின் கீழும், சில சமயம் திறந்த வெளியிலும் கூடாரம் அடித்து தங்கி நாங்கள் புறப்பட்டோம். கூழாங்குளத்திலிருந்து புறப்பட்டு முள்ளியவளையை அடைந்தோம்.


முல்லைத்தீவு பச்சைப்பசேலென்ற காடு. நாங்கள் வந்து கொண்டிருந்த போது எமக்கு முன்னே நூறு யார் தூரத்தில் மான் ஒன்று துள்ளிப்பாய்ந்து சென்றது. புல்வெளியில் இரண்டு மயில்கள் காணப்பட்டன; அதில் ஒன்று தனது பிரமாண்டமான தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது.

ஐந்து காட்டுக்கோழிகளை கண்டோம்; அவற்றின் இறகுகள் உலோகம் போல் காணப்பட்டன. இந்த மாவட்டத்தில் சிறு குளங்கள் மூலம் விவசாயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குளமாவது உள்ளது. கண்டிய,கரையோர சிங்களக்கிராமங்களை விட இந்தக்கிராமங்களின் அமைப்பு முறை வித்தியாசமானதாகக் காணப்படுகிறது. வீடுகளின் ... ஜன்னல்கள் சூரிய ஒளி புகக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளன. தென்னந்தோட்டத்துடன் இணைந்ததாகவே வீடுகள் காணப்படுகின்றன. வீட்டு வாசலில் படலை உள்ளது. இங்குள்ள வீடுகள் கண்டியிலுள்ள வீடுகளை விட வசதியானவையாக காணப்படுகின்றன. கண்டியிலுள்ள வீடுகள் வெக்கையாக காணப்படுகின்றன.

ஒவ்வொரு வீட்டைச்சுற்றியும் வேலி அடைக்கப்பட்டுள்ளது. புல் பூண்டுகள் பிடுங்கப்பட்டுள்ளன; அத்துடன் தினமும் முற்றத்தை கூட்டி அழகாக வைத்துள்ளனர்.

வீட்டுக்கூரைகள் முகடு பிரிக்கப்பட்டு பனை ஓலையால் வேயப்பட்டுள்ளன. இடுப்பில் ஒட்டியாணம் அணிந்த சிறுவர்கள் காணப்படுகின்றனர். ஆண் குழந்தைகள் இலிங்க வடிவிலான ஒட்டியாணமும் பெண் குழந்தைகள் ஆலிலை வடிவிலான ஒட்டியாணமும் அணிந்திருக்கின்றனர் .

இங்குள்ள மக்களில் கணிசமானோர் விவசாயிகள்; மா,பலா,தென்னை, தோடை, எலுமிச்சை போன்ற பழமரங்களை இவர்கள் நாட்டியுள்ளனர்.



சிங்களவர்கள் பயிரிடும் சகல மரக்கறிகளும் இங்கும் பயிரிடப்படுகின்றன. யாழ்ப்பாணம் முழுவதும் சிறப்பான முறையில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

நாங்கள் முல்லைத்தீவு கோட்டையை அண்மித்த போது பற்றைகளுக்கிடையே முதலையொன்று காணப்பட்டது. இந்த முதலை எருமை ஒன்றை வளைத்துப்பிடித்திருந்தது; இறுதியில் அந்த எருமை இறந்து விட்டது.

முல்லைத்தீவுக்கோட்டை டச்சுக்காரர்களால் கட்டப்பட்டது. துறைமுகம் இல்லாத கோட்டையாக இது காணப்படுகிறது. உதவி அரசாங்க அதிபரின் வாசஸ்தலமாக இந்தக்கோட்டை விளங்குகிறது.

(பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவே இருந்தது)

நாங்கள் முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டு கண்டாவளையை அடைந்தோம். கண்டாவளை யாழ்ப்பாணத்தையும் கண்டியையும் இணைக்கிறது. கண்டாவளையிலிருந்து புறப்பட்டு ஆனையிறவை அடைந்தோம்.

யாழ்ப்பாணம் இலங்கையின் ஆரோக்கியமான பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது.யாழ்ப்பாணத்தின் பதினான்கில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பனைகள் உள்ளன. (இவர் யாழ்ப்பாணம் என்று கூறுவது சிலாபம்,கற்பிட்டி,அனுராதபுரம் உள்ளடங்கலான பகுதிகளை.) சுமார் அறுபது லட்சம் பனைகள் யாழ்ப்பாணத்தில் உள்ளன. பனம்பழ சீசனில் நெல் அரிவு வெட்டுவதற்காக ... தமிழ்நாட்டிலிருந்து வருகின்றனர்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வோ எனும் நாய்க்குட்டிகளின் காலன்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

## நோய் அறிகுறிகள்

- நாய் சாப்பிடாது.சோர்ந்து [lethargy] காணப்படும்.
- வாந்தி எடுக்கும். பொதுவாக நாய்கள் தொண்டைப் பகுதியில் இருந்து வாந்தி எடுக்கும். எனினும் பார்வோ நோய் உள்ள நாய்கள் வயிற்றுப்பகுதி யில் இருந்து, எக்கி எக்கி எடுக்கும். ஆரம்பத்தில் வெண்மை நிறத்தில் வெளிப்படும் வாந்தி பிறகு ஜெலி போலவும் இறுதியில் மஞ்சள் நிறத்திலும் காணப்படும்.
- வயிற்றோட்டம் காணப்படும். மஞ்சள் ,பச்சை, பிறவுண் நிறத்தில் தொடங்கும் கழிச்சல் இறுதியில் கடும் மணத்துடன் கூடிய இரத்தமாகக் காணப்படும்.இதனை பார்வோ மணம் [parvo smell] என கால்நடை வைத்தி யர்கள் சொல்வர்.
- குடல் பகுதியில் காயம் ஏற்பட்டதன் காரணமாக ஏற்படும் எரிவைப் போக்க தண்ணீருள்ள குளிர்ச்சியான இடங்க ளில் நாய்கள் வயிற்றை வைத்து படுக்கும். தண்ணீரைக் குடிக்கும். எனினும் தண்ணீர் குடிக்க குடிக்க கடுமையாக வாந்தி எடுக்கும்.
- வாந்தி வயிற்றோட்டம் காரணமாக் நாய்கள் நீர்ச்சத்தை இழந்து [severe dehydration] சோர்ந்து விடும். ஓரிரு நாட்களில் மெலிந்து விடும்.
- சிகிச்சையளிக்காத 90 சதவீத நாய்கள் 48=72 மணி நேரத்தில் இறந்து விடும்.
- இந்த நோய் ஏற்பட்டதும் எவ்வளவுக்கு எவ்வளவு தரமான சிகிச்சையை செய்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நாய்கள் உயிர் பிழைக்கும்.

உண்மையில் நீர் இழப்பையும், வாந்தியையும் நுண்ணு யிர்ப் பெருக்கத்தையும் சரி செய்யும் சிகிச்சைகளை செய்ய வேண்டும். ஒரு நாய்க்கு ஒரு தடவை சிகிச்சை செய்ய குறைந்தது 45 நிமிடங்களாவது எடுப்பதால் சில சிகிச்சை இடங்களில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை மாத்திரம் தசை மூலம் செலுத்துகிறார்கள். இது பெரும்பாலான நாய் களைக் காப்பாற்ற உதவாது. அதிர்ஷ்டம் உள்ள நாய்கள் பிழைக்கும். அத்துடன் சட்ட விரோத சிகிச்சையாளர்கள் தம்மி டம் உள்ள மருந்துகளை தசை மூலம் செலுத்தி விடுகிறார்கள். ஒரு இரண்டு நாட்களின் பின் நோய் முற்றி விட்ட பிறகுதான் சரியான இடத்துக்கு செல்கின்றனர். அது காலம் கடந்தி ருக்கும்.சிலர் நாய்கள் சாப்பிடாத போது பலவந்தமாக பால், இறைச்சியை ஊட்டுகின்றனர். இது நாயை மேலும் மேலும் பாதிக்கும். இந்த நோயைப் பொறுத்த வரை யில் மிக விரைவாக பார்வோ சிகிச்சை செய்யக் கூடிய இடத்துக்கு கொண்டு செல்வதுதான் பாதுகாப்பானது.

## நோயைக் கண்டு பிடிப்பது எவ்வாறு?

- வெளிப்படையான அறிகுறிகள் - வாந்தி.இரத்தக் கழிச்சல்,மணமுள்ள கழிச்சல்
- இரத்த சோதனை


## நோய் ஏற்படுகின்ற காலம்

- பொதுவாக மாரி காலம் தவிர்ந்த விட்டு விட்டு மழை பெய்யும் காலத்தில் அதிகளவில் ஏற்படுகிறது. இந்த பருவத்தில் பல நாய்கள் தொற்றுக்கு உள்ளாகி இருக் கும்.தொடர்ச்சியாக நாய்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள் இலகுவில் இதனை அனுமானித்து விடு வார்கள். அத்துடன் நாயின் வயது, தடுப்பூசி வரலாறு என்ப வற்றை வைத்து நோயை அனுமானிக்கலாம்.

## சிகிச்சைகள்

- எவ்வளவு விரைவாகச் சிகிச்சை வழங்கப்படுகிறதோ அவ்வளவு விரைவாக நாய்கள் உயிர் தப்பும்.
- நீர் இழப்பை ஈடு செய்யும் சிகிச்சை Normal saline, Glu cose, LRS போன்ற சிகிச்சை . அவற்றை நாளங்களில் / சிரைகளில் செலுத்த வேண்டும் [ Intra venusly]
- நுண்ணுயிர்க் கொல்லிகள் காற்று மற்றும் காற்றின்றி வாழ் நுண்ணுயிர்களுக்கு எதிரான சிகிச்சை [ Anti biotics aerobic /anaerobic ]
- வாந்தியை தடுக்கும் சிகிச்சை [ Anti emetic]
- நோய் எதிர் சக்தியை அதிகரிக்கும் சிகிச்சை.[ Immune modulators]
- இரத்த மாற்று சிகிச்சை [ plasma therapy]
- ஓரளவுக்கு குணமாகும் நாய்களுக்கு மென்மையான யோக்கட், தயிர் போன்றவற்றை சிறிதளவு கொடுக்க








லாம். .அதிலுள்ள நுண்ணுயிர்கள் நோய் விளைவிக்கும் கெட்ட நுண்ணுயிர்களின் இடத்தை பிடித்து விடும்.

- குடிக்கும் சிறிதளவு தண்ணீரை விட அதிக வாந்தியை நாய் எடுப்பதால் அதிக தாகமெடுக்கும் நாய்களுக்கு தண் ணீர் வழங்குவதற்கு பதில் ஐஸ் கட்டிகளை வழங்கலாம்.
- முடிந்தளவுக்கு வாயால் எடுக்கும் மாத்திரை மருந்து களை ஆரம்ப நாள்களில் கொடுப்பது பயன்தராது. அவை வாந்தியுடன் வெளியேறிவிடும். .சில இடங்களில் பல விற்றமின் கனியுப்புகள் வழங்கப்படுகின்றன. அவை யும் தொடக்கத்தில் பயனற்றது.
- பார்வோ சிகிச்சைகள் சில நாட்களுக்கு தொடர்ச்சியாகச் செய்ய வேண்டியவை. தினமும் பல மணி நேரம் செல வாகும். உங்கள் வீடுகளில் அந்த உயிர்கள் எடுக்கும் வாந்தி வயிற்றோட்டத்தை அகற்றியும் அவற்றுக்கு ஆதரவாகவும் மனம் தளராது இருக்கும் பட்சத் தில் அவை உயிர் பிழைக்கும். இந்த சிகிச் சைக்கு சகிப்புத் தன்மையும் பொறுமையும் மிக அவசியம். சிகிச்சை நிலையத்தில் இந்த சிகிச்சையை செய் யும் போது நாய்கள் எடுக்கும் வாந்தி, வயிற்றோட்டம் கார ணமாக சிகிச்சை இடம் அசுத் தமாகும். எனினும் எமது சகிப் புத் தன்மையும் உரிமையாள ரின் ஈடுபாடும் அந்த நாய்களைக் காக்கும்.
- பார்வோ நோயால் பாதிப்புற்ற நாய் நின்ற இடம், அவற் றின் கழிவுகள் காணப்படும் இடங்களை பிளீச்சிங் தூள் கொண்டு கிருமி நீக்கம் செய்ய வேண்டும். வேறு எந்தக் கிருமி நீக்கியும் பயனற்றது.

## நோய் வராமல் எவ்வாறு தடுப்பது ?


- தடுப்பூசிகளை கிரமமாக செலுத்துவது.

முதலாவது தடுப்பூசி 6 தொடக்கம் 8 கிழமையிலும்
இரண்டாவது 9 தொடக்கம் 10 கிழமையிலும்
மூன்றாவது 12 தொடக்கம் 13 கிழமையிலும்
பிறகு வருடாந்த நினைவூட்டல் ஊசியும் வழங்க வேண்டும்.
[ WASAWA guideline]

- சகல தடுப்பூசிகளையும் போடும் வரையில் குட்டிகளை கவனமாகக் கையாளுதல் வேண்டும், தேவை இல்லா மல் வெளியே கொண்டு செல்லக்கூடாது.
- நோய் ஏற்பட்ட நாய்களை தனிமைப்படுத்தல்.ஏனைய நாய்களுடன் தொடர்பைத் துண்டித்தல் வேண்டும்.
- நாய்க்குட்டிகளை வாங்கும் போது அதன் பெற்றோர் பற்றியும் [ parent history] தடுப்பூசி பற்றியும் அறிதல் வேண்டும் என்பதுடன் தாயின் தடுப்பூசிப் புத்தக விப ரத்தை பெறுதல் அவசியம் .குட்டிக்கு ஊசி போட்டிருந் தால் புத்தகத்தை கால்நடை வைத்தியரிடம் காட்டி ஊசி யின் தரத்தை சோதித்தல் வேண்டும்.
- சகல தடுப்பூசிகளையும் கிரமமாக அந்தந்த நாட்களில் செலுத்துதல். நீண்ட நாள்கள் ஒழுங்காக போடப்படாமல் இருந்தால் மீள ஆரம்பித்தல் வேண்டும்.
- இலங்கையில் சுகாதாரத் திணைக்களத்தால் வீடுவீடாக வழங்கும் விசர் நாய்க்கடி [Anti rabeis] தடுப்பூசியை தமது நாய்களுக்கு போட்டுக் கொள்ளும் பல பேர் இவ் வளவுதான் தடுப்பூசி என வெறுமனே இருந்து விடுகி றார்கள். எம்மிடம் வரும் பல நோயுற்ற நாய்களின் உரி மையாளர்கள் இந்தப்புரிதலுடன் தான் உள்ளனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சுகாதாரப் பிரிவின ரும் இதனை உரிமையாளர்களுக்கு சொல்வ தில்லை. விலங்கு விசர் நோய் தடுப்பூசியை தவிர பார்வோ மற்றும் டிஸ்டெம்பர் ,ஈரல் அழற்சி, எலிக் காய்ச்சலுக்குரிய [ DHL ] தடுப் பூசிகளை நீங்கள் பணம் கொடுத்துதான் போட வேண்டும்.
- நாய்களுக்கு ஏற்படும் நோய் நிலைமை கள் தொடர்பாக அறிந்து வைத்திருத்தல். வேண்டும். இதற்காக கால்நடை வைத்தியர்க ளுக்கு மேலதிகமாக கால்நடை வைத்திய தக வல் இணையத் தளங்களை பயன்படுத்தலாம்..
- உ+ம் parvo viral diarrhea in dogs
- நாய்களை வாங்கும் போது தாயிடம் முறையாக தாய் பால் குடித்த நாய்கள் சாலச் சிறந்தவை.அத்துடன் நாய் விற்பவர்கள் முதல் தடுப்பூசி செலுத்தி ஒரு வாரமளவில் விற்பது பொருத்தமானது.

என்னால் முடிந்த வரை இந்த பார்வோ இரத்த கழிச்சல் நோய் தொடர்பான அனைத்து விடயங்களையும் இந்தக் கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளேன். வருடா வருடம் நான் சந்தித்த அனுபவங்களையும் ஏனைய பல துறை சார்ந்த கால்நடை வைத்தியர்களின் ஆலோசனைகளையும் இங்கு இணைத்துள்ளேன்.

முடிந்த வரை இந்த நோய் வராமல் தடுப்பதோடு நோய் வந்த பின் நேரத்தை தாமதிக்காது சரியான சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று உங்கள் உயிரான செல்லப் பிராணி களைக் காத்துக் கொள்ளுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறுவர் கைவண்ணம்



என்.ஹிஸானிகா,
தரம்- 8
யா/ இந்து மகளிர் கல்லூரி.



றெ.மலரிசை,
தரம்- 6
யா/ யோகபுரம் மகா வித்தி.




E.ஜெனுசன்,
தரம்- 7
செண்.பற்றிக்ஸ் கல்லூரி.



நி.மானுஷா,
தரம்- 10
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க
பாடசாலை.

# எறும்பும் வெட்டுக்கிளியும்



வெட்டுக்கிளி ஒன்று மதிய நேரத்தில் இங்கும் அங்கும் தாவி தாவிக் குதித்து பாட்டுப்பாடி ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது. அப்போது அந்த வழியே வந்த எறும்பு அரிசி ஒன்றை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த அந்த வெட்டுக்கிளி எறும்பிடம் என்னைப் போல நீயும் என்னுடன் சிறிது நேரம் விளையாடலாமே என்றது.

அதற்கு எறும்பு இன்னும் சில நாட்களில் மழைக்காலம் தொடங்க இருக்கிறது. மழைக்காலத்தில் யாரும் வெளியே செல்ல முடியாது. அதனால் அந்த நேரத்திற்குத் தேவையான உணவை இப்போது இருந்தே நான் என் வீட்டில் சேகரித்து வைத்துக் கொள்கிறேன் என்றது. வெட்டுக்கிளி, எறும்பிடம் மழைக்காலம் வர இன்னும் நாட்கள் இருக்கிறது என்று சொல்லி விட்டு நான் விளையாட செல்கிறேன் என்று சிரித்துக்கொண்டே நடனமாடிச் சென்றது.

நாட்கள் கடந்தன, மழைக்காலமும் வந்தது. அப்போது வெட்டுக்கிளிக்கு பசி ஏற்பட்டது. எறும்பு உணவு சேமித்து வைத்திருக்கும் அதனிடம் போய்க் கேட்டுபார்க்கலாம் என்று நினைத்த வெட்டுக்கிளி எறும்பின் வீட்டிற்குச் சென்றது. எறும்பின் வீட்டுக்குச் சென்று எறும்பிடம் எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதாவது உணவு கிடைக்குமா? என்று கேட்டது. தான் சேமித்த உணவில் இருந்து சிறிதளவை வெட்டுக்கிளியிடம் கொடுத்தது எறும்பு. பிறகு எறும்பு வெட்டுக்கிளியைப் பார்த்து, அன்று என்னைப் பார்த்து சிரித்தாயே. இப்போது நான் சேகரித்த உணவு தான் இன்று நம் இருவருக்கும் உதவியுள்ளது. எனவே இனிமேலாவது நீ சோம்பலில்லாமல் வெயில் காலத்தில் மழைக்காலத்திற்கு வேண்டியதை சேமித்து வைத்துக்கொள் என்றது. எறும்பானது கால நேரம் பாராது உழைத்தால் வாழ்வு என்றும் பிரகாசமாக இருக்கும் என்று வெட்டுக்கிளிக்கு உணர்த்தியது.

**நீதி : எதிர்காலத்துக்கு தேவையானதை நிகழ்காலத்தில் சேமித்து வைக்க வேண்டும்**

## எண்களை இணைத்து படத்தை வரைவோம்



## அறிந்து கொள்வோம்

நோபல் பரிசு, மக்சாசே, பாரத ரத்னா என்னும் மூன்று விருதுகளை பெற்ற ஒரே நபர்?

**அன்னை திரேசா**

மூன்று கோடி மரங்களை நட்டு நோபல் பரிசு பெற்றவர் யார்?

**வாங்கரி மாத்தாய்**

எகிப்து நாகரிகம் எந்த ஆற்றங்கரையில் தோன்றியது?

**நைல்நதி**

பாலைவனமும் கடலும் சந்திக்கும் ஒரே இடம் எங்கு அமைந்துள்ளது?

**நமீபியா**

இலங்கையின் பழைய பெயர்

**சிலோன்**

சிறுவர் சுடர்



## நற்பண்புகள்

1. அதிகாலையில் எழு
2. பல் துலக்கு
3. சுத்தமாகக் குளி
4. பாடங்களைப் படி
5. இறைவனை வணங்கு
6. கைகளைக் கழுவு
7. சத்தான உணவை உண்
8. பெற்றோரை மதி
9. பள்ளிக்குச் செல்
10. குருவை வணங்கு
11. நூல்களைப் படி
12. மாலையில் விளையாடு
13. பாடங்களை எழுது
14. அறிவைப் பெருக்கு
15. அளவோடு உண்
16. நன்றாகத் தூங்கு



# 'டெடி பெயார்' எப்படி வந்தது?

கரடி பொம்மை என்றாலே குழந்தைகளுக்கு அலாதிப் பிரியம்தான். பெரியவர்கள்கூட ஆசையுடன் வாங்கி வீட்டை அலங்கரிக்கப் பயன்படுத்தும் கரடி பொம்மைக்கு, 'டெடி பெயர்' என்ற பெயர் எப்படி வந்தது எனத் தெரியுமா? அதற்கு சுவாரசியமான ஒரு பின்னணி உண்டு.

கரடி பொம்மை முதன்முதலில் அமெரிக்காவில்தான் அறிமுகமானது.

அமெரிக்க அதிபராக இருந்த தியடோர் ரூஸ்வெல்ட் வேட்டையாடுவதில் விருப்பம் கொண்டவர். 1902ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதியன்று மிசிசிபி பகுதியில் அவர் வேட்டையாடிக் கொண்டிருந்தார். அப்போது காயத்துடன் உலாவிய சின்னக் கரடிக்குட்டி ஒன்றைக் கண்டார். அதைக் கண்டதும், அவருடன் வந்தவர்கள் கரடியைச் சுடுவதற்கு வலியுறுத்தினர். ஆனால், தியடோர் ரூஸ்வெல்ட் அதை சுடாமல் விட்டுவிட்டார்.

இந்தச் செய்தி காட்டுத்தீ போல பரவியது. பத்திரிகையில் கரடிக்குட்டிப் படத்துடன் செய்திகள் வந்தன. தியடோர் ரூஸ்வெல்ட்டுக்கு 'டெடி' என ஒரு செல்லப் பெயர் உண்டு. அந்த நேரத்தில் கரடியையும், தியடோர் ரூஸ்வெல்ட்டையும் சேர்த்து வரைந்த கார்ட்டூன் படத்துக்கு 'டெடி பெயார்' என்று (ரூஸ்வெல்ட்டும் கரடியும் என்ற பொருளில்) பெயர் சூட்டியிருந்தனர். இந்தப் பரபரப்பை பொம்மை நிறுவனங்கள் பயன்படுத்திக்கொண்டன. அன்று முதல் 'டெடி பெயார்' என்பது கரடி பொம்மையின் பெயரானது. அதுமட்டுமலல, ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14ஆம் திகதி 'டெடி பெயர்' தினம் அமெரிக்காவில் கொண்டாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீடுகளில் நடைபெறும் சண்டைகளில் பயன்படுத்தப்படும் முக்கிய ஆயுதங்களில் ஒன்று செம்பு. இந்தச்சண்டைகளில் அதிக சேதம், நெளிவு செம்புக்கே ஏற்படும். செப்பு, பித்தளை, வெண்கலச் செம்புக்கள் கனதியானவை.

# செம்பு

"கம்மியர் செம்பு சொரி பானை" (நற்றிணை, 153:23)



## அற்றைத் திங்கள் 11

தம்பி! நீ அந்திரட்டி குழப்பியிண்ட பேரன்தானே" இப்படிக் கேட்ட கிழவரை என்னோட வந்த பெரிய மாமா திரும்பிப்பார்த்து
"என்ன?" என்று கேட்டார்.
"தம்பி நீ கந்தையற்ற மோன்தானே?" என்றார். மாமாவும் 'ஓம்' என்று தலையாட்டினார். அவரும் "அச்சுஅசல் நீ உன்ர பேரன் அந்திரட்டி குழப்பி வீரத்தியரப் போல இருக்கிறாய் தம்பி" என்றார். மாமா அசடு வழியச் சிரித்தபடி "அவசரம் நான் போகவேண்டும். பேந்து கதைக்கிறன்" என்றபடி நடையைக் கட்டினார். நான் அவரது வாயைக் கிளறினேன். வீரகத்தியர் தாய் வழிப் பேரன். ஒரு அந்திரட்டி வீட்டில அதிக உரித்தும் மூப்புமுடைய அவர் இருக்க வேறோரு பிறத்தியாருக்கு "செம்பு தண்ணி" கொடுத்ததற்காகச் சண்டை பிடித்து அந்த அந்திரட்டியையே குழப்பி விட்டார் என்பதுதான் அந்தக்கதை. ஓ! ஒரு செம்பு தண்ணியால எத்தின அந்திரட்டி, கல்யாணம், சாமத்தியவீடு ஏன் செத்தவீடு கூட குழம்பியிருக்குது.

நீரைச் சேகரித்து வைக்க இயற்கையான பாத்திரங்களை மனிதர் ஆரம்பத்தில் பயன்படுத்தியிருப்பினும் பின்பு செயற்கைப்பாத்திரங்களை உருவாக்கத் தலைப்பட்டனர். மரக்கொட்டுக்கள், மூங்கில் குழல்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. சீனர்கள் மூங்கில்களை அதிகம் பயன்படுத்தியதை அறிய முடிகிறது. தமிழ்ப் பரப்பில் மரத்தால் பானைகளை உருவாக்கும் மரபு உருவாயிற்று. மரப்பானை "தூதை" என்று அழைக்கப்பட்டது. கலித்தொகை "சுடர்விரிவினை வாய்ந்த தூதையும் பாவையும், விளையாட அரிப்பெய்த அழகமை "(பா.59:56) எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன் பின் அல்லது சமகாலத்தில் மண்பானைகள் உருவாக்கப்பெற்றன. இந்தப்பானைகள் தேவைக்கேற்பப் பல அளவுகளில் பயன்படுத்தப்பட்டன. காலவோட்டத்தில் செப்புலோகத்தின் வருகையின் பின் செப்புப் பாத்திரங்கள் மேட்டுக்குடியினரிடம் புழக்கத்தில் வந்தன. செப்புப்பானைகளும் குடங்களும் அதன் வழி உருவாகிப் பெருகின. சாதாரண மக்களிடமும் அவை பரவின.

பொதுவில் செப்பு எனும் உலோகமே செம்பு எனக் கூறப்படுகின்றது. ஆயினும் செம்பு எனும் சொல் செம்புப்பானையை அல்லது செம்புக்குடத்தைக் குறிப்பதாகவே பெரிதும் எமது பிரதேசத்தில் கையாளப்படுகின்றது. செம்பினாலான நீர்க்குவளையின் அதீதப் பயன்பாடு காலவோட்டத்தில் அந்த நீர்க்குவளையைக் குறிக்கும் சொல்லாயிற்று. செம்பானது பானையிலும் அளவில் சிறியதாக சிறிய உடலும் கழுத்து ஒடுங்கி வாய் மேல் நோக்கி விரிவதுமான அமைப்பைக் கொண்டது. பிற்காலத்தில் பல்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் இது காணப்பட்டது. வெளிப்புறத்தில் கைவினை வேலைப்பாடுகள் மிக்க, மிக அழகான செம்புகளும் உருவாயின. அவை பெரும்பாலும் மேட்டுக்குடியினரின் சொத்தாகவும் அவர்களின் "அந்தஸ்தை" வெளிப்படுத்தும் அலங்காரப் பொருள்களாகவும் காணப்பட்டன. சாதாரண செம்புகளே மக்கள் பாவனையில் இருந்தன.

மலசலகூடம் இல்லாத காலத்தில் பனங்காடுகளிலும் ஏனைய பற்றைக்காடுகளிலும் 'அதற்காகச்' செல்லும் போது நீர் கொண்டு செல்லும் பாத்திரமாக செம்பு இருந்தது. இதற்குத் தனிச்செம்பு பயன்படுத்தப்பட்டது. வெயிலில் பயணம் செய்து வருபவர் களைப்பைத் தீர்த்துக் கொள்ளத் தேவையான நீரை வழங்கும் செம்பு இன்னொன்று. இது அன்றாடப் பயன்பாட்டிலிருக்கும். இதிலே நீரை 'மொண்டு' வைத்துப் பேணியால் மூடியிருப்பர். செம்பு நீரைத் தனக்குத் தேவையான அளவில் பேணியில் ஊற்றிக் குடிக்க முடியும். அதேவேளை வீட்டுக்கு வரும் விருந்தினரை வரவேற்று முதலில் நீர்நிறைந்த செம்பே வழங்கப்படும். இது இன்னொன்று. வந்த விருந்தினர் தேவையெனில் நீரை அருந்துவார் அல்லது செம்பைத் தொட்டு அல்லது வாங்கி வைப்பார். அது அந்த வரவேற்பை ஏற்பதான ஒரு செயல்நிலையாகக் கருதப்படுகிறது.

வீடுகளில் நடைபெறும் மங்கல, அமங்கலச் சடங்குகளிலும் "செம்புக்கு" முதன்மையுண்டு. வீட்டு வாசலில் வைக்கப்படும் நிறைகுடமாக செம்பு வீற்றிருக்கும். பூப்புனித நீராட்டு விழாவில் பருவமடைந்த சிறுமியின் கையில் நிறைகுடமாக செம்பு வீற்றிருக்கும். குடிபுகுதல் விழாவில் வீட்டு முன்றலில் வரவேற்கும் நிறைகுடமாக, சுவாமி அறையில் இறைவனை ஆவாகனம் செய்யும் நிறைகுடமாய், பந்தியில் தாகம் தீர்ப்பதாய், கொல்லையில் கை கழுவ நீரூற்றும் வழங்கியாக என எல்லாமுமாக அது மாறியிருக்கும். திருமணத்துக்கான பேச்சுக்காலே செம்பு நீர் வழங்கலின் ஊடாக ஆரம்பிக்கப்படும். பெண்வீட்டார் , மாப்பிள்ளை வீட்டாருக்கு நிறைசெம்பு வழங்கி விருந்துண்ண அழைத்தலும் , பின் பெண்வீட்டார் மணமகன் வீட்டுக்குச் செல்லும் போது அவர்கள் இவர்களுக்கு நிறைசெம்பு வழங்கி அழைத்தலுமாக அது அமையும். திருமணச்சடங்கில் பிள்ளையாராக, நிறைகுடமாக, ஏனைய கடவுளரை அடையாளப்படுத்துகின்ற நிறைகுடங்களாக செம்புகள் வீற்றிருக்கின்றன. வந்த விருந்தினர்களுள் இருவீடுகளிலும் மூத்தவர்களுக்குத் தனித்தனியே நிறைசெம்பு வழங்கப்பட்டு விருந்துக்கு அழைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. சீதனச் சீரில் செம்பும் ஒன்று. அமங்கலச் சடங்குகளிலும் கும்பங்களாக, தீர்த்தச் செம்புகளாக, நீரள்ளும் பாத்திரமாக, சபைச்செம்புகளாக என இதன் பங்கு அநேகம். பூசையறையில் நித்தம் சிறுசெம்புகளில் அல்லது லோட்டாக்களில் நீர் வைத்து வழிபாடு செய்யும் வழக்கமும் உண்டு.



செம்பு நீர் உடலுக்குக் குளிர்மை வழங்கவல்லது. செப்பு, பித்தளைச் செம்புகளின் நீர் செப்புச்சத்தை நல்க வல்லது. அது குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் அதிக நலன்களைத் தரவல்லது. அதேவேளை செம்பில் படியும் செழும்பானது நீருக்கு நச்சுத்தன்மையைக் கொடுத்து அதனைக் குடிப்பவருக்கு வில்லங்கத்தையும் ஏற்படுத்தக் கூடியது. அதனால் தான் இந்தச்செம்புகளின் உட்புறங்களுக்கு வேறு உலோகங்கள் பூசப்பட்டன. "செப்ப விளக்கி செடிக்கடியில் ஊத்து" எனும் பழமொழி வழக்கிலுள்ளது. செப்பை விளக்கிய நீரூற்றப்பட்ட தாவரம் சிறப்பாக வளரும், நற்பலனைத் தரும் என்பர். செம்பை அடுப்புச்சாம்பல், புளி கொண்டு பொச்சால் விளக்குவர். புளி (பழப்புளி, தேசிப்புளி) செம்பைப் பளபளப்பாகப் பேண உதவுகிறது.

கோயில்களில் நித்திய அபிஷேகத்திலும் விஷேட தினங்களில் கும்பம் வைக்கவும் செம்பு பயன்படுத்தப்படுகிறது. கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் முதலான நிகழ்வுகளில் செம்பானது குடத்துக்கு நிகரான பிரதான இடத்தைப் பெறுகின்றது. நாட்டார் வழிபாட்டு மரபில் செம்பு கும்பமாகி இறைவன் அதில் ஆவாகனமுறுவதால் புனிதப்பொருளாகக் கருதப்படும். நேர்த்திக்கடன்களில் பாற்செம்பு எடுத்தல், பாற்காவடி எடுத்தல் என்பவற்றில் செம்பு முக்கியத்துவம் பெறுகின்றது. அங்கு கஞ்சிவார்க்கவும் செம்பே உதவுகிறது. கலைமரபில் இறைகூத்துக்கள் ஆடப்படும் போது செம்பில் கும்பம் வைத்து வழிபடப்பட்ட பின்பே கூத்துத் தொடங்கும். கிராமியக்கலைகளில் செம்பு நடனமும் ஒன்று.

"உது நான் கை நனைக்காத வீடு கண்டியளோ" ஒவ்வொரு சாதியாரும் தமக்குக் கீழானவர் எனக் கருதும் சாதியாரைக் குறிப்பிடுவதற்கு யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தும் வரி இதுவாகும். அதேவேளை தான் கடமைப்படாததை அல்லது விசுவாசம் காட்டத் தேவையில்லை என்பதை "நான் அங்க செம்பெடுத்தனானோ இல்லாட்டி கை நனைச்சனானோ" எனக் கூறுவதனூடாக வெளிப்படுத்தி நிற்கும் பாங்கையும் காண முடியும். குறித்த ஒருவரைத் தாம் முன்வந்து கூப்பிடவில்லை அல்லது அவர் தானாகவே தம்மிடம் வந்தார் என்பதை "நாங்கe என்ன செம்புத்தண்ணி குடுத்தே கூப்பிட்டனாங்கள்" என்றும் குறிப்பிடுவர். உறவுகளுள் - உறவின்மைகளுள் - செம்பு பெறும் முதன்மை இதன் வழி புறப்படுகிறது.

வீடுகளில் நடைபெறும் சண்டைகளில் பயன்படுத்தப்படும் முக்கிய ஆயுதங்களில் ஒன்று செம்பு. இந்தச்சண்டைகளில் அதிக சேதம் நெளிவு செம்புக்கே ஏற்படும். செப்பு, பித்தளை, வெண்கலச் செம்புகள் கனதியானவை. ஆதலால் அவை நின்று பிடிக்கும். சில்வர்ச் செம்புகள் ஓரளவு தாக்குப்பிடிக்கும். அலுமினியச் செம்புகள் ஆங்காங்கே நெளியும். காலப்போக்கில் அவ்விடங்களில் வெடிப்பும் ஏற்படும். பிளாஸ்ரிக் செம்புகள் பெரும்பாலும் ஒரு சண்டையையே தாங்க முடியாது உடைந்துவிடும். சில்வர் செம்புகளின் வருகை செப்புச் செம்புகளின் செல்வாக்கைக் குறைத்துவிட்டன.

அலுமினிய, பிளாஸ்ரிக் செம்புகள் செல்வாக்குப் பெற்ற அதேவேகத்தில் காணாமலும் போயின. சமகாலத்தில் செம்பு அரிதாகி விட்டது. மாபிள்,கண்ணாடி, பிளாஸ்ரிக் ஜக்குகள் அவ்விடத்தைப் பிடித்து விட்டன. கண்காட்சிப் பொருளாகியது செம்பு.

தமிழர் மரபில் யாழ்ப்பாணத்து மரபில் "செம்பு தூக்கிகள்" அநேகர் காலங்காலமாக "வாழ்ந்து" வருகின்றனர். அரசியல்வாதிகளுக்கு, ஆளும்தரப்புக்கு, உயரதிகாரிகளுக்கு , பணக்காரர்களுக்கு,செல்வாக்கு மிக்கவர்களுக்கு என வகைவகையாக செம்பு தூக்கிகள் காணப்படுகின்றனர். இந்தச்செம்பு தூக்கிகள் "இராமன் ஆண்டாலும் செம்பு தூக்குவர் இராவணன் ஆண்டாலும் செம்பு தூக்குவர்". யாருக்கேனும் செம்பு தூக்காமல் - கழுவி விடாமல் - இவர்களால் இருக்கமுடியாது. அவ்வளவு சமூக அக்கறை மிக்கவர்கள் இவர்கள். அதிகாரத்துக்கும் ஆளப்படுபவருக்குமிடையே "தரகராக" இவர்கள் திகழ்கின்றனர். இறுதியில் இருதரப்பும் அழிந்து போகும். ஆனால் இவர்கள் வாழ்வர். "எனக்கு இதனை எழுதும் போது நரியும் பச்சோந்தியும் தாமே கண்முன் வந்துபோகின்றன". பாவம் அவை விலங்குகள், இவர்கள் ..?

## மனிதா எழுக!

மனிதம் பேணுக
மனிதம் பேணுக
மனிதம் பேணிடுவாய்- மனிதா
இனிமை உண்டிட
மனதால் ஒருமைகாண்
இனிமை நிறையுமடா

இனமொழி மதமென
கூறிட் டெழுவதால்
துன்பியல் தொடருமடா- மனிதா
'அன்பிற்கு முண்டோ?
அடைக்கும் தாழென"
சொன்னதை மறவாதே

மொழிமத வாதங்கள்
இழிவுகள் தருவன அதனால்
அமைதியே குலையுமடா- மனிதா
இழிந்த பிறப்பென
வாழ்வது முறையா என
சிந்தித்து தெளிவுபெறு

நாடும் மக்களும்
தேடிடும் அமைதியை
கண்டிட வேண்டாமோ?- மனிதா
வீடும் நாடும் தேடிடும் அமைதியை
காண்பது பேரின்பம்


திருமூலனும் புத்தனும்
இத்தரை உதித்துப தேசித்தது
அன்பன்றி வேறில்லை- மனிதா
மொழி இனவாதங்கள்
இழி வெனப் புரிந்திடின்
அதை முதல் துறந்தெழுவாய்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மையான சொர்க்கம்

ம.மயூரபாலன்



இது ஒரு பழமையான கதை. இந்தக் காலத்தில் இருப்பது போல அல்லாது முன்னைய காலங்களில் போர் என வரும் பொழுது அந்த நாட்டின் அரசனே படையை வழி நடத்திச் சென்று போர் செய்ய வேண்டி இருந்தது. அதனால் அவர்கள் போர் புரிவதற்கு முன்னர் பல தடவைகள் அதனையிட்டு யோசித்துப் பார்ப்பார்கள். அவ்வாறு நன்றாக ஆராய்ந்து எடுத்த முடிவின் பிரகாரம் ஒரு அரசன் அண்டை நாட்டுடன் போர் செய்ய வேண்டி இருந்தது. போர் நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு முழுவதும் அரசனால் ஒழுங்காக நித்திரை கொள்ள முடியவில்லை. தற்செயலாக இந்தப் போரிலே கொல்லப்பட்டால் நான் சொர்க்கத்துக்குச் செல்வேனா அல்லது நரகத்துக்குச் செல்வேனா எனும் எண்ணம் அவனுள் எழுந்த வண்ணமே இருந்தது.

எப்படியோ மறுநாள் அவன் போருக்குத் தயாராகி தனது குதிரையில் சென்று கொண்டிருந்தான். செல்லும் வழியிலே அவன் ஒரு ஞானி வருவதைக் கண்டான். அவன் அந்த ஞானியிடம் "ஐயா இங்கே வாருங்கள்" எனக் கூறினான். அதற்கு அந்த ஞானி "இப்பொழுது உன்னிடம் பேசிக்கொண்டிருக்க என்னிடம் நேரம் இல்லை. நான் ஒரு இடத்துக்கு அவசரமாகப் போய்க்கொண்டு இருக்கின்றேன்" எனக் கூறினார். அரசனுக்கு மிகவும் கோபம் ஏற்பட்டு விட்டது. தனது குதிரையில் அவருக்கு மிகவும் அண்மையில் சென்று "நான் யார் என்று தெரியுமா? நான் இந்த நாட்டின் அரசன். என்னிடமே நேரமில்லை என நீங்கள் அவ்வளவு துணிச்சலாக கூறுகிறீர்களா?" என கோபமாகக் கேட்டான்.

அதற்கு அந்த ஞானி எந்தவொரு பதிலும் கூறாது நின்றார். "என்னிடம் ஒரு கேள்வி உள்ளது. நான் சொர்க்கம் நரகம் என்பது பற்றி அறிய விரும்புகின்றேன். அதுபற்றி உடனடியாக எனக்கு நீங்கள் சொல்ல வேண்டும்" என மிகுந்த கோபத்துடன் உத்தரவிட்டான். அப்பொழுது அந்த ஞானி அரசனைப் பார்த்து "நீ இப்பொழுது நரகத்தில் இருக்கிறாய்" எனச் சொன்னார். அந்த வார்த்தைகள் அரசனுக்கு உடனடியாக ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டன. அவன் தனது குதிரையிலிருந்து இறங்கி ஞானியின் முன்னாலே மண்டியிட்டு "ஐயா நீங்கள் கூறுவது சரிதான். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் எனது அறிவுக் கண்களை திறந்துவிட்டீர்கள். அதற்கு மிகவும் நன்றி" எனக் கூறினான். அப்பொழுது அந்த ஞானி அரசனைப் பார்த்து "அரசனே நீ இப்பொழுது சொர்க்கத்தில் இருக்கின்றாய்" எனக் கூறினார்.

சொர்க்கமும் நரகமும் நாங்கள் உணரும் விதத்தில்தான் உள்ளன என்பதனைச் சித்தரிக்கும் ஒரு எளிமையான கதைதான் இது. இறந்த பின்னர் சொர்க்கம் என ஒன்று உள்ளதா? இல்லையா? என யாருக்கும் தெரியாது. "இறந்த பின்னர் சொர்க்கம் என ஒன்று உள்ளது. அங்கே எல்லாவிதமான வசதிகளும் உள்ளன" என யாரும் மீண்டும் வந்து எங்களுக்கு கூறியதும் இல்லை. ஆனால் இந்த வாழ்விலே நாங்கள் சொர்க்கம் நரகம் இரண்டையுமே அனுபவிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் இறந்த பின்னர் சொர்க்கத்துக்குச் செல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்த வாழ்விலே பல விதமாக உடலை வருத்தி நரகத்தை அனுபவிப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். எமது கர்ம பலன்களை அனுபவிப்பதற்காக இந்த உடல் தரப்பட்டு உள்ளது. அதனால் இந்தப் பிறப்பிலே துன்பங்களை அனுபவித்தால் அடுத்த பிறப்பில் ஆனந்தமாக இருக்கலாம் என்று கூட சிலர் நம்புகிறார்கள்.

அது மட்டுமன்றி சில வேளைகளில் நரகம் என்பதற்கு மிகவும் பழக்கப்பட்டு அதுதான் வாழ்வின் இயல்பான நிலை என எண்ணி விடுகின்றோம். நாங்கள் யாராவது ஒருவரது வீட்டுக்குச் செல்கிறோம். அங்கு அவர்கள் சமையல் செய்ததால் ஏற்பட்ட புகை வீட்டினுள் அடைபட்டு உள்ளது. அந்த வீட்டினுள் சென்ற உடனே எங்களால் அந்த மணத்தை தாங்க முடியாமல் இருக்கும். ஆனால் சில நிமிடங்களின் பின்னர் எங்களுக்கு அந்த மணம் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. நாங்கள் அந்த மணத்துக்கு பழக்கப்பட்டு விடுகிறோம். அதுபோலதான் நரகத்துக்கும் நாம் பழக்கப்பட்டுவிடுகிறோம். நாங்கள் அவ்வாறு உணர்வை இழப்பது மிகவும் மோசமான நிலைமையாகும். நெருப்பின் மேலே நாங்கள் கையை வைக்கும் பொழுது கை சூட்டை உணர்கின்றது. அந்த உணர்வுதான் எங்களது கைகளை உடனடியாக வெளியே எடுக்க வைக்கிறது. இல்லை என்றால் கை எரிந்து போய்விடும். இவ்வாறு உடலின் வலி எங்களை எவ்வாறு காப்பாற்றுகின்றதோ அவ்வாறு உள்ளத்தில் ஏற்படும் வலிகள் நாங்கள் ஒரு உன்னதமான வழியில் செல்வதற்கு எங்களுக்கு வழி வகுக்க வேண்டும். அதனை விடுத்து அந்த வலிகளுக்குப் பழக்கப்பட்டு வாழக்கூடாது.

யாராவது வந்து இந்த வாழ்க்கையை நீங்கள் இவ்வாறு வாழத் தேவையில்லை எனக் கூறும் போது நாம் அதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த உலகத்திலே நன்மை தரும் விடயங்கள் எவையுமே தானாக நடைபெறுவதில்லை. ஒரு வேலையை ஏனோ தானோ என செய்வதற்கு முயற்சிகள் ஒன்றும் போடத் தேவையில்லை. ஆனால் ஒரு பூந்தோட்டம் அழகாக இருக்க வேண்டுமென்றால் அதனை ஒழுங்காகப் பராமரிக்க வேண்டியுள்ளது. உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் தேக அப்பியாசம் செய்ய வேண்டியுள்ளது. அதேபோல வாழ்க்கை வளமாக இருக்க வேண்டும் என்றால் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் நாங்கள் விழிப்புணர்வுடன் வாழ வேண்டியது அவசியமாக உள்ளது.

இந்த வாழ்க்கையிலே நாங்கள் சொர்க்கத்தைக் கண்டு கொண்டோம் என்றால் அடுத்த பிறப்பில் அவ்வாறு ஒன்று இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். இல்லை என்றாலும் நாங்கள் ஒன்றையும் இழந்திருக்கமாட்டோம்.

இந்த வாழ்விலே நாங்கள் சொர்க்கம் நரகம் இரண்டையுமே அனுபவிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் இறந்த பின்னர் சொர்க்கத்துக்குச் செல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்த வாழ்விலே பலவிதமாக உடலை வருத்தி நரகத்தை அனுபவிப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

---



# ஊர்ப்புதினம்


இராகவன்

32

போனகிழமை ஊர்ப்புதினத்தில கண்ணாடிவள்ளிப்பிள்ளையக்கைக்கு இரண்டு பொம்பிளைப்பிள்ளையள் எண்டு சொன்னனான். அது பிழையான தகவல். அதுக்காக என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ. அவாவுக்கு மூண்டு பொம்பிளைப் பிள்ளையள். இரண்டு பேரின்ரை பெயரையும் முதல்ல சொல்லியிருக்கிறன். மூண்டாவது பொம்பிளைப்பிள்ளை தேவியக்கா எண்டதைச்சொல்லமறந்திட்டன். இப்பகண்ணாடிவள்ளிப்பிள்ளையக்கையின்ர ஆம்பிளைப்பிள்ளையளைப் பற்றிப் பாப்பம்.

மூத்தவர் தம்பையா எண்டும் அவர் வாத்தி வேலை பாக்கிறார் எண்டும் அம்மா சொல்லக் கேட்டிருக்கிறன். நான் அவரை நேரில கண்டதாக ஞாபகமில்லை. இளையவர் சிவலிங்கண்ணை. இவரோடதான் எனக்கு நேரடிப் பழக்கம். இவரைப் பற்றிச் சொல்லுறதுக்கு கனக்கக் கிடக்கு. அவ்வளவும் சொல்லி முடிச்சாப் போல உங்களுக்குப் பெரிய புதினமாயிருக்கும். ஏனெண்டால் அவர் உங்களுக்கு நல்ல தெரிஞ்ச ஒராளாயிருப்பார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், எம்.பியுமான முருகேசு சிவசிதம்பரத்தை உங்களுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கும். அவர் எனக்குப் பெரியப்பா முறை. நாங்கள் எல்லாம் அவரைச் சிவாப்பெரியப்பா எண்டுதான் கூப்பிடுவம். அம்மாவின்ர மூத்த தமக்கை தங்கம். அவாவின்ர வீடு பெரிய தோட்டத்திலயிருக்கு. அவாவை நாங்கள் தங்கப் பெரியம்மா எண்டு கூப்பிடுவம். அவாவின்ர கணவர்தான் கே.சி.மகாதேவன். இவரை கொம்யூனிஸ்ட் மகாதேவா எண்டு அரசியல் வட்டாரங்களில சொல்லுவினம். நாங்கள் மகாதேவப் பெரியப்பா எண்டு கூப்பிடுவம். 1985 காலப்பகுதியில அவர் அகாலமரணமடைஞ்சிட்டார்.

இதைப்பற்றி ஊர்ப்புதினத்தில விரிவாச் சொல்லுவன். இந்த மகாதேவப் பெரியப்பாவின்ர ஒண்டவிட்ட தமையன்தான் நான் முதல்ல சொன்ன முருகேசு சிவசிதம்பரம். இவர் நல்லூர்த்



தொகுதி எம்.பியாயும் உடுப்பிட்டித் தொகுதி எம்.பியாயுமிருந்தவர். பார்லிமென்றில உப சபாநாயகராயும் இருந்திருக்கிறார். 'உடுப்பிட்டிச் சிங்கம்சிவா', 'சிம்மக்குரலோன்' எண்டெல்லாம் இவருக்குச் செல்லப் பெயர்கள் இருக்கு. இவர் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி. கன வில்லங்கமான வழக்குகளை வாதாடி வெண்டிருக்கிறார். எங்கட தங்கப் பெரியம்மா வீட்டுக்கும் சிவாப் பெரியப்பா வீட்டுக்கும் ஒரெயொரு மதில்தான் எல்லை. சிவாப் பெரியப்பாவின்ர வீடும்வளவும்தான் பெரியதோட்ட ஏரியாவுக்குள்ளேயே பெரிசு. சிவாப் பெரியப்பா வீட்டில நிக்கிறார் எண்டால் புறிம்பாத் தெரியும். காலமையில நாக்கு ஊத்தை வழிக்கேக்குள்ள ஒருவிதமாய் ஓங்காழிப்பார்.

அந்தச்சத்தத்தைக்கேட்டவுடன, தங்கப்பெரியம்மாவின்ர கடைசிப் பொடியன் பாலன் சொல்லுவான் "எம்பியப்பா வந்து நிக்கிறார்' எண்டு. நாங்கள் கொஞ்சப் பேர் அவரைப் புதினம் பாக்கிறதுக்கெண்டு ஓடிப்போவம். எங்களைக் கண்வுடன அவர் ஒரு சிரிப்புச் சிரிப்பார். திருவிளையாடல் படத்தில தருமி (நாகேஷ்) சொக்கனைப் (சிவாஜிகணேசன்) பாத்து 'தெய்வீகச் சிரிப்பையா உம்மது' என்று சொல்வாரே. அந்தச் சிரிப்புத்தானது. ஆறடி மனிசன் வளர்த்திக்கேத்த உடம்பு.

நல்ல செக்கச் சிவப்பாய்த் துரை மாதிரியிருப்பார். அநேகமாய் நாங்கள் அவரைப் புதினம் பாக்கப் போறநேரத்தில வீட்டுக்குப் பின்னாலயிருக்கிற 12'x6' தொட்டியில் உள்ளாடையோட குளிச்சுக் கொண்டு நிப்பார். எங்களுக்கு அவரைப் பாக்க வெக்கமாயிருக்கும். அவருக்கு ஒழுங்காகக் 'கல்கி' புத்தகம் வாறது. நான் அதைப் பாக்கிறதுக்காகத்தான் அரைவாசியும் அங்கை போறனான்.

சிவாப்பெரியப்பாவைப் பற்றியும் அவரின்ர வீடுவளவைப் பற்றியும் இன்னும் கொஞ்சம் சொல்லயிருக்கு. அதை அடுத்த கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள் முடிவதில்லை!

தே.கோகிலவாணி



ஜப்பான் என்பது, ஆங்கிலேயரால் அழைக்கப்பட்ட ஆங்கிலப் பெயராகும். நிஹொன் அல்லது நிப்பொன் என்பதே, அந்நாட்டின் ஜப்பானியப் பெயராகும். உதய சூரியனின் தேசம் (land of rising sun) என்பதே இவ்வார்த்தைகளின் அர்த்தமாக அமைகிறது. அறிவு எங்கே இருந்தாலும் அதைத்தேடிச் செல்வதும் அந்தத் தேடலுக்காக, முழு உழைப்பையும் அர்ப்பணிப்பையும் கொடுக்கத் தயங்காமையும் ஜப்பானியரின் குணம். தொழில் வளம் பெருக்குவதற்கான மூல வளங்களற்ற நாடு.

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 15% மான நிலம் மட்டுமே விவசாயம் செய்வதற்கு ஏற்றதாக உள்ளநாடு. இடையறாமல் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் நாடு. இவை மட்டுமல்ல யுத்தமொன்றுக்கு ஜப்பான் கொடுத்த விலை மிக அதிகம். கோடிக்கணக்கான மக்களைப் பலி கொடுத்தமை மட்டுமல்ல, இரண்டாம் உலகப்போர் நாட்டையே சிதிலமாக்கியது. ஆனால் உலகின் எந்த நாடும் காணாத பெரும் அழிவுகளின் ஆழத்திலிருந்தும் ஜப்பான் மீண்டது மட்டுமல்ல, எழுந்தும் நிற்கிறது.

ஜப்பானின் வெற்றிக் கதைகளுக்குப் பலமான அடித்தளமிட்ட சாமுராய்கள் வாழ்ந்த, சாமுராய் இல்லம் அல்லது சாமுராய் கோட்டை என அழைக்கப்பட்ட இடமொன்றினைப் பார்வையிட விரும்பினோம். எனவேதான், ஜப்பான் இயற்கையையும் செயற்கையையும் வெற்றி கொண்டமையை மேலே தொட்டுக்காட்டுவது பொருத்தமானதெனத் தோன்றியது. ஜப்பானிய மன்னர்களின் கீழ் தளபதிகள், போர்வீரர்கள் போன்ற பணிகளிலிருந்த ஒருசாராரே சாமுராய்கள் என அழைக்கப்பட்டனர். ஒருசில காலகட்டங்களில் நாட்டின் ஆட்சியாளர்களாகவும் இவர்கள் இருந்திருக்கிறார்கள். கட்டுக்கோப்பு, வைராக்கியம், வீரம், தனிமனித சமூக ஒழுக்கம் போன்ற ஆளுமைப்பண்புகள் நிறைந்தவர்கள். அதனாலேயே நாட்டையும் அதே கட்டுக்கோப்புடன் வளர்த்தெடுத்தனர். வர்த்தகம், பொருளாதார வளர்ச்சி, வெளிநாட்டுறவு என ஒவ்வொரு துறைகளிலும் நம்பமுடியாத, அசாத்திய சாதனைகளை நிகழ்த்திக் காட்டினர்.



## பகுதி 4

குறிப்பாக, கல்வியறிவு குறைந்தவர்களான இவர்கள் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தார்கள்.

உதாரணத்துக்குத் தமதாட்சிக்காலத்தில டச்சு வியாபாரிகள் மூலம் கப்பல், கப்பலாகப் புத்தகங்களைக் கொண்டு வந்து நாட்டுக்குள் சேர்த்தமையைக் குறிப்பிடலாம். இயற்கைவளம் குறைந்த நாடொன்று வளரவேண்டுமாயின் , மக்களின் புத்தி தீட்டப்படுவதொன்றே வழியென்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்

சாமுராய்கள்தான் காலப்போக்கிற் பெரும் வர்த்தகர்களாக உருவானார்கள். இன்றைய ஜப்பானில் மிட்சுயி குறூப, சுமிட்டோமோ கோப்பறேசன் போன்ற மிகப்பெரும் வர்த்தகக் குழுமங்கள் இவர்களது காலத்திலேயே ஆரம்பமாகின. கடும் உழைப்பு, துல்லியம், தொழில் நுணுக்கம், தரக்கட்டுப்பாடு என்பன சாமுராய்களின் காலத்திற் தோன்றிய முதற்பரம்பரைத் தொழிலாளிகளின் இரத்தத்தில் ஊறிப் போனதொரு பண்பாயிற்று.

> ஜப்பான் தனது மொத்த நிலப்பரப்பில் 15% மான நிலத்தில் மட்டுமே விவசாயம் செய்வதற்கு ஏற்றதாக உள்ளநாடு. இடையறாமல் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் நாடு. இவை மட்டுமல்ல யுத்தமொன்றுக்கு கொடுத்த விலை மிக அதிகம்.

தொடர்ந்துவந்த பரம்பரைகளும் இதைத் தொடர்ந்தன. இதுவே, துல்லியமான, தரமான பொருட்களின் தயாரிப்பு மையமாக ஜப்பான் மாறக் காரணமானது. ஆரம்பத்தில் போர்த்தளபாட உற்பத்தித் தொழிலில் ஏற்பட்ட அமோக வளர்ச்சி, படிப்படியாக எலக்றோனிக்ஸ் துறைகளில் ஜப்பான் சிகரம் தொட அடித்தளமாயிற்று.

இன்னல்கள் சூழ்ந்த ஒரு தேசத்தை உலகரங்கில் முன்னிறுத்திய, ஓர் இனக்குழுமத்தினர் வாழ்ந்த மரியாதைக்குரிய வாழ்விடமொன்றைப் பார்க்க முடிந்ததில் மகிழ்ச்சியாக இருந்தது. ஜப்பானின் பல்வேறு பிரதேசங்களிலும் சாமுராய் இல்லங்கள் உள்ளன. ரோக்கியோவில் மலையொன்றின் மீது அமைந்திருந்த இல்லமொன்றையே நாம் பார்வையிட்டோம். நுழைவாயிலில் பெரிய பெரிய மீன்களுடன் மிகப்பெரிய குளமொன்று காணப்பட்டது. மீன்களின் பருமன், ஆச்சரியம் தரக்கூடிய வகையில் அத்தனை பெரிதாகக் காணப்பட்டது. முன்னைய நாள்களில் அது ஓர் அகழியாக இருந்திருக்கலாம்.

உள்ளே ஏறிச் செல்வதற்கு அகலமான படிகள், குறிப்பிட்ட ளவு தூரம் ஏறிச் சென்ற பின்பே வீடுகளைக் காணமுடிந்தது. இவர்கள் வாழ்ந்த இடங்கள் இல்லங்களென்றே அழைக்கப்படுகின்றன. ஆனால் ரோக்கியோவில் நாங்கள் பார்த்தது, ஒரு சிறுகோட்டை போன்ற அமைப்புடன் காணப்பட்டது. முனை வளைந்து விசித்திரமான அமைப்புடன் காணப்படும் சாமுராய் வாள்கள் போல, வீடுகளும் ஓரங்களில் வளைவுகளும் நடுமுகடு கூராகவும் வெண் பளிங்கிற் கட்டப்பெற்று தனித்துவமான அம்சங்களுடன் அழகாகக் காணப்பட்டன. உள்ளே நிறைய உல்லாசப் பயணிகள் காணப்பட்டார்கள்.

உணவு விடுதிகளும், வருவோர், நினைவாக வாங்கிச் செல்வதற்கேற்ற ஜப்பானியக் கலைப்பொருள் விற்பனை நிலையங்களும் காணப்பட்டன. ஓரிரு கலைப்பொருட்களை சாமுராய்கள் ஞா[illegible]கமாக வாங்கிக்கொண்டு, வாழ்வாங்கு வாழ்ந்த மனி[illegible]ர்கள் வாழ்ந்த மலையிலிருந்து உற்சாகமாகக் கீழிறங்கினோம்.

(தொடரும்)



---

# வித்துவான் பதில்கள்!




0773165555



**1. வித்து... 70 களின் காலம் இன்று இடம்பெறுகிறதே?**

*காளிதாசன், உடுப்பிட்டி.*

வரலாற்றுப் புத்தகங்களில்தான் கற்றுக்கொண்டோம். இப்போது நாம் அனுபவிக்க வேண்டிய நேரம் இது.

**2. நாட்டு மக்களுக்கு கோத்தாபய ராஜபக்ச ஆற்றிய உரையின் விளக்கத்தை கூறுங்களேன் வித்ஸ்?**

கி.சுகிர்தன், அல்வாரை

உப்பு சப்பு இல்லாத உரை. கண்ணாடியை திருப்பினா ஆட்டோ எப்படி ஓடுமா....?

**3. காலம் எவ்வளோ வேகமா சுத்துது பாத்திங்களா வித்தூஸ்??**

குகபாலன், நெல்லியடி

ஆம்! அன்று கொழும்பில் பாற்சோறு கொண்டாட்டம் கொண்டாடியோர் இன்று பாண் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.




**4. நமக்கு வயதாகிவிட்டது என்பதை எப்போது வித்தூ உணர்வோம்...**

பா.பாஸ்கரன், நீர்வேலி

நாங்களெல்லாம், அந்தக் காலத்திலேன்னு நாமும் பேச ஆரம்பிக்கும் போது வயதாகி விடுகிறது.





**5. உக்ரைன் சண்டை, இலங்கை பொருள் தட்டுப்பாடுகளோட மறந்தே போயிட்டன் அந்த ஓமிக்ரோன் என்னாச்சு**

*தீபிகா, உடுவில்*

இருக்கு ஆனால் இல்லை. இல்லாதது மாதிரியும் இருக்கு, இருக்கிறது இல்லாதமாதிரி இருக்கிற தாவும் இருக்கு.

**6. எரிபொருள் வரிசை நீண்டுகொண்டு போறதுக்கு என்ன காரணம் வித்தூஸ்...?**


கே.தனபாலன் இளவாலை

வேறென்ன காரணம், எரிபொருள் இல்லாததுதான் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானத்தி

○ கருணை ரவி



சஞ்சீவி

தொடர் கதை

27

விடிகிறது... பூங்கொடி தெருவை எட்டிப்பார்த்தாள். வீதியெங்கும் இராணுவத் தொப்பிகள் தெரிந்தன. ஐந்து மணிக்கு கேட்கும் பிள்ளையார் கோயில் மணி இன்று நான்கு மணிக்கு கேட்டது. இராணுவத்தினர் ஊர்களை சுற்றிவளைக்க வந்தால் பிள்ளையார் கோயில் ஐயர் நேரம் தப்பி மணியடிப்பார். அப்ப சனங்களுக்குத் தெரியும் ஆமிக்காரர்கள் ஊர்களை சுற்றிவளைக்கிறார்கள் என. போராளிகள் இடம் மாறுவார்கள். ஊர்களில் உள்ள இளைஞர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வார்கள். ஐந்து மணிக்கு போகும் பஸ் போகவில்லை. பூங்கொடிக்குப் பயமாக இருந்தது. கனகத்தை பூறாட்டி பேசிக்கொண்டிருந்தான். வீட்டை விட்டு வெளிக்கிடும்போது தங்களுக்கு சொல்லாமல் போனதாகவும் கனகம் இவ்வளவு நாட்களும் தங்கள் மேல் காட்டிய பாசம் வெறும் போலியெனவும் திட்டினான்.

நிருபன் பசிக்குதென்று அழுதான். வேலி இல்லை. குசினிக்குள் போய் தேநீர் வைக்க அவளுக்குப் பயமாக இருந்தது. மெதுவாக தெருவைப்பார்த்தாள். வெளியில் எவரையும் காணவில்லை. தென்னைக்குக் கீழே பொச்சுகள் குவிந்திருந்தன. பொச்சுகளை எடுத்து தேநீர் வைக்க எண்ணினாள். மெதுவாக வெளியில் போனாள். தென்னைக்கு கீழே சைக்கிள் நின்றது. சைக்கிளைப் பார்த்ததும் அதிர்ந்து போனாள்.

புதுச்சைக்கிள். செயின்கவரில் ஏதோ நம்பரும் எழுத்தும் போட்டு பெயின்ரால் எழுதியிருந்தது. நேற்று வீட்டுக்குச் சாமான்கள் கொண்டு வந்து தந்த உழவு இயந்திரத்தில் இருந்த அதே சைக்கிள். பதறிக்கொண்டு பூறாட்டிக்குப் பக்கத்தில் வந்தாள். பூறாட்டிக்கு சைக்கிளைப்பற்றிச் சொன்னதும் எழும்பி சைக்கிளையும் வெளியையும் பார்த்தான்.

சைக்கிள் பூறாட்டிக்கு அச்சமூட்டும் பலகதைகளைச் சொல்லியது. அவர்கள் எங்கோ கண்ணிவெடிகளை புதைத்து விட்டு நிற்க வேணும். அல்லது வந்த இடத்தில் இராணுவத்தைக் கண்டதும் சைக்கிளை விட்டு எங்கேனும் ஒளித்திருக்க வேண்டும். அல்லது வந்தவர்களை இராணுவத்தினர் பிடித்துச்சென்றிருக்க வேண்டும். சைக்கிள் வீட்டில் நிற்பது தங்களுக்கு ஆபத்து என நினைத்தான்.

கனகம் ஏன் சொல்லாமல் போனாள்? பொடியளைக்கண்டதும் ஓடிப்போனாளா? அவர்கள்தான் கலைத்து விட்டார் களா? கனகம் எங்களையும் கூட்டிச்செல்ல வர அவர்கள்தான் தடுத்தார்களா? இதில் ஏதாவது ஒருகாரணம் இருக்கும் என பூங்கொடி நினைத்தாள்.

பூறாட்டி எழும்பினான். சைக்கிளை எடுத்து மறைக்கவேணும் என நினைத்தவன் ஜன்னலுக்கால் தெருவைப்பார்த்தான். எட்டத்தில் எருக்கலை மறைவில் ஒரு சிப்பாயின் தொப்பி தெரிந்தது. மெதுவாக படிக்கட்டில் இறங்கினான். சைக்கிளை உருட்டி வந்து விறாந்தையில் விட்டான்.

"எழுத்தை அழியுங்கோ"

பூங்கொடி சொன்னதும் பூறாட்டி யோசித்தான். எதால அழிப்பது?

சுவரில் கலண்டர் கொழுவி இருந்த ஆணி இருந்தது. அதை எடுத்து எழுத்தைச் சுறண்டிக்கொண்டிருந்தான்.

"டும்..."

சத்தம் எட்டமாகக் கேட்டது. பூறாட்டி சைக்கிளை எடுத்து சுவரோடு சாற்றினான். இடைக்கிடை துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டன. நாய்கள் குரைத்தன. வீட்டுக்குள் இருந்ததால் சத்தம் எத்திசையில் கேட்டதென அவர்களுக்குத் தெரியவில்லை. கண்ணி வெடிமாதிரி பெரியசத்தமாய் அது இல்லை. நிலம் அதிரவில்லை. வீடு குலுங்கவுமில்லை.

"அடோவ், வா... வா..."

பின்கரையால் வந்த சில சிப்பாய்கள் எல்லோரையும் வெளியில் வரச்சொன்னார்கள். பயத்துடன் பூங்கொடியும் பூறாட்டியும் போனார்கள். ஒரு சிப்பாய் சிகரெட்டைப் பற்ற வைத்துவிட்டு தீக்குச்சியை பொச்சுக்கள் மேலே எறிந்தான். பூறாட்டியை முதுகில் தள்ளிக் கொண்டு போனார்கள். பூங்கொடி கெஞ்சவும் பூறாட்டியை விடவில்லை. நிருபன் பூங்கொடியின் இடுப்பில் இருந்து

"அப்பா..."

என்று கத்தினான். அவள் றோட்டுவரைக்கும் போனாள். ஒருவன் துப்பாக்கிப் பின்பக்கத்தால் அவளுக்கு ஓங்கினான். அவள் ஓடிவந்து நித்தியைப் பார்த்தாள். அவனைக் காணவில்லை.

"நித்தி... நித்தி..."

பதற்றப்பட்டுக்கொண்டு எல்லா இடங்களும் தேடினாள். வீட்டுக்குள்ளும் போனாள். சீலைக்கொடிக் குள் மறைந்து நின்றவன் வெளியில் வந்தான்.

"அப்பாவைக் கொண்டுபோறாங்கள்..."

சொல்லிக்கொண்டுமுற்றத்துக்குபோனாள். பொச்சுக்கள் புகைத்துக் கொண்டிருந்தன. படலைக்குப்போனாள். சனங்கள் தெருக்களில் நின்றனர். சிலரின் அழுகைச்சத்தங்கள் கேட்டன. நிறைய இராணுவத்தினர் ஊரைச் சுற்றிவளைத்தனர். உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, நெல்லியடி உட்பட்ட இடங்களை வளைத்து ஆட்களைப் பிடித்துக் கொண்டு போனார்கள். சரியாக ஐந்து பத்துக்கு குண்டுச்சத் தம் கேட்க ஊருக்குள் இறங்கினார்கள்.

மரியதாஸ் வந்தான். றொபோவை பிடித்ததென்று தெருவில் நின்ற ஜோசப்புக்குச் சொன்னான். ஜோசப் சொன்னான் 'அந்தோனியையும் கொண்டு போறாங்கள்' என்று. இதுவரைக்கும் பூறாட்டியை மட்டுமே பிடித்தார்கள் என்று நினைத்தவள் மற்றவர்களையும் பிடித்ததை நினைத்து ஆறுதலடைந்தாள்.

ஒவ்வொரு ஒழுங்கைகளிலும் சனங்கள் நின்றனர். வயது வேறுபாடின்றி பிடித்துக்கொண்டு போனவர்கள். வயது கூடியவர்ளை விடுவார்கள் என பிலிப்பு கதைப்பது அவளின் காதுக்கு எட்டியது.

"இளம் பொடியளை பலாலிக்கு கொண்டு போறாங்கள். சிலதுகளை வைச்சிருக்கிறாங்கள். என்னை கள்ளுக்கொண்டுவரச் சொல்லிவிட்டவங்கள். நான் ஓடிவந்திட்டன்"

அந்தோனி சொல்லிக்கொண்டு வந்தான். கிளினர் தெய்வேந்திரமும் வந்தான். முகம் வியர்த்திருந்தது. சாரம் மட்டும் கட்டியிருந்தான். வெறும் மேலுடன் தெய்வேந்திரம் வீட்டை விட்டு வெளிக்கிடமாட்டான். யாரும் வீட்டுக்குப்போனால் சேட்டைப் போட்டுக்கொண்டே வெளியில் வருவான். அவன் உடுப்பிட்டி மரக்காலையில் வேலை செய்தான். இரவிரவாக வேலை செய்வான். ஐந்து நாட்களுக்கொரு தடவை வீட்டுக்கு வருவான்.

"உடுப்பிட்டி, நாவலடி பஸ் நிலையத்திலை நிண்ட ஆமியளுக்கு குண்டு எறிஞ்சவங்களாம். கொமாண்டர் செத்தாப்பிறகு தான் ஆக்களைப் பிடிக்கிறாங்கள். நான் விடியிறதுக்கி டேலை இஞ்சாலை வந்திட்டன்" கிளினர் தெய்வேந்திரம் சொல்வதை மரியதாஸ் கேட்டான். பூங்கொடி கலவரமடையவில்லை. வயதுபோனவர்களை விடுவார்கள் என்ற நம்பிக்கையில் வாசலில் வந்து இருந்தாள். கனகம் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. பொச்சு புகைத்துக் கொண்டிருந்தது. கனகம் ஏன் வீட்டைவிட்டுப் போனாள்? போகும்போது தங்களுக்கேன் சொல்லவில்லை?

பயத்துடன் பூங்கொடியும் பூறாட்டியும் போனார்கள். ஒரு சிப்பாய் சிகரெட்டைப் பற்ற வைத்து விட்டு தீக்குச்சியை பொச்சுக்கள் மேலே எறிந்தான். பூறாட்டியை முதுகில் தள்ளிக் கொண்டு போனார்கள்.

அதை அறியவேணும்போலிருந்தது அவளுக்கு. தென்னையில் இருந்து தென்னோலை விழுந்தது. நாய்கள் குரைத்தபடி இருந்தன. தெருவில் நின்ற நித்தியைக் கூப்பிட்டு வீட்டுக்குள் விட்டாள்.

கனகம் ஏன் வரவில்லை? இரவிரவாக கரவெட்டிப்பக்கம் போனாளா? அல்லது இரவு கனகத்தையும் இந்திராணியையும் பிடித்துக் கொண்டுபோய் செய்யிறதெல்லாத்தையும் செய்துவிட்டு பற்றைகளுக்குள் போட்டிருப்பார்களா? கனகத்தின் மகள் இந்திராணி பயந்தவள்.

வீட்டுக்கு கனகத்தை வரவிடாது தடுக்கிறாளா? பிடித்துக் கொண்டு போன பிலிப்பு வீட்டுக்குத் திரும்பும்வரை பிலிப்பு வீட்டில் இருக்கிறாளா? கனகம் வரும்வரை தனது வீட்டுக்குப் போகாமல் பூங்கொடி கனகம் வீட்டு வாசலில் இருந்தாள். றொபோவைப் பிடித்த தென்றதும் நித்தி கவலையில் இருந்தான். தெருவுக்குப் போனான். தெருவுக்குப் போகவேண்டாம் என்று பூங்கொடி சொன்னாள். அவன் அவளின் சொல்லைக் கேட்காது தெருவில் நின்றான்.

பொச்சுகளுக்கு மேலே விழுந்த தென்னோலை எரிந்தது. வீட்டில் எவருமில்லை அணைப்பதற்கு. நித்தியைக் கூப்பிட்டாள். கிடுகுகளால் வேய்ந்த குசினி பக்கத்தில் இருக்கிறது. நெருப்பு பிடித்து விடும் என்று சொல்ல நித்தி வந்து வாளிக்குள் தண்ணி எடுத்தான். அவள் மண் அள்ளி பொச்சுக்கு மேலேபோட பொச்சுக்குள் இருந்து ஒருவன் எழும்பினான்.

(வருவாள்)

சஞ்சீவி

தொடர் கதை



## தனிமை பேரிரைச்சல்

- குமார் சேகரன்

விருப்பு வெறுப்பு
கலந்த சொற்களை
மௌன பெட்டிக்குள் போட்டு
தாழிட்டு பூட்டொன்றால்
பூட்டி வைத்தேன்

விருப்பும் வெறுப்பும் [illegible]

வாக்குவாதமாக்கிக்
கொண்டிருக்கின்றன

மௌனத்தினுள்
பேரிரைச்சல்
கேட்கத் தொடங்குகிறது

இதோ கையிலுள்ள
அப்பூட்டின் சாவியை [illegible]

உருக்கிக்
கொண்டிருக்கிறேன்
தனிமை தீயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2023 இல் ஐதேக ஆட்சி!

" 2023 இல் ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஆட்சி மலரும். அது எப்படியென தற்போதே வியூகத்தைக் கசியவிடமுடியாது. எனவே, நம்பிக்கையைக் கைவிடாமல், கட்சிப்பணிகளை முன்னெடுக்கவும்." இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு அந்தக்கட்சியின் தவிசாளரான வஜிர அபேவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்ட விதத்தை பலரும் பாராட்டினர். ரணிலின் தேவை உணரப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளிக்கையிலேயே, " ஆம். தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள ரணிலின் மூளை வேண்டும் என்று தேரர்கள்கூட குறிப்பிடுகின்றனர். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. எப்படியும் 2023 இல் நாம்தான் ஆட்சியில் இருப்போம் . ஐக்கிய தேசியக்கட்சியே தலைமைக்கட்சியாக செயற்படும். ஆட்சி எப்படி மாறும் என எவரும் இப்போது கேட்கவேண்டாம். " என்று வஜிர கூறினாராம்.

# மூழ்கும் கப்பலில் பதவி



இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ள நிமல் லான்சாவுக்கு, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியொன்றை வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்டுவந்த நிமல் லான்சா மார்ச் 22 ஆம் திகதி பதவி துறந்தார்.

" நாட்டு மக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நேரத்தில், வெறுமனே அதனை வேடிக்கை பார்க்க முடியாது . எனவே, சிறப்புரிமை மற்றும் அதிகாரம் ஆகியவற்றுக்கு அப்பால் மனச்சாட்சியின் பிரகாரமே இந்த முடிவை எடுத்தேன்." என நிமல் லான்சா அறிவிப்பு விடுத்திருந்தார்.

பஸில் ராஜபக்சவின் விசுவாசியாக செயற்பட்டுவந்த நிமல் லான்சா, அண்மைக்காலமாக அரசுடன் முரண்பட ஆரம்பித்தார். இதனால் ஒரு மாதத்துக்கு முன்னரே அமைச்சு பக்கம் செல்வதை நிறுத்திக்கொண்டார். தனது தனிப்பட்ட ஆளணி பிரிவையும் அமைச்சில் இருந்து விலக்கிக்கொண்டார். அதன்பின்னர் நான்கு காரணங்களை முன்வைத்து ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு பதில் கிடைக்காத நிலையிலேயே பதவி விலகும் முடிவை எடுத்தார். எனினும், ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிய பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி இன்னும் ஏற்கவில்லை.

லான்சாவை அரசில் தக்க வைக்க வேண்டும் எனவும், அவருக்கு அமைச்சர் வாசு வகிக்கும் அமைச்சுப் பதவியை வழங்குமாறும் ஜனாதிபதியால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு லான்சா மறுப்புத் தெரிவித்துள்ளார். மூழ்கும் கப்பலில் மறுபடியும் சவாரி செய்யத் தயாரில்லை என தனக்கு நெருக்கமானவர்களிடம் அவர் கூறியுள்ளாராம்.

# அறிந்தும் அறியாமலும்

○ சூரியன்








## ‘ஆளை விடுங்கோ ஐயா!’

" நாட்டின் தற்போதைய நிலைமை நீடித்தால் மக்கள் எங்களைத் தாக்குவார்கள். மக்கள் புரட்சி வெடிப்பதை தவிர்க்கமுடியாமல் போய்விடும். எனவே, உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தை நாடி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்களை பிரிந்து போக அனுமதியுங்கள்"

இவ்வாறு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் அவசர கோரிக்கையை முன்வைத்தனர்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட கூட்ட மொன்றின்போதே இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

" நாட்டின் நிலைவரம் பற்றி புலனாய்வுப்பிரிவினர் அறிக்கை சமர்ப்பிக்கின்றனர். நிலைமை எனக்கும் புரிகின்றது. இது பூகோள தாக்கம். எனவே, ஒன்றாக செயற்பட்டு மீண்டெழுவோம். நம்பிக்கையை கைவிடக்கூடாது. சர்வதேச நாணய நிதியத்தை நாட முடிவெடுத்துள்ளோம்." என்று ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

" ஆம். சர்வதேச நாணய நிதியத்தை நாடுவோம். அவர்கள் நிபந்தனைகளை முன்வைக்கக்கூடும். எனினும், தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை நாம் கைவிடக்கூடாது. புத்தாண்டுக்கு முன்னர் இந்த வரிசைப் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும். அதற்கான பொறிமுறை தயாரிக்கப்பட்டுவருகின்றது." எனக் குறிப்பிட்டு ஆளுங்கட்சியினருக்கு நம்பிக்கையளித்தாராம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவை அனுமனுடன் ஒப்பிட்டு, மகாநாயக்க தேரரிடம் முறைப்பாடு முன்வைத்துள்ளார் முன்னாள் அமைச்சரும், பிவிருது ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில.

" அனுமன் தனி ஆளாக இலங்கையைக் கொளுத்தி அழித்ததுபோல, பஸில் ராஜபக்சவும் நாட்டை அழித்துக்கொண்டிருக்கிறார் என்பதே கம்மன்பிலவின் கருத்து.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, பிவிருது ஹெல உறுமய உட்பட 11 கட்சிகளின் பிரதிநிதிகள் கண்டிக்கு பயணம் மேற்கொண்டு அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க , அனுநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிபெற்றதுடன், சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலும் தெளிவுபடுத்தினர். அத்துடன், அரசின் செயற்பாடுகள் தொடர்பில் பல முறைப்பாடுகளையும் முன்வைத்தனர்.

மல்வத்த பீடத்தின் அனுநாயக்கத் தேரர் அதி வணக்கத்துக்குரிய திம்புல்கும்புரே விமலதம்ம தேரரை 11 கட்சிகளின் பிரதிநிதிகள், சந்தித்தவேளையிலேயே, கம்மன்பில இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அரசின் சாதாரணப் பெரும்பான்மை இல்லாது செய்யப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ சபதம் எடுத்துள் ளார். இன்னும் 12 பேர் வெளியேறினால் அரசு கவிழும் எனவும், இதற்கான அழுத்தத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் பிரயோகிக்க வேண்டும் எனவும் விமல் குறிப்பிட்டுள்ளார்.

## உரையும் உடையும்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் செயற்பாடுகள் தொடர்பில் ராஜித சேனாரத்ன உட்பட கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

அரசுக்கு எதிராக பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி செயலகம் முன் நடத்தியிருந்தது. 43 ஆம் படையணியை உருவாக்கி சஜித் அணியை கிலிகொள்ள வைத்துள்ள சம்பிக்க ரணவக்கவும் இதில் பங்கேற்றார்.

சம்பிக்கவின் வருகை சஜித்துக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியது. எப்படியும் அவரை ஓரங்கட்டிவிட வேண்டும் என எண்ணிய அவர், கூட்டத்தில் உரையாற்ற சம்பிக்கவுக்கு வாய்ப்பளிக்க வேண்டாம் என ஏற்பாட்டாளர்களுக்கு கட்டளையிட்டுள்ளார்.

'சம்பிக்கவை மட்டும் புறக்கணித்தால் சிக்கல், எனவே, ராஜித, பொன்சேகா உட்பட எவரும் உரையாற்ற வேண்டியதில்லை. உங்களின் உரையுடன் கூட்டத்தை முடிப்போம்' என சஜித்துக்கு ஏற்பாட்டாளர்கள் ஐடியா கொடுத்தனர்.

இதன்படி சஜித்தின் உரை முடிந்ததும் கூட்டம் நிறைவுக்கு வந்தது.

அதன்பின்னர் கூட்டம் பற்றிய மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்குற்றிய ராஜித கடும் சீற்றத்தை வெளிப்படுத்தினார்.

" அரசியலில் பிரச்சினை இருக்கலாம். ஆனால் பொதுவெளியில் ஒன்றாகப் பயணிக்கவேண்டும். பொதுக்கூட்டமொன்றை நடத்தினால் உரையாற்ற வாய்ப்பளிக்க வேண்டும். சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு கட்டாயம் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அதுதான் ஜனநாயகப் பண்பு. இனி இந்தநிலைமை ஏற்பட்டால் , ஜனநாயகம் இல்லாத இடத்தில் நான் இருக்கப் போவதில்லை. இதே வழியில்சென்று நாம் ஆட்சியைப்பிடித்தால் அந்த ஆட்சிகூட நீடிக்காது."என ராஜித சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொக்கரித்த குட்டிச்சேவல்



சர்வகட்சி மாநாட்டை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புறக்கணித்திருந்த நிலையில், அது தவறான முடிவாகும் என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இருவர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் வாதிட்டு ,கடும் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசில் இருப்பதாக இருந்தால் கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும் எனவும், ஜீவனுக்கு இன்னமும் அரசியல் பக்குவம் வரவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் உள்ள பிரபுக்களுக்கான சிற்றுண்டிச்சாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் கடுப்பாகிய ஜீவன், மக்கள் துன்பப்படும்போது, நாங்கள் அவர்கள் பக்கம் நின்றுதான் முடிவெடுக்க வேண்டும். எனவே, தீர்மானம் பற்றி எங்களுக்கு எவரும் பாடம் எடுக்க வேண்டியதில்லை என பதிலடி கொடுத்துள்ளார். [illegible] அதற்கு கட்டுப்பட்டே செயற்பட வேண்டும். [illegible] முடிவுகளை எடுக்க முடியாது 'எனவும் ஜீவன் கடுந்தொனியில் அவர்களுக்கு பதிலடி கொடுத்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிமாநேத்ரன்

# துப்பறியும் AK67

19

'காமிக்ஸ்' தொடர்



சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்




(முற்றும்)

## கதையோடு தொடர்புடைய அறிவியற் தகவல்கள்

"புகைப்பிடிப்பது உடலுக்குத் தீங்கானது" ஏஞ்சலா கலாபனின் அறிவுரைக்குப் பின் அரிமா நேத்திரன் புகைப் பிடிப்பதைப் பூரணமாகத் தவிர்த்துவிட்டார். இப்போதெல்லாம் தீப்பெட்டியை விளக்கேற்றவே பயன்படுத்து கிறார். தீப்பெட்டியின் இரு பக்கத்திலும் பொஸ்பரஸ் உள்ளதெனவும் தீக்குச்சியில் உள்ள பொட்டாசியம் அத னோடு உரசும் போது தீப்பற்றுகிறது எனவும் ஏஞ்சலா கலாபன் அவரிடம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏஞ்சலா கலாபன் மீமறவர் பூங்காவிலே AK47 வகைத் தோட்டாவை வைத்து மூடுபகுதியின் பின்புறம் மெழு குவர்த்தியின் உதவியோடு வெப்பமேற்றினார். Primer பகுதி சூடேறியது. தோட்டாவின் பின்னுள்ள மூடுபகுதியினுள் வெடிதுகளாக பொட்டாசியம் நைத்திரேட், சல்பர், கரிபொடி என்பன உண்டு. வெடிதுகள்களுக் கும் தோட்டாவுக்கும் இடையே நுண்ணிடைவெளி காணப்படுகிறது. மெழுகுவர்த்தியின் வெப்பத்திலே வெடி துகள் வாயுவாக மாற நுண்ணிடைவெளி போதாமையால் உந்துவாயுவானது தோட்டாவின் அடிப்பகுதியை அழுத்தியது. அப்போது தோட்டா வேகமாக வெளியேறி அதிமகிழ்நனின் மார்பைத் துளைத்தது.

ஏஞ்சலா கலாபனின் டயரியில் எண்ணற்ற கணிதப் பதிவுகள் உள்ளன. அவை குறித்து பேசும் போது அவ ரது முகத்திலே பூரிப்பைக் காணமுடிகிறது. "உலகின் முதன்மையான கணிதப் பதிவானது லே போம் போ எலும்பு (Lebombo Bone) சுவிஸ்லாந்தில் கிடைக்கப் பெற்றது. பெண் ஒருத்தி கருவுற்ற காலக்கணக்கை எலும்பிலே வரவுக்குறியாக பதிந்துள்ளாள். இரண்டாவது பதிவான இஷாங்கோ எலும்பும் (Ishango bone) பெண்ணின் பதிவுதான்" என்று புன்னகையோடு கூறுவார்.

தகுநயாவின் ஆய்வுகூடத்திலுள்ள கண்ணாடிக் குடுவையுள் மஜிசி கடா என்ற ஒரு வகைப்பூச்சி உள்ளது. வெப்ப மண்டலக் காடுகளில் மண்ணுள் வாழும் இப்பூச்சி 13 அல்லது 17 வருடங்களுக்கு ஒருமுறைதான் வெளிவரும். 13 மற்றும் 17 என்பன முதன்மை எண்களாகும். இரண்டு ஆண்டு வாழ்நாள் உடைய உயிரி னம். 13 வருடத்துக்குப் பின்னே வெளிவரும் மஜிசிகடாவைச் சந்திக்க 26 வருடமும் 17 வருடத்துக்குப் பின்னே வெளிவரும் மஜிசிகடாவைச் சந்திக்க 34 வருடமும் காத்திருக்க வேண்டும். மஜிசிகடா என்ற பூச்சியைப் பாது காக்கும் இயற்கையின் கணிதமாக இதனைக் கருதலாம். ஏனெனில் 12 வருடத்துக்கு ஒருமுறை மஜிசிகடா வெளியே வந்தால் 2,3,4,6,12 ஆண்டு வாழ்நாள் உடைய உயிரினங்களால் உண்ணப்படும். (12 என்பது 2,3,4,6,12 என்பவற்றால் வகுபடும்)

அரிமா நேத்ரனிடம் ஒரு மோட்டார் சைக்கிளும் உள்ளது. அதன் இலக்கம் AN6174 அரிமா நேத்ரன் என் பதன் சுருக்கமாய AN அமைந்ததில் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி. 6174 என்பது காப்ரேகர் மாறிலி என அழைக்கப்படுகிறது. இந்த எண்ணை இறங்குவரிசைப்படுத்திவிட்டு அதன் ஏறுவரிசையைக் கழித்தால் (7641-1467=6174) அதே எண் வரும். மேலும் நான்கு இலக்க எண்களை இவ்வாறு தொடர்நிலையிலே செய்தால் இறுதியில் 6174 வந்தடையும்.

# மௌன மொழி 76



அவள் கண்களின் சுருக்கம்
அவளது உள்ளக் குமுறல்களை
சித்தரித்துக்கொண்டே கேட்கின்றது
என் மகனை காலன் எடுத்துச் சென்றானோ?
இல்லை மாயை எனும் மானிட மர்மங்கள்
வருடி கொன்றனவா என்ற ஏக்கத்துடன்
அவள் கதறும் ஒலி

**த.கிருஸ்ணியா**, சாவகச்சேரி

கருத்தாங்கிய உன்னை
கரங்களில் ஏந்தக் கனவு கண்டேன்
கனவு போல் கரங்களில் ஏந்தினேன்!
குழந்தையாக அல்ல மாறாக
காணாதோர் பட்டியலில் கண்டுபிடிக்க
கண்ணீருடன் உனது போட்டோவை
ஏந்தி ஏக்கத்துடன்!

**ஞா.சனோசிலியா**, ஊர்காவற்றுறை

இன்னும் தேடுகிறேன்
உனை இழந்து
உனக்காக நான்
தனிமையில் தோய்ந்தவளாய்
இங்கே காத்திருக்கிறேன்
உறவு இன்றி துறவு தான் பூண்டு
மீண்டும் உன்,உறவுக்காக

**இ.பர்மினி**, உரும்பிராய்

கனதியான
காத்திருப்பு
என் கையில்
காலங்காலமாக
நீ வருவாயென்ற
என் நம்பிக்கையில்

**க.நாகேஸ்வரா**
சண்டிலிப்பாய்

தேசத்துக்காக நேர்ந்து விட்ட வீரமகன்
வேசம் போட்டு தாய் நாட்டைத் தோற்று
வேசம் போடா தாய் கண்ணீர் வென்றீர்
வயிறு சுருங்காது சோறு போட்ட அன்னை
தோல் சுருங்கி விடுதலையாய் நிற்கிறாள்
தூக்கிய காவடியில் குற்றம் போல தந்த
இவ்விடுகதைகளுக்கு எப்போது விடை கிடைக்குமோ?

**லோ.கம்சனா**, யாழ்ப்பாணம்

தள்ளாடும் வயது தனில்
தொலைந்த ஓர் உறவின் தேடல்
கண் காணும் தூரம் வரை
நிஜம் மறைக்கும் மர்மத்திரை
இறுதி மூச்சு நிற்கும் கணம்
நிறைவு பெறும் என் தேடல் பயணம்

**துஷானி பரமானந்தம்**

இள இரத்தம் மதத்தை விலக்க
உள்ளக் காதல் சாதியை ஒழிக்க
மீளத்துடிக்கும் நாட்டிற்காய்
வீறு கொண்டு எழுந்தாய் ஆனால்
விதியோ உன்னை வாழ்த்தி அனுப்பியது
மடிதாங்கிய நாட்டிற்காய் எப்போதும்
மனதில் இருக்கும் படி காகிதத்தில்
உன் முகத்தை!

**ஜெ.ஜெரிஸ்**
ஊர்காவற்றுறை றோ.க.த.க.
பாடசாலை

உறவுகளை
தொலைத்துவிட்டு
ஊன் உறக்கம் ஏதுமின்றி
உருகித் தவிக்கும்
உறவுகள்
அலைந்து திரிந்து
ஐநா வரை சென்றும்
காலங்கள் கடந்ததுவே தவிர
கவலையும் கண்ணீரும்
காயவில்லை

**வி.பி.சிவேஸ்**
தண்ணீரூற்று

நம் நாட்டில் கொடிய போரால்
வலிந்து கர்ணமலாக்கப்பட்ட
தன் அன்பு மகனை கையில்
புகைப்படத்துடன் தேடிக்
கதறி அழுதிடும் தாயே
வாழ்வில் அதற்கு என்றும்
ஈடாகுமா நம் நாட்டு அரசின்
இறப்புச் சான்றிதழும் பணமும்

**சு.ஜெயரூபன்**,
பருத்தித்துறை

அவள் கண்களின் சுருக்கம்
அவளது உள்ளக் குமுறல்களை
சித்தரித்துக் கொண்டே கேட்கின்றது
என் மகனை காலன் எடுத்துச் சென்றானோ
இல்லை மாயம் எனும் மானிட மர்மங்கள்
வருடிக் கொன்றனவா என்ற ஏக்கத்துடன்
அவள் கதறும் ஒலி

**த.கிருஸ்ணியா**,
சாவகச்சேரி

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
01.04.2022
அனுப்ப வேண்டிய முகவரி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Sanjeevi@uthayan.com
0773165555

77



டிம்பிள் மெல்வீயின் மோட்டார் சைக்கிள் இலக்கம் DM 1729 என்பது வியப்பானதே. இரு மூன்ற டுக்கு எண்களின் கூட்டுத் தொகையாக இருவிதங்களில் வெளிப்படுத்தக்கூடிய சிறிய எண் 1729ஆகும். ($1^3+12^3=9^3=10^3=1729$) கணிதமேதை இராமானுஜன் கண்டறிந்தால் இராமானுஜன் என்றே அழைக்கப்படுகின்றது.

அரிமா நேத்ரனுக்கு கணிதம், அறிவியல் தொடர்பான வினாக்கள் அதிகமாகப் பிடிக்கும். அவர் டிம்பிள் மெல்வீயிடம் முதன்முதலில் கேட்ட வினா என்ன தெரியுமா? கூட்டல், கழித்தல், பெருக்கல் என்பவற்றில் இருந்து வகுத்தல் எவ்வகையிலே வேறுபடுகின்றது? என்பதுதான். "ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என நகரும் வரிசையில் ஒன்றினிடத்தில் இருந்து செய்வதாகக் கூட்டல், கழித்தல், பெருக்கள் என்பன அமைய வகுத்தல் மட்டும் முரண்பக்கத்தில் செய்வதாக அமையும். அதாவது நான்கு இலக்க எண்ணாயின் ஆயிரமாவது இடத்திலிருந்து வகுத்தல் செய்யப்படும்" என்று டிம்பிள் மெல்வீ எளிதாக பதில் கூறிவிட்டார்.

அரிமாநேத்ரனைப் போலவே டிம்பிள் மெல்வீயும் அறிவியல் ரீதியான வினாக்களை கேட்பார். அவர் அரிமா நேத்ரனிடம் முதன்முதலில் கேட்ட வினா என்ன தெரியுமா? வானொலியைக் கண் டுபிடித்தவர் யார்? என்பதுதான். அரிமா நேத்ரன் 'மார்க்கோணி' என்று தவறான விடையைக் கூறிவிடவில்லை. 'டெஸ்லா' என்றே பதில் கூறினார். 'டெஸ்லாவின் வரைபடங்களின் அடிப்படை யிலேயேதான் மார்க்கோணி வானொலியைக் கண்டறிந்தார். எனவே வானொலியைக் கண்ட றிந்த முதல் மனிதன் டெஸ்லாதான் என்று சரியாக பதிலைக் கூறினார்.

அரிமா நேத்ரனுக்கு பிடித்த நடிகை மர்லின் மன்றோ. பொன் விகிதத்தில் மர்லின் மன்றோவின் முகம் அமைந்திருப்பதாக நண்பர்களிடம் வியப்போடு கூறுவார். ஏதேனும் ஒரு இயல் எண்களுக்குள் உள்ள விகிதம். அவ்விரண்டு எண்களின் கூடுதலுக்கும் அவற்றுள் பெரிய எண்ணுக்கும் உள்ள விகிதத்துக்குச் சமனாகஇருப்பது பொன் விகிதம் எனப்படும். 0,1,1,2, 3, 5, 8,13, 21 என நீட்சிபெறும் எண் தொடர்ஃபி போனாட்சி எண் தொடர் (fibo nacci number sequence) எனப்படும் தொடர்ச்சியான இரு எண்களின் கூட்டுத் தொகையில் அடுத்த எண் அமையும். (0+1=1, 1+1=2, 1+2=3)இந்த எண் அளவீட்டைச் செவ்வகமொன் றிலே வடிவமைத்தால் சுருள் வடிவமொன்றினை அடைவோம். சூரியகாந்தி பூவின் விதைகள் அமைப்பு, புயற்சுழற்சி, சங்கு, டாவின்சியின் ஓவியங்கள் போன்றவற்றிலும் பொன் விகிதத்தை காண முடியும்.

அரிமாநேத்ரனும் டேவிட் மிராண்டாவும் சந்தித்தபோது பூனையொன்று கத்தியமை உங்களுக்கு நினை விருக்கலாம். அப்பூனையினன் விழித்திரைக்குப் பின்னால் ஒளியைப் பிரதிபலிக்கும் Tapetum என்னும் கலங்கள் அடுக்காக உள்ளதாலேயே அதன் கண்கள் இரவிலே பளபளத்தன. மேலும் பூனையால் இருட் டிலும் பார்க்க முடியும். ஆனால் அரிமாநேத்ரனுக்கோ 380 நனோமீற்றருக்கும் 740 நனோ மீற்றருக்கும் இடைப்பட்ட வெளிச்சத்தையே பார்க்க முடிந்தது. ஒளியின் நுண்ணிய பகுதியான வெளிச்சமே அரிமா நேத்ரனுக்குப் புலப்பட்டது. வெளிச்சத்தைத் தாண்டி ஒளியையும் பூனையால் பார்க்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org